AR
565

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
மற்றும் ஆய்வு மையப் பருவ இதழ்
தொகுதி – 39.

BULLETIN OF THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY AND RESEARCH CENTRE

VOLUME – 39.

General Editors

Dr.S.Vasanthi, M.A., M.Phil., Ph.D.,
Commissioner (iicharge))
Department of Archaeology,
Egmore, Chennai-600 008.

R. Chandramohan, M.A., MLIS., M Phil.,
Curator (i/c)
Government Oriental Manuscripts Library
And Research Centre,
Chennai-600 005.

2014

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையப் பருவ இதழ்

தொகுதி – 39.

BULLETIN OF THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY AND RESEARCH CENTRE

VOLUME – 39.

பொதுப்பதிப்பாசிரியர்கள்

முனைவர் சீ. வசந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,

ஆணையர் (பொறுப்பு)

தொல்லியல் துறை,

எழும்பூர், சென்னை-600 008.

இர.சந்திரமோகன், எம்.ஏ., எம்எல்ஐஎஸ், எம்.ஃபில்.,

காப்பாட்சியர் (பொறுப்பு)

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள்

மற்றும் ஆய்வு மையம்,

சென்னை-600 005.

திருவள்ளுவர் ஆண்டு 2044

(C) GOML & RC.

விலை : ரூ. 52/-

பொருளடக்கம்

வ. எண்	பொருள்	பக்கம்
1	அணிந்துரை	1
2	சனிபெண்ணெய்ப் பாடல்	5
3	திவான்பஹதூர் பவானந்தம் பிள்ளை அவர்களின் நாற்பது வருட சேவை	9
4	திரிபுர சுந்தரி துதி	31
5	குத்தகைச் சீட்டு	39
6	ஓலைச்சுவடிகளில் எழுதுவதற்குப் பின்பற்றிய தொழில்நுட்பங்கள்	53
7	பண்டைக்கால எகிப்தியரின் பேபிரஸ் சுவடிகள்	67
8	கிரகண தத்துவ விளக்கம்	81
9	சூரத்துன்னடா	96
10	பிற்சேர்க்கை 1) தொல்லியல் துறை இயக்குநர்கள் (ம) ஆணையர்கள் பட்டியல் 2) சுவடி நூலக காப்பாட்சியர்கள் பட்டியல்	120

முனைவர் சீ. வசந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
ஆணையர் (பொறுப்பு)

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்
archcommissioner@gmail.com
Email ID: tnarch@tn.nic.in
எழும்பூர், சென்னை-600 008.

அணிந்துரை

உலகளவில் சுவடி நூலகங்கள் பல இருப்பினும் **“சுவடி நூலகம்”** என்றவுடன் முதலில் நினைவுக்கு வருவது தொல்லியல் துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம் மற்றும் ஆய்வு மையமாகும். இந்நூலகம் சிறப்புமிக்க வரலாற்று பெருமை கொண்டதாகும். ஏனெனில் இந்தியாவின் முதல் சர்வேயர் செனரலான ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த காலின் மெக்கன்சி (1754-1821), முனைவர் லேடன், இந்தியாவில் பிறந்த ஆங்கிலேயரான சி. பி. பிரௌன் (1798-1884) ஆகியோர் தொகுத்து வைத்த ஓலை மற்றும் தாட்சுவடிகளே அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம் மற்றும் ஆய்வு மையத்தின் தோற்றத்திற்குக் காரணமாகும். இவர்கள் சேகரித்த சுவடிகளில் இலக்கியம், வரலாறு, தத்துவம், அறிவியல், கைபீதுகள் எனப்படும் வட்டார வரலாறுகள், கல்வெட்டுகள் முதலிய பொருட்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி, உருது, அரபு, பாரசீகம் முதலிய மொழிகளில் உள்ளன. இச்சுவடிகள் தற்போதைய தமிழகம் மற்றும் ஆந்திரத்தின் பல்வேறு பகுதிகளின் வரலாறு மற்றும் பண்பாட்டுச் சிறப்புகளைக் கொண்டுள்ளன. மேற்காணும் மூவர் தொகுப்புகளுடன் கிழக்கிந்தியக் கம்பெனியின் சுவடித் தொகுப்புகளும்

இணைக்கப்பட்டு 1869 இல் சென்னை மாநிலக் கல்லூரியில் இந்நூலகம் இயங்கியது. இங்குள்ள சுவடிகளின் முக்கியத்துவம் கருதி அவற்றுக்கு விரிவு அட்டவணை தயாரித்து வழங்க அப்போது மாநிலக் கல்லூரியில் வடமொழிப் பேராசிரியராக இருந்த பிக்போர்டு கேட்டுக் கொள்ளப்பட்டார். அவரது முயற்சியால் கி.பி. 1876 இல் மேலும் பல புதிய சுவடிகள் அவரால் சேகரிக்கப்பட்டன.

பேராசிரியர் பிக்போர்டுக்கு பின் இந்நூலகத்தின் தலைமைப் பொறுப்புக்கு வந்த அனைத்து காப்பாட்சியர்களின் அயராத உழைப்பின் காரணமாக பன்மொழிகளிலும் எண்ணற்ற சுவடிகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்டு இருப்பில் சேர்க்கப்பட்டு வருகிறது. 1956 ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்டபோது தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாள மொழிச் சுவடிகள் சுமார் 7,000 ஆந்திரா, கர்நாடகம் மற்றும் கேரளா மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வாய்வு மையம் மீதமுள்ள 72,314 சுவடிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

பண்டைத் தமிழர்கள் தமது எண்ணங்கள், கருத்துகள், பழக்கவழக்கங்கள், கலைநுட்பங்கள், இலக்கிய உணர்வுகளை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் செய்யுள் நடையில் தமது வசிப்பிடத்தில் எளிதில் கிடைத்த எழுதப்படு பொருளான பனையோலையைத் தேர்ந்தெடுத்து எழுதி வைத்தனர். இச் சுவடிகளை அழிவிலிருந்து காத்து, அச்சு நூல் வடிவில் வெளிக் கொணர்ந்து பழந்தமிழரின் பெருமைகளை உலகறியச்

செய்ய தமிழ் தாத்தா உ.வே.சா போன்ற தமிழ் அறிஞர்கள் அரும்பாடுபட்டனர். தொடக்கம் செய்து வைத்தார்கள். இருப்பினும் அச்சு நூற்களைப் படித்துப் பழகிய தற்கால தமிழர்களுக்கு ஓலைச் சுவடியைப் படிப்பது என்பது கடினமான பணியாக இருந்தமையால் ஓலைச் சுவடி தொடர்பான அறிவை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் **சுவடியியல்** ஒரு தனித் துறையாக உருப்பெற்றது. தமிழகத்திலுள்ள அரசுத் துறைகளும், சுவடி நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும், தனியாரும் சுவடியியல் பணிகளை ஆர்வமுடன் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் சுவடி பதிப்பு பணி குறிப்பிட்ட வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

சுவடி திரட்டுதல் மற்றும் ஆய்வாளர்களுக்கு பார்வைக்கு வழங்கும் பணிகளுடன் 1948 ஆம் ஆண்டு முதல் ஆய்வாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் படித்து பயன்பெறும் வகையில் அரிய சுவடிகளை – சிறிய சுவடிகள் முதல் பெரிய சுவடிகள் வரை - இம்மையம் பருவ இதழின் ஒரு பகுதியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பகுதியிலோ பதிப்பித்து வெளியிட்டு வருகிறது. இதுவரை 38 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளது. தற்போதைய இத்தொகுதி 39 ஆவதாகும்.

பல்வேறு இடையூறுகள் நிறைந்த பதிப்புப் பணியில் முனைப்புடன் ஈடுபட்டு சனியெண்ணெய் பாடல், திவான்பஹதூர் பவானந்தம் பிள்ளை அவர்களின் நாற்பது வருட சேவை, திரிபுர சுந்தரி துதி, குத்தகைச் சீட்டு, கிரகண தத்துவ

விளக்கம், ஓலைச் சுவடிகளில் எழுதுவதற்குப் பின்பற்றிய தொழில் நுட்பங்கள், பண்டைக்கால எகிப்தியரின் பேபிரஸ் சுவடிகள் மற்றும் உருது மொழி என ஒன்பது சிறு சுவடிகளைப் பதிப்பித்து இப்பருவ இதழுக்கு வழங்கிய அனைத்து புலவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பருவ இதழினை சிறப்பாக வெளியிட பன்முகமாக பணி புரிந்த அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம் மற்றும் ஆய்வு மைய நூலகர் மற்றும் காப்பாட்சியர் (பொ) திரு. இர. சந்திரமோகன் அவர்களுக்கும், இப்பருவ இதழைச் செம்மையாக அச்சிட்டு வழங்கிய மத்திய கூட்டுறவு அச்சகத்தாருக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடம் : சென்னை
நாள் : 30.01.2014

(சீ. வசந்தி)

சனியெண்ணெய்ப் பாடல்

முன்னுரை

சனி எண்ணெய்ப் பாடல் என்ற இந்நூல், அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் 'R' எண் 2883 என்ற எண்ணில் ஓலைச் சுவடி வடிவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்நூலில் எட்டு நாளைக்கு ஒரு முறை சனி எண்ணெய்யும் சுக்ல பட்சம், கிருஷ்ண பட்சத்திற்கு ஒருமுறை படி அரிசி, தாம்பூலமும் கொடுப்பது பற்றி கூறப்பட்டுள்ளது.

இவை மகாமகோபத்தியாய தட்சிணாத்ய கலாநிதி தமிழ் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தன்னுடைய 'என் சரித்திரம்' என்ற நூலில், அவர் கல்வி கற்கும் நாளில் உபாத்தியாருக்கு மாதம் ¼ ரூபாய் சம்பளமும், நெல்லும் கொடுப்பர் என்றும், நவராத்திரி காலங்களிலும் கோயில் உற்சவம் காலங்களிலும், அமாவாசை பௌர்ணமி காலங்களிலும், புதிய நூற்களை மாணவர்கள் கற்கும் போதும் "காப்பரிசி" கொடுப்பர் என்றும் கூறுகிறார்.

மேலும் ஸ்ரீஜெயந்தி, சிவராத்திரி காலங்களில் மாணவர்கள் சேர்ந்து பாடி, வீடுதோறும் எண்ணெய் தண்டி, இரவில் கண் விழித்து கதை சொல்லும் வழக்கம் பற்றியும் கூறப்பட்டுள்ளதும் இவண் ஒப்பு நோக்கத்தக்கது.

இதுபோன்ற பல அரிய ஓலைச்சுவடிகள் இந்நூலகத்தில் உள்ளது.

ச. தியாகராசன், எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ.(வரலாறு), பி.எல்.,
தமிழ்ப்புலவர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (ம)
ஆய்வு மையம், சென்னை-5.

சனியெண்ணெய்ப் பாடல்

1. முந்திமுந்தி விநாயகனே முக்கண்ணனார் தன்மகனே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே முன்நடவாய்

2. வேலவற்கு முன்பிறந்த விநாயகனே முன்நடவாய்
ஆடும் மயிலேறி வரும்அறுமுகனே முன்நடவாய்

3. சனிஎண்ணெய்ப் பாடல்தனைத் தப்பாமல் நாங்கள்சொல்ல
கனியமுது கொண்டருளுங் கணபதியே முன்நடவாய்

4. பிழைகளொன்றும் வாராமல் பிள்ளையாரே முன்நடவாய்
தேவாதி தேவன் திருவருளே பெற்றிடுவீர்

5. இரங்கர் திருவருளால் உங்கள்குலம் வாழ்ந்திருப்பீர்
செங்கமல நாயகியாள் சீர்பாதம் பெற்றிடுவீர்

6. மண்ணும் விளங்க மழையுமாகி தான்பொழிய
எண்ணும் விளங்க எல்லோருந் தான்வாழ்க

7. உலகந் தழைக்க ஊருமிக வாழ்க
நாடுஞ்செழிக்க நல்லசம்பா தான் விளைய

8. தேசஞ்செழிக்க தேனும் பாலும் பொழிய
சொக்கர் திருவருளால் சுற்றமெல்லாம் வாழ்ந்திருப்பீர்

9. மீனாட்சி யம்மன் யருளச்செல்வ முண்டாவீர்
காமாட்சி யம்மன் கனகபதம் பெற்றிடுவர்

10. சிவகாமி யம்மன் சீர்பாதம் பெற்றிடுவீர்
அங்கயற் கண்ணி யருள்பாதம் பெற்றிடுவீர்

11. சிதம்பர நாதர் சீர்பாதம் பெற்றிடுவீர்
வேங்கடவர் கிறங்கச் செல்வ முண்டாவீர்

12. தொப்பைக் கணபதியைத் தோத்தரித்து யாம்பாட
வெள்ளிக் கிழமையிலே வேண்டியது யாம்படைப்போம்

13. சனியெண்ணெய்க் கென்றுவந்தோந் தாயே சலியாதே
முத்துக்குமார ரெல்லாம் முற்றத்தில் வந்துநிற்க

14. பவழக்குமர ரெல்லாம் பந்தலிலே வந்துநிற்க
அருமைக்குமர ரெல்லாம் அண்டையிலே வந்துநிற்க

15. செல்வக் குமரரெல்லாஞ் சேரவே வந்துநிற்க
பிள்ளைக் கலிதீர்த்த பெருமாளும் வந்துநிற்க

16. வாசிக்கும் பிள்ளைகள் தம்வாசலிலே வந்துநிற்க
எட்டுநாளைக் கொருகால் எங்கள் சனியெண்ணெய்

17. பட்சத்துக் கொருகால் படியரிசி தாம்பூலம்
சனியெண்ணெய் வாவரிசி சட்டபடி யோலை

18. படியெரு முட்டை யென்றுபடிப்புக் கானதிட்டம்
சோழனிட்ட கட்டளைக்கு சொற்குற்றம் வாராமல்

19. முன்னாலே யுங்கள் பெரியோர்கள் நடந்தவண்ணம்
இன்னாளு மப்படியே எங்களைய திட்டமிட்டார்

20. வெள்ளிக்கரண்டி கொண்டு வெங்கலத்தால் கிண்ணிகொண்டு
எண்ணெய்தனை வார்த்தனுப்பு எங்களுடைய மாதாவே

21. சம்பளத்தில் கூடசேர்த்துத் தருகிறோ மென்னாதீர்
வாரசனிக் கெண்ணெய் வார்க்கிறோ மென்னாதீர்

22. எழுந்திருக்கப் பால்மாறி இல்லையென்று சொல்லாதீர்
பிள்ளை யழுகுதென்று பின்னைவா வென்னாதீர்

23. சாதம் சமையுதென்று சண்டைக்கு வாராதீர்
பாலு கொதிக்குதென்று பக்குவங்கள் சொல்லாதீர்

24. உலையிலரிசி வேகுதென்று உதாசனங்கள் சொல்லாதீர்
கண்டவுடனே நீங்க கூவுதான் போடாதீர்

25. தள்ளிக் கதவடைத்து தாட்பாளை போடாதீர்
வீட்டிலே யெண்ணெய் இல்லா திருந்தாலும்

26. கேட்டுக் கடன்வாங்கி கிளிமொழியீர் வார்த்தனுப்பும்
கொண்டு வந்தவெண்ணெய் குறையாமல் வார்த்தனுப்பும்

27. உச்சிக்கரண்டியால் ஒருகரண்டிவாராமல்
ஆலக்கரண்டியால் அன்பாகவார்த்தனுப்பும்
வெள்ளிக்கரண்டி கொண்டுவிளக் கெண்ணெய்
வார்த்தனுப்பும்

// முற்றும் //

திவான்பஹதூர் பவானந்தம் பிள்ளை அவர்களின் நாற்பது வருட சேவை

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று" — குறள்

உலகின் மனித கோடிகளுக்கு இதந்தரும் சேவை செய்வதில் திவான்பஹதூர் ச. பவானந்தம் பிள்ளை அவர்கள் இயற்கையாகவே மனந்திரும்பியிருந்தது எல்லார்க்கும் தெரியும். இவர் தமது வாழ்க்கையாரம்பத்தில் பற்பல வர்த்தமான பத்திரங்களுக்கும், திவ்வியாலோசனைகளடங்கிய விஷய தானஞ் செய்தார்; சர்வ மத ஜனசங்க நீதி சாஸ்திரத்தை எப்போதும் வாசித்தார்; இராஜ நீதி சாஸ்திரத்தையும் எப்போதுங் கைவிட்டதில்லை. பொது ஜன நோக்கமுள்ள வர்த்தமானப் பத்திரங்களுக்கு இவர் செய்த விஷய தானங்கள், அப்போதைக்கப்போது தோன்றும் சில்லரை எண்ணங்களாலான நிலையற்ற விஷயங்களல்ல. அழியா மதிப்புள்ளவைகள். நியாயவாதத் தொழிலை முன்னிட்டு இவர் இங்கிலாந்திற்குப் போக இருந்த போது, இவருடைய வைதீக மதப்பற்றுள்ள மாதா குறுக்கே நின்றார்கள்.

நகரகாவற்படை (Police)யின் திறத்தையும், நீதி நடையின் உறத்தையும் வளர்க்கக் கருதின கர்னல் டி.வெல்டன் ஸி.ஐ.இ யென்னும் புகழ் பெற்ற (Police) அதிகாரத் தலைவர் (Commissioner) வாசித்த வாலிபர்களைப் புதுமுறையாய்ச் சேர்த்துக் கொள்வதற்கு, முதல் முதல் போட்டி பரிட்சை ஒன்று ஏற்படுத்தினார்கள். அதில் பவானந்தம் பிள்ளை முதன்மை பெற்றார். பிள்ளையவர்களின் விடைப் பத்திரங்களைக் (Answer papers) கண்டு வியந்த கர்னல் வெல்டன் துரையவர்கள்

நகரக் காவற்படை விசாரணை வகுப்புகளில் ஒன்றாக அப்போது தான், தாம் புதிதாக அமைத்துக் கொண்டிருந்த குற்றவர்த்தமான விசாரணை வகுப்பு (Criminal Intelligence Department)க்குரிய நேர்முகக் காரியத்தர் (Personal Officer) ஆகப் பிள்ளை அவர்களை நியமித்தார்கள்.

இவர் நகரத்திலும் இருந்தார்; வெளிநாடுகளிலும் இருந்தார். இவரையே ஆங்காங்கு கலக்கக் காரணமான முக்கிய இடங்களுக்குத் தேர்ந்தெடுத்து நியமித்தனுப்பினார்கள். இவர் சென்று, எதிர்பாராமல் நெடுந்தூரம் பரவின பெருங் குற்றங்களையும், தீரா நிலையில் இருந்த குழப்பங்களையும் தடுத்து ஒழுங்காக்கினார். "இவருடைய காரிய நிருவாக சக்தி உயர்தரமானது. ஆகையால் நாகையிலும், நாகூரிலும், சீரங்கத்திலும் இவர் அற்புதம் விளைத்தார்" என்று ஐரோப்பிய மேற்பார்வைக் காரியத்தர்கள் (European Inspecting Officers) புத்தகத்திற் குறித்தார்கள். "தாம் ஏற்றுக் கொண்ட கஷ்ட சாத்தியமான காரியத்தை அற்புதமாய் நிருவகித்தார்" என்று ஐரோப்பிய ஜில்லா நீதிபதிகளும், மற்றெல்லா நியாயாதிபதிகளும் (European District and Divisional Magistrates) புத்தகத்திற் பதிந்தார்கள்.

கொலை, கொள்ளை, தப்புக் கையெழுத்து, மோசம் முதலிய மற்றுமுள்ள நுட்ப விசாரணைக்குள்ளடங்கிய அரும் பெரும் சிக்குமுக்கலான அநேக குற்றங்களை இவர் கண்டு பிடித்தார். அவைகளிற் சிலவற்றை விசாரித்த நியாயாதிபதிகள் "அரும் பெருந்திறமையாய்" அவைகளை இவர் நிருவகித்தார் என்று குறித்தார்கள். நாகைக் கலக வியாச்சிய நடவடிக்கை முழுவதிலும் இவர் காட்டிய வல்லமை, வாய்மை, உறுதி, பொறுமை, நடுநிலைமை முதலிய அருங்குணங்களை மனப்பூர்வமாய்த் தெரிந்து வெளியிட்டார்கள். "இவர் காரியங்களை நடத்தின வழியிலும், தாம் மேற்கொண்ட வேலையின் ஏற்பாட்டிலும் ஆரறிவும் பேராற்றலும், அசையா

முயற்சியும் முழுவதுமாக நிலைத்து நின்றன. நாகைத் தப்புக் கையெழுத்து வியாச்சியத்திற் சம்பந்தப்பட்டவர்களைச் சேர்ந்தவர்கள், இவருடைய வழியில் எத்தனையோ இடையூறுகளை உண்டாக்கினபோது மேற்குறித்த அருங்குணங்கள் எல்லாம் இவரிடத்தில் இன்னும் அதிக உறுதியாய் நிலைத்து நின்றன" என்று கொண்டாடினார்கள்.

"மனந்தடுமாறேல்"

"நேர்படவொழுகு"

"நேர்மையே சிறந்த நிருவாக சாதுரியம்"

என்பன இவருடைய கோட்பாடுகள். "ஊழிபெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு ஆழியெனப்படுவார்" என்னுந் திருக்குறள் நீதியும் இங்கே பொருந்துவது காண்க.

1910, டிசம்பர் 16ல், நகரக் காவற்படை (Police) அதிகாரத் தலைவ (Commissioner) ராயிருந்தவர்க்கு இராஜ ரீகப் பிராது நடத்துவோர் (brown prosecutor) ஆகிய ஜான் ஆதம் துரை எம்.ஏ. பார் அட்லா என்பவர் தாமாகவே பின்வருமாறு எழுதினார்.

"நான் உள்ளபடியே சொல்லுகிறேன். உமது புத்தகத்தில் இதை நீர் முறைப்படி பதிய விரும்புகிறேன். சென்னையில் இப்போது கூடின நீதி நிருவாக (Session) சபையில் நடந்து சாதாரணமாய் "அக்கினி அபயச் சங்கத்து மோச வழக்கு" (The Fire Insurance Fraud Case) என்று எல்லார்க்குந் தெரிந்த ரெக்ஸ் வியெஸ் ஸ்பால்டிங்கு வழக்கில் இராவ் பஹதூர் பவானந்தம் பிள்ளை எனக்குச் செய்த உதவியைப் பாராட்டுகிறேன். இப்படிப் பவானந்தர் உதவியை நான் நன்கு மதிக்க வல்லவனாயிருந்திருக்கும் சந்தர்ப்பம் இது ஒன்றேயல்ல. இப்போது தான் நடந்து சாதாரணமாய் பர்மா பாங்க் வழக்கு என்று எல்லார்க்குந் தெரிந்த ரெக்ஸ் வியெஸ் ஜாய்ஸ் வழக்கை, நான் சிறப்பாய் எடுத்துச் சொல்வேன். இந்த இரண்டு

வழக்கும் சிக்குமுக்கலானவைகள். ஆயினும் பவானந்தர் அவைகளை அற்புதமாய் நடத்தி இராஜதானி பிரதான நியாயதிபதி (The Chief Presidency Magistrate)க்குச் சமர்ப்பித்தார். அவர் நீதி நிருவாக சபைக்கு (Sessions) ஒப்புவித்தார்.

அங்கே அவைகள் வந்த போது நிர்தோஷமாய் புத்தகம் புத்தகமாய் எழுதியிருந்த வாக்கு மூலத்திலும், மற்றைத் (தஸ்தாவேஜூம்) பத்திரங்களிலும் யாதொரு குற்றங்குறையுமின்றி விளங்கின. இவ்விரு வழக்குகளிலும் பவானந்தர்க்கிருந்த விவரண ஞானமும், இவைகளில் ஒவ்வொன்றும் நியாய சபையேறி உருவான போது, ஒவ்வொரு நுட்ப விஷயத்திலும் அவர்க்கிருந்த அக்கரையான சிந்தையும் எனக்கும், என் கீழ்க் காரியத்தர்களுக்கும் பெரும் பிரயோசனமாய் இருந்தன".

வெளிநாடுகளில் இவர் உத்தியோகஞ் செய்து கொண்டிருந்தபொழுது ஊர்க் கோலங்கள், இராஜாங்கக் காரியங்கள் பெரு விருந்துகள், கும்பகோணத்து மாமக உற்சவம், சீரங்கத்து வைகுண்ட ஏகாதசிப் பெருந்திருவிழா, நாகூர்க் கந்தூரிப் பெருந்திருநாள், தஞ்சைத் துருக்கக் கிராமந்திரப் பள்ளி வாசல்களைக் கடந்து செல்லும் சுதேசிகளுடைய மத சம்பந்தமான கோலங்கள், முதலிய எல்லாத் தருணங்களிலும் நகரக் காவற்படையை (Police) அணிவகுத்து நிறுத்துதல், காவலு (பந்தோபஸ்து)க்கு ஒழுங்குபடுத்தல் முதலிய அதிகாரங்களை இவர் வசத்திலேயே நம்பிவிட்டிருந்தார்கள். அதற்குத் தக்கபடியே இவரும் நடந்து கொண்டாராகையால், அக்காலங்களில் வந்திருந்த கனவான்களில் இவரை மெச்சாதார் இல்லை. வர்த்தமானப் பத்திரங்களில் இவரைப் புகழாதது இல்லை. வெகு ஜனங்களில் இவரை வியவாதார் இல்லை. துரைத்தனத்தாரும் இவருக்கு வந்தனம் அளிக்காமல் விட்டதில்லை.

1904 முதல் 1912 வரையில் இவர் சென்னை நகர்க் குற்ற வர்த்தமான விசாரணை வகுப்புத் தலைவராய் (Criminal Intelligence Department) "துரைத்தனத்துக்கு திவ்வியமான சேவை செய்தார். வரிசையான இராஜ துரோக வழக்குகளை முழுவதும் இவர் நிருவாகத்தில் விசேஷமாய் விட்டிருந்தார்கள். அப்போது அவைகள் ஆரம்பித்து எங்கும் கலக்கமாய் இருந்தது. இந்த அபூர்வமான பொறுப்பை இவர் அபூர்வமான காரிய சித்தியோடு தாங்கினார். அந்த வழக்கு வரிசை முழுவதும் குற்றத் தீர்ப்பில் முடிந்தது. இவருடைய சிறந்த இராஜாங்க சேவைகள்-இவருடைய மேலதிகாரிகளும் தொடர்ச்சியான தேசாதிபதிகளும் (Governors) இடைவிடாமல் மெச்சுதற்கிடமாயிருந்தன.

இராஜரீக மேன்மை பொருந்திய வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது (1906 ஜனவரி 24 முதல் 28 வரையில்) பவானந்தருக்குத் தாம் குற்ற வர்த்தமான விசாரணை வகுப்புத் (Criminal Intelligence Department) தலைவராக இயற்கையாகவே நிருவகிக்க வேண்டிய உத்திரவாதமுள்ள காரியாதிகாரக் கடமைகளோடு இளவரசருடைய மெய்க்காப்பாகிய பெருங்கடமையும் ஏற்பட்டது. இதற்கு இளவரசத் தம்பதிகளிருவரும் இங்கு தங்கியிருந்த காலத்தில் இரவும் பகலும் எல்லாக் காரியங்களிலும் இவருடைய இளையா விழிப்பும் சளையாக் காவலும் இன்றியமைதனவாயிருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் இவர் இயற்றிய இந்தச் சிறந்தக் கைங்கரியத்துக் (சேவைக்) கடையாளமாக இளவரசர் புகழ்ந்து கொண்டாடி தமது திருக்கரத்தாலேயே விசேட விருது முத்திரை (A Special Medal) ஒன்றை இவர்க் கணிந்து அலங்கரிக்கச் சித்தமுவந்தார். நகரக் காவற்படை அணி வகுப்பின் மொத்த ஏற்பாடுகளைக் குறித்து "காரியம் கஷ்டமானது, ஆனால் அற்புதமாய் நிறைவேறியது" என்று இளவரசர் பிறகு தெரிவித்தார்.

தஞ்சை ஜில்லாவை லார்டு கர்ஸனும், ஸர் ஆர்தர் ஹாவலாக்கும், லார்டு ஆம்ப் தில்லும் போய்ப் பார்வையிட்ட போது, பவானந்தரை அவருடைய மற்றக் கடமைகளோடு தஞ்சையிலும், நாகையிலும், நாகூரிலும் நடந்த இராஜப் பிரதிநிதிக் கோலத்துக்கும், தேசாதிகாரிகள் கோலங்களுக்கும், முன்னேறிச் சாரி செல்லும் முதன்மைத் தொழிலிலும் செலுத்தினார்கள். சென்னையில் லார்ட் மிண்டோவும், லார்ட் ஹார்டிஞ்சும் தங்கியிருந்த போது குற்ற வர்த்தமான விசாரணை வகுப்புத் தலைவராகையால், இராஜப் பிரதிநிதியின் மெய்க்காப்பாளரென்னும் மேன்மைத் தொழிலை மேற்கொண்டார். இந்தச் சந்தர்ப்பங்களில் இவருடைய மேன்மைக் கைங்கரியங் (சேவை)களை, இவருடைய மேலதிகாரிகளும் பிறரும் மெச்சினார்கள்.

1918ல் இவர் சென்னைத் தெனாதுபாரிச நகர்க் காவற் படையதிகாரத் தலைமைப் பிரதிநிதி (The Deputy Commission of Police Southern Range)யாய் இருந்தார். அப்போது சென்னை நகரில் மகமாரியும் மற்றைத் தொத்து நோய்களும், வேலை நிறுத்தங்களும் காவலடைப்புகளும் குடும்பக் கஷ்டங்களும் குழப்பக்கலகங்களும் குடி கொண்டிருந்தன. பவானந்தர் வேலையைத் துரைத்தனத்தார் மிகவும் உச்சிதமாய் உணர்ந்து கொண்டதாகத் தெரிவித்தார்கள்".

வெளியதிகாரத்தோடு உள்ளதிகாரக் காரியத்தராம் இவருடைய அபூர்வமான உத்திரவாதங்களும் அபரிதமான வேலைகளும் மகாயுத்த (The great war) காலத்தில் மகத்தாயப் பெருகின. இவர் செய்து கொண்டிருந்த பரமரகசியமான உத்திரவாத வேலைக்கும், மேற்கொண்டிருந்த பொறுப்பின் நிலைமைக்கும், இவருடைய இடையறா விழிப்பும், கவலையும், காவலும் இன்றியமையாதனவாயின. அன்றியும் இவரே சரியானவரென்று துரைத்தனத்தார் இவரிடத்தில் பெரு நம்பிக்கை வைப்பதும் அவசியமாயிற்று. இந்த மகத்தான கடமைகளை

பேராற்றலோடும், சிறந்த இராஜ விசுவாசத்தோடும் இவர் நிறைவேற்றினார். முப்பத்தைந்தாண்டுக்கும் அதிகமாக நீடித்த காலம் இவர் செய்த உத்தம சேவைகளைத் துரைத்தனத்தார் தமது தொடர்ச்சியான அரசாட்சி அறிக்கையிலும், (Administration Reports) வர்த்தமானப் பத்திரங்களிலும் அடிக்கடி புகழ்ந்திருக்கிறார்கள்.

உத்தியோகக் கடமையை விசுவாசத்தோடு நிறைவேற்றியதற்கப்பாலும், இவர் வெகுஜன ஜனோபகார மேன்மையான வேலையும் செய்திருக்கிறார். கீழ் நாட்டுக் கல்வி (தமிழ் முதலிய தாய்மொழிக் கல்வி) விருத்தியில் மேலான சேவைகள் செய்திருக்கிறார். வர்த்தமானப் பத்திரங்கள் இவரை "பரோபகாரமுள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்" என்று வருணித்திருக்கின்றன. இவர் **<u>'பவானந்தர் கல்விக் கழகம் (Bhavanandar Academy)'</u>** ஒன்று கண்டு அதற்கு மிகுதியாகவும், தகுதியாகவும் மூலதனம் விநியோகம் செய்திருக்கிறார். ஆராய்ச்சி வேலையும் வெகுஜன சேவைக்கனுகூலமான ஞானத்தையும், படிப்பையும், நீதி நெறியிலும், உடற் கூற்று வழியிலும், சர்வஜன சங்க மார்க்கத்திலும் ஜனங்களுக்குள் பரப்புவதுமே அதன் நோக்கமாகும். இவர் வெகுஜனப் புத்தகாலய வாசகசாலையொன்று தாபிக்க வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறார். புத்தகாலயத்தில் சுமார் நாற்பது வருடகாலமாய் இவர் சேர்த்து அரும்பெரும் சம்புடங்கள் (Volumes) அடங்கியிருக்கும் இலண்டன் மாநகரத்து இராஜ ரீக தேச சரித்திர சங்கத்தில் (Fellow of the Royal Historical Society) இவர் ஒரு அங்கத்தினர். இவர் கீழ்நாட்டுக் கிரந்தத் தொகுதியில் தகுதியான மூலக்கிரந்தப் பகுதியாராய்ச்சியிற் பிரவேசித்திருக்கிறார். இவர் சென்னை சர்வகலாசாலை திராவிட வாசக சங்கத்தக்கிராசனாதிபதி. சர்வகலாசாலை அதிகாரச் சபையார் நியமித்த திராவிட சொற்றொடராக்கச் சங்கத்தின்

(Member of the Royal Asiatic Society) அங்கத்தினராயிருந்திருக்கிறார். தென்னிந்திய ஆராய்ச்சிக் கூட்டத்தின் சபாநாயகப் பிரதிநிதியாயி (Vic President) ருந்திருக்கிறார். இவருடைய செந்தமிழ் நூல்களை சர்வகலாசாலை சோதனைகளுக்குகந்த சொற்றொடராக்க மாதிரிப் பாடங்களாக நியமித்திருக்கிறார்கள். இராஜ ரீக ஆசிய சங்கத்திலும் இவர் ஓர் அங்கத்தினர்.

இவர் சென்னை துரைத்தன வித்தியா விசாரணை வகுப்பைச் சேர்ந்த வாசகப் புத்தகச் சங்கத்திலும், சென்னை பாடசாலைப் புத்தக மூல கிரந்த சங்கத்திலும் சேர்ந்து உதவி செய்து வருகிறார். துரைத்தன செந்தமிழ் அகராதிச் சங்கத்தில் கௌரவக் கல்வி சம்பந்தக் கூட்டாளி. மதுரைத் தமிழ் சங்கத்தில் அங்கத்தினரும் கௌரவப் பரிசோதகருமாவார். சென்னைத் தமிழ்க் கல்விக் கழகத்தில் கௌரவ அங்கத்தினர். திருவள்ளுவர் ஞாபகச் சின்ன சங்கத்துச் சபாநாயகப் பிரதிநிதி. இங்கிலீஷ் சங்கத்துச் சென்னைக் கிளையின் அங்கத்தினர். கீழ் நாட்டுப் பாஷைகளைப் பொதுவாகவும், தென்னிந்திய பாஷைகளைச் சிறப்பாகவும் கற்பதற்காதாரமாகும் விசேஷ மாதிரிகளை அனுசரிப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகளை யோசிப்பதற்கும் செய்வதற்கும் சென்னை சர்வகலாசாலையார் நியமித்த காரிய நிருவாக சபையின் அங்கத்தினர். தமிழர் கல்விக் கூட்டத்தின் அதிகாரச் சங்கத்தின் அங்கத்தினர். பிரசுர சங்கத்தின் அங்கத்தினர்.

மூன்று உபசங்க சேவை செய்ததுமன்றி அவர் முடி சூட்டுத் தர்பார் கொண்டாட்டச் (Coronation Darbar Celebrations) சம்பந்தமான விநோத வேடிக்கை உபசங்கத் (The Pageant Sub-Committee) தாபகராயுமிருந்தார். எட்வர்டு ஞாபகச் சின்னக் காரியத்துரந்தரக் கூட்டத்திலும் தென்னிந்திய திடகாத்திராபி விருத்திச் சங்கத்திலும் (The South Indian Athletic Association) புரசை அன்னதான சமாஜத்திலும், பிரதானேஷ்டப்பிரயாச நாடகக்

கூட்டத்தைச் சார்ந்த சுகுண விலாச சபையின் நிருவாக சங்கத்திலும் அங்கத்தினராயிருந்திருக்கிறார். சென்னை சர்வஜன சங்க சேவைக் கூட்டத்திலும் (The Madras Social Service League) இவர் ஒரு அங்கத்தினராவார்.

இதுவரை வெளியாயுள்ள இவருடைய சட்ட நூல்களை, வர்த்தமானப் பத்திரங்களும் உயர்தரநீதி அதிகாரிகளும் அனுகூலமாகவே பார்வையிட்டு(கிரந்த விமரிசை செய்தி)ருக்கிறார்கள். 1889ல் மேற்பார்வை அதிகாரத்தலைவ (Inspector General) ராயிருந்தவர். "நான் பவானந்தம் பிள்ளையினுடைய சட்ட ஞானம் உயர்தரமானதென்று உறுதியாய்ச் சொல்வேன்" என்று துரைத்தனத்தாருக்கு எழுதினார்.

உண்மையில் இவர் ஓர் உயர்தர மந்தணச் (இரகசியம்) சங்கத்தில் மேலான பட்டங்கள் பெற்றிருக்கிறார். இவருடைய மந்தணச் சங்கச் சோதரர்கள் (Brother Massons) இவரை உன்னதமதிப்பில் நிறுத்துகிறார்கள்.

உண்மையில் இவர், ஓர் உத்தியோகத்தன் எந்தெந்தப் பொது ஜன முக்கிய காரியங்களிற் தலையிட்டுக் கொள்ளலாமோ, அவைகளிலெல்லாம் முதன்மை வகித்திருக்கிறார். இதனால் உடற்கூறு, ஞானம், நீதி, சர்வஜன சங்கச் சேமம் முதலானவைகளுக்கு மிகவும் நெருக்கமான விஷய ஞானங்களையும், படிப்பையும், ஜனங்களுக்குள் பரப்ப வேண்டுமென்பதே இவருடைய நோக்கமாகும்.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்", என்னும்

திருக்குறள் நீதி இவரிடத்திற் பிரதிபலித்திருப்பது காண்க.

போலீஸ் வேலையின் உயர்வு தாழ்வுகளை மதிப்பதற்கு ஏற்பட்ட பிரஜாசங்கிய வியாபார விவரப் பரிக்ஷை

(Statistical Test) யை நீக்கினதற்கு இவர் தாம் முக்கிய பொறுப்பாளி. குற்றங்களையும் குற்றவாளிகளையும் கண்டுபிடிப்பதற்கு ஆட்சேபனைக்கிடமான வழிகளில் பிரவேசிக்க வேண்டாமென்று, இவர், வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட தமது கீழ்த்தர உத்தியோகத்தர்களுக்கு அடிக்கடி கற்பிப்பது வழக்கம். அன்றியும் அவர்களுடைய விசாரணைகள் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்றும், சட்ட நீதிஸ்தானத்தில் அவர்கள் திட்டமாய் ஒப்புக் கொள்ள வெட்கப்படக்கூடியதையும் செயய வேண்டாமென்றும் வற்புறுத்திக் கூறுவார்.

குற்றவாளிகளைச் சீர்திருத்துவதிலேயே இவர் பிரவேசித்திருந்தார். இவர் செய்த அநேக சீர்திருத்தங்களில் பின்வருகிறது பிரீதியாயிருக்கும்.

1897ல் கும்பகோண மாமகத் திருவிழா ஏற்பாடுகள் இவர் வசத்திலிருந்தபோது, இவருக்குக் கீழ்த்தரக் காரியத்தர்கள், ஒரு ஏழைப் பையனைத் தண்டனைக்குள்ளாகும் குற்றம் செய்திருந்தானெனப் பிடித்துக் கொண்டார்கள். குற்றம் சுமந்த பையன் சீர்படக் கூடியவன். முன்னுக்கு வரத்தக்கவனாய் தோன்றினான். ஆகையால் பிள்ளையவர்கள் குற்றச்சாட்டை வற்புறுத்தாமல், அப்படிப்பட்டச் சிறுவர்களைச் சீர்திருத்த முயல வேண்டுமென்று தமது (கீழ்த்தரக் காரியத்தர்கள்) சிப்பந்திகளுக்குக் கற்பித்தார். ஆனால் அவர்கள் அந்தக் கற்பனையை விரும்பவில்லை. தமது சிப்பந்திகள் மறுத்திருந்தும், இவர் அந்தப் பையன் குற்றத்தைப் பொறுத்து அவனை எச்சரித்து விடுதலை செய்ததுமன்றி, அவனுக்கு ஊண், உடை, உதவி தமது சொந்தச் செலவில் அநேகம் ஆண்டுகள் அவன் பி.ஏ., பி.எல்., பட்டம் பெறுமட்டும் கல்வி பயிற்றிக் காத்தார். இப்போது அவன் பெரிய நிதித்தல நியாயவாதியாய் (A High Court Vakil) பொருளாதாரப் பயிற்சி செய்து சுகமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

இவர் சென்னை நகரத்தில் ஒரு உத்தியோகத்தரா யிருந்தும், வெளிநாடுகளிலும் பேர் போனவராயிருந்திருக்கிறார். சும்மா உத்தியோகத்தரென்று மட்டுமல்ல, வாசித்துணர்ந்தவர், கல்விக்குரிய தேர்ச்சி பெற்றவர், ஈவிரக்கமுள்ளவர், உலகப் பொது விவகாரப் பிரீதியுள்ளவரென்றும் எங்கும் தெரிந்திருக்கிறார். சென்னையில் இவர் தம் போன்ற அநேக உத்தியோகத்தர்களுக்கு, இவ்வளவு பொருந்திருயிருக்கிற தென்று சொல்லக் கூடாத அவ்வளவு வெகுஜனப் பிரீதியைப் பெற்றிருக்கிறார். இவருடைய வள்ளன்மையும், இரக்கமும், பிறருக்குதவி செய்யும் பேராற்றலும், ஆகிய நற்குணங்களெல்லாம் இவருடைய பெருந்தன்மையான செல்வாக்குக்கும், வெகுஜனபிரீதிக்குங்காரணமான இரகசியங்களாகும். இவர் நாற்பதாண்டுகளுக்கு மேலும் சேவை செய்திருக்கிறார். ஆனாலும் இளமையின் வன்மையும் உழைப்பின் பொறுப்பும் இன்னும் இவரை விட்டகலவில்லை. இவைகளை இவருடைய பற்பல செய்தொழிலின் மனஞ்சோராமையால் தெரிந்து கொள்ளலாம்.

இவர் தேசாதிபதிகள் (Governors of the Porovince) தமது கைப்பட எழுதுங் கடிதங்களை நேராகப் பெறும் அரும் பேரதிகாரத்தைப் பெற்றிருந்தார். இவர் பதினேழு நகரக் காவற்படையதிகாரத் தலைவர்களு (Commissioners)க்கும், பற்பல மேற்பார்வையதிகாரத் தலைவர்களு(Inspector General)க்கும், சட்டசபை அங்கத்தினர்களுக்கும், வரும் பொருளுரைக்கும் தேர்ச்சித் துணைவராய்(Advisor of Counsellor) இருந்திருக்கிறார். இவருடைய ஆழ்ந்த தூர தரிசனத்தையும் அகண்ட விழிப்பையும் அமைந்த அறிவையும், பொதுஜனப்பிரிய விஷயங்களெல்லாவற்றிலும், இவருடைய ஆலோசனையை நாடுகிறவர்கள், எப்போதும் உயர்வாக மதித்தார்கள். துரைத்தன சட்ட உத்தியோகஸ்தரர்களும் இவருடைய சதுராலோசனை (Expert Advice)யை நாடுவது வழக்கம்.

இவருக்குப் பகைவரேயில்லை. இவரை நெருக்கமாகத் தெரிந்தாரனைவரும் இவருடைய பக்தி மிகுந்த பரிசுத்தமான பிரமசரிய வாழ்க்கைக்கும் இனிய குணத்திற்கும் ஒரு பெரும் பொதுஜனோபகாரக் காரியத்திற்காகத் தமது இலட்சக் கணக்கான ஆஸ்தி முழுவதையும் மனமுவந்தெழுதி வைத்துள்ள விநியோகமாண்டுக்கும் இவரைச் சந்திக்குந்தோறும் வந்திருப்பது வழக்கம்.

இவருடைய ஞாபகச் சின்னங்களோடு வாணாட் சரித்திரச் சுருக்க வருணனையும் பிரசங்கங்களும் வியாசங்களும் விரைவில் வெளியாகும். அவைகள் பலவித இன்ப ரசமான ஒரு பெரும் சம்புடத்திற்கு வேண்டிய உபகரணங்கள் உதவியிருக்கின்றன.

ஓம்தத்சத்

☆☆☆☆☆☆

பவானந்த வெண்பா

காப்பு

1. தவானந்தத் தூயன் தமிழ்மணக்கும் வாயன்
பவானந்த நேயன் சீர்பாட — சிவானந்தன்
கார்முக மாதங்கத்தான் கங்கா தரனளித்த
கார்முக மாதங்கத்தான் காப்பு.

(பதவுரை)

தவம் ஆனந்தம் தூயன் = (பிரமசரிய) தவநிலையையே (பேர்) ஆனந்தமாக் கொண்ட பரிசுத்தன், தமிழ் மணக்கும் வாயன் = (இயல், இசை, நாடக மென்னும் மும்மைத்) தமிழ் மணம் வீசும் (மலர்) வாயையுடையவன், பவானந்தன் நேயன் சீர்பாட = (சரவண) பவானந்தனென்னும் இயற்பெயரையுடைய நண்பன் சிறப்பை (வெண்பாவாற்) பாடுதற்கு, சிவ ஆனந்தன் = (அடியவர்க்கு) இதஞ்செய்யும் பேரானந்த சொரூபியும், மாதங்கம் கார்முகத்தான் = சிறந்த பொன்மயமாகிய மேரு மலையை வில்லாக உடையவனும், கங்காதரன் = (கங்கையைத் தரித்தவனுமாகிய சிவபிரான்), அளித்த = பெற்றருளிய, கார்மாதங்கம் முகத்தான் = கரிய யானைமுகக் கடவுளாகிய மூத்தபிள்ளையார், காப்பு = காவலாவார்.

(விசேடவுரை)

வாழ்நாள் முழுவதும் பிரமசரியநிலை பிறழாது காத்த வைராக்கிய சீலர் என்பது தோன்ற, தவானந்தத் தூயன் என்றாம். இயல், இசை, நாடகம் என்னும் மும்மைத் தமிழையும், மூவாது வளர்த்த குறுமுனி போல, இந்நாளில் இப்பாட்டுடைத் தலைவரும், தமது உடல், பொருள், ஆவி

மூன்றையும் தமிழுக்கே தந்து அதைப் பெருக்கி மகிழ்கின்றானாகையால் தமிழ் மணக்கும் வாயன் என்றாம். சரவணபவானந்தன் எனற் பாலது குறுகும் வழிகுறுகி பவானந்தன் என நின்றது.

முதற் சங்கமிரீ இத்தலைமை வகித்து, தமிழ் வளர்த்த குமரவேள் திருநாமமாகிய சரவணபவானந்தன் என்பதை இவர் பெற்றோர் இவர்க்கிட்டழைத்தது இடுகுறிப் பெயரேயாயினும், பிறகு இவருங் கல்விக் கழகங்கண்டு அதற்குத் தலைமை வகிப்பார் என்பதை முன்னர் உணர்ந்தே, அவர்கள் அக்குன்றமெறிந்த குமரவேள் திருநாமத்தை இவருக்குக் காரணப் பெயராகச் சூட்டினார்கள் என்பது குறிப்பிற்கோடக் கிடக்கின்றது. இதம், மங்கலம், ஐசுவரியம் முதலிய பல பொருள் தருஉம் தனிமொழியாதலால் அடையின்றிச் சிவம் என்றாம். சிவன் + ஆனந்தன் எனப் பிரித்து மொழி மாற்றாக ஆனந்தசிவன் என்றாக்கி ஆனந்தமயனாஞ் சிவபிரான் எனக் கோடலும் ஒன்று. கார்முகமாதங்கத்தான் என்பவைகளிரண்டும் மொழிமாற்றுப் பொருள் கோளணியும், இயமகவணி யென்னும் மடக்கணியும் பெற்று விளங்குவதைக் காண்க. அம்புலிக்கொரு நட்டம் புரிந்தவர், அம்புலிக்கொரு நட்டம் புரிந்திலார் என்னும் இரட்டையர் மடக்கணியை இங்கே ஒப்பிட்டுணர்க. கார்முகம் என்பது வில்லைக் குறிக்கின்றமையைக் கம்பராமாயணக் கார் முகப் படலத்து கண்டுணர்க. கயிலை வெள்ளிமலையாயினது போல் மேரு பொன்மலையாயின்மையால் மாதுங்கக் கார்முகம் என்றாம். திரிபுரதகனகாலத்தில் திரு நெடுமால்பாணமாயினபடி இதுவும் வில்லாயிற்றென்பது இசையெச்சம் (புராண வரலாறு), நானென்றால் நஞ்சிருக்கும் நற்சாபங்கற்சாபம் பாணந்தான் மண் தின்றபாணமே என்னும் இரட்டையர் வாக்கும் காளமேகப்புலவர் வாக்கும் இங்குப் பொருந்துவது காண்க. பகிரதற்காகச் சிவபெருமான் தமது சடையிற் கங்கையைத் தரித்தமை சகப்பிரசித்தம். தவானந்தன், பவானந்தன்,

சிவானந்தன் என்பன வடமொழி தீர்க்க சந்திகள். பாட என்னும் வினையெச்சம் காப்பு என்பதிற் குறிப்பு வினை கொண்டு முடிந்தது. தூயன், நேயன் என்பன குணப்பெயர்கள், வாயன் சினைப்பெயர். இது விரிக்கும் வழி இன்னும் விரியுமாகையால் விரிவஞ்சி விடுத்தாம்.

(நூல்)

தேசமொடு மன்னற்குச் சேவைபுரி தக்கோரில்
நேசமொடு முன்வந்து நிற்பானே — பாசமுடன்
சின்னஞ் சிறுபோதே தெய்வபக்தியார் சிறந்த
மன்னன் பவானந்தன் வாய்ந்து 1

வணக்க முடையான்தன் வாயாரப் பாடும்
இணக்க முடையான் இறைவன் — துணைத்தாள்
பலன் கருதிப் போற்றான் பவானந்தன் முத்தி
நலன்கருதிப் போற்றுவான் நன்கு. 2

பெருமை கருதான் பெருமை பெறுதற்
கருமை யென்றும் அகற்றான் — பெருமை
கடமை வழியிற் சென்றாற் கைகூடு மென்னுந்
திடமார் பவானந்தன் தீர்ந்து. 3

ஈரிருப தாண்டாக எண்ணில் பல நூல்கள்
தேரு மனமுடையான் சீருடையான் — பேருடையான்
தன்கடமை யொன்றுந்த தவறான் பவான்ந்தன்
என்றறியார் இவ்வுலகில் யார். 4

மாந்தர்க் கிதமா மகத்தான காரியத்தைச்
சாந்தமுடன் செய்யும் தக்கோனென் — றேந்துபல
பத்திரத்திற் றீட்டும் பவானந்தன் வாய்மைகளே
சத்தியமாய்ச் சொல்லுமே சான்று 5

சர்வ மதஜன சங்கநீதிக் கலையும்
நிர்வாக ராஜாங்க நீதியும் — பர்வமறிந்
தோதி யுணர்ந்தான் உயர்ந்தான் பவானந்தன்
நீதி நெறியில் நிலைத்து. 6

பத்திரத்திற் றீட்டும் பாவனந்தன் வாய்மைகள்
சித்திரத்திற் றீட்டும் சிலவல்ல — பத்திரமாய்
என்று மழியாத் திருந்துமதிப் பேறியிங்குத்
துன்றும் உயர்பொருள்கள் சூழ்ந்து 7

நீதிவாதத் தொழிலை நேர்ந்து பவானந்தனந்நாள்
தீதிலிங்கி லாந்துக்குச் செல்லுங்கால் — ஆதரவாய்
வைதீகப் பற்றுள்ள மாதா வழிமறித்தார்
ஐதீக மல்லவென ஆய்ந்து 8

வெல்டன் துரைசெய்த வித்தகஞ்சேர் சோதனையில்
வெல்டன் எனஎவரும் மெச்சவே — வல்லமையாய்
நல்லவிடை தீட்டி நயந்து பவானந்தன்தான்
எல்லவர்க்கு மேலானான் இங்கு 9

உத்தரப் பத்திரத்தை உய்த்துணர்ந்த வெல்டனென்பார்
சித்த முவந்திவரைச் சீராய்த்தம் — வித்தகமாங்
குற்றவர்த்த மானந்தேர் கோதிலாக் காரியத்தில்
உற்றதுணை யாக்கொண்டார் ஓர்ந்து. 10

கலக்கந் தருடமிடத்தைக் கண்டு குழப்பத்தை
விலக்கப் பவானந்தன் மேவி — நலக்கத்
தடுத்தொழுங்கு செய்தான் தகுமென்று தன்னை
விடுத்தார் மதிக்க விரைந்து 11

நாகை நாகூரினும் நாரணன் சீரங்கத்தும்
ஊகையாய் காரியஞ்செய் தோங்கினான் — ஆகையால்
அற்புதஞ்செய் தான்பவானந்த னென்றார் ஐரோப்ப
விற்பனர்க ளெல்லாம் வியந்து. 12

அற்புதமாய்க் காரியநிர் வாகஞ்செய் தானென்றார்
சொற்பெரிய நீதித் துரந்தார்கள் — பொற்புடனே
தீட்டினாற் புத்தகத்தில் தீரன் பவானந்தற்
கீட்டினார் மால்புகழை இங்கு 13

கொலைகளவு கொள்ளை கொடுங்குற்ற மெல்லாம்
நிலைதவறா மற்பிடித்தான் நீதிக் — கலைதேர்
பவானந்தன் தன்திறத்தைப் பாராட்டினார்கள்
தவாத நீதித்தலைவர் தாம். 14

வாய்ந்ததிரு நாகை வழக்குநடக் கும்போது
ஏய்ந்த பொறுமை இயலுறுதி — ஆய்ந்தமெய்மை
என்னும் குணங்களெலாம் எய்திப் பவானந்தன்
தன்னைப் பொருந்தினவே தாம். 15

வேலையேற் பாட்டில் வினைநடத்து நன்னெறியில்
சாலப் பவானந்தன் தான்காட்டும் — சீலஞ்சேர்
உண்மை யறிவும் உழைப்பும் பேராற்றலும்
திண்மையாய் நின்ற திரண்டு 16

தண்டலைசூழ் தென்னாகைத் தப்புக்கை நாட்டிட்ட
சண்டவழக் காளிகள்பாற் சம்பந்தங் — கொண்டவர்கள்
ஆற்றுமிடை யூறுகளை அஞ்சான் பவானந்தன்
மாற்றுவனோ நன்னெறியின் மாண்பு. 17

நேரா யொழுகுவோன் நெஞ்சந் தடுமாறான்
நேரா யொழுகுவதே நிர்வாகச் — சீராகும்
என்றுரைப்ப தன்றி யியற்றியுங் காட்டுவான்
என்றும் பவானந்தன் இங்கு. 18

இடையூறு நிர்வாகத் தெய்திடினுந் தான்தன்
தடையூறா காண்பவா னந்தன் — தடையின்றி
ஊழி பெயரினுந்தாம் பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார். 19

ஆதம் துரையந்நாள் அன்பாய் பவானந்தன்
ஏதந்தீர் நிர்வாக ஏற்றத்தைப் — போதமுடன்
நன்றாய் வரைந்தார் நகரக்கா வற்படையின்
குன்றாத் தலைவர் தமக்கு 20

நெருப்பபயச் சங்கத்தில் நேர்ந்த வழக்கில்
விருப்பாய்ப் பவானந்தன் மேன்மைக் — கிருப்பாகச்
செய்யுதவி தன்னைச் சிறப்பிக்கின் றேனென்னாத
துய்யமனத் தாதம் துரை. 21

பர்மாவி லேயுள்ள பாங்க்வழக்கில் நேரிட்ட
கர்மாவை யெல்லாங் கருத்தாகத் — தர்மாதர்
மத்தை யுணர்ந்து வரைந்தான் பவானந்தன்
தத்துவத்தை ஆராய்ந்து தான். 22

இந்த இருவழக்கில் இத்தனை அக்கரையாய்த்
தொந்தமுடன் யார்நிற்பார் சொல்லுங்கால் — சந்ததமும்
நுட்பவிட யத்தும் நுடங்கான் பவானந்தன்
திட்ப முடனுதவி செய்து 23

இலகு சீர் ரங்கநகர் ஏகாதசியில்
குலவு கும்பை மாமகக் கூட்டத்தில் — கலகமின்றிக்
காவல் செய்வித்தான் கருத்தாய் பவானந்தன்
மாவல் லமையாய் வகுத்து. 24

பாகூருந் தீஞ்சொற் பசுவேய்த்தோண் மாதர்வாழ்
நாகூர்த் திருநாள் நடத்தினான் — மாகூர்
மதியு மனுபவமு மன்னுபவா னந்தன்
அதிக அமைதியாய் ஆய்ந்து 25

உற்சவங்கள் கண்டார் உவந்து பவானந்தனையே
உற்சகமாய்ப் புகழ்ந்தார் உண்மையுணர் — பொற்பார்
துரைத்தனத்தார் வந்தனங்கள் சொன்னார்கள் என்றும்
தரைத்தலையில் ஈதன்றோ சால்பு 26

கல்வியன்றி வேறு கருந்தன மில்லையென்று
கல்விக் கழகமொன்று கண்டானே — நல்வழியில்
தேடுந் திரவியத்தைத் தீரவதற் காதரவா
நாடும் பவானந்தன் நன்கு 27

புத்தம் புதிதாகப் புத்தகச் சாலையொன்று
சித்தம் உவந்து கண்டான் சீராக — இத்தனை நாள்
தான் சேர்த்த சம்புடங்கள் தம்மைப் பவானந்தக்
கோன்சேர்த்தான் ஆங்கதனிற் கொண்டு 28

எண்ணில் சுவையில் இலகுமக்கி ராசனனாய்
நண்ணி இருக்கின்றான் நண்புடையான் — கண்ணில்
மணிபோற் றமிழையென்னும் மாண்புடையான் கல்வி
அணிசேர் பவானந்தன் ஆய்ந்து 29

எத்தனையோ சங்கத்திவ னங்கம் வாய்த்துள்ளான்
எத்தனையோ நூல்கள் இயற்றினான் — எத்தனையோ
ஏட்டுச்சுவடிகளை ஏற்றினான் அச்சின் மேல்
ஈட்டும் பவானந்தன் இங்கு. 30

சட்ட நூல் செய்தான் சரியாய்த் தமிழோதுந்
திட்டநூல் செய்தான் திரளாகக் — கட்டமுணர்ந்
தெல்லாரும் வாழ்த்துகின்றார் என்றும் பவானந்தன்
பல்லாண்டு வாழப் பரிந்து 31

மந்தண சங்கத்து மாண்புள்ள சோதரர்கள்
வந்தனஞ் சொல்லு மதிப்போடு — பந்தமுடன்
எத்தனையோ பட்டங்கள் ஏற்றான் பவானந்தன்
அத்தனைக்குந் தக்கவனா யார்ந்து 32

உடற்கூறு ஞானம் உலகநன்மை நீதி
திடப்பட வேண்டுநெறி தேடிக் — கிடைக்கரிய
இன்பநிலை எல்லாரும் எய்தப் பவானந்தன்
நன்முயற்சி செய்வான் நயந்து 33

தன்கீழ் வினையாளர்த் தக்கவழியிற் செல்லத்
தன்னா லியன்றமதி தான்சொன்னான் — மன்னவையில்
நாணுந் தொழில்செய்ய நாடன்மின் என்றுரைத்தான்
மாணும் பவானந்தன் வாய்ந்து. 34

தன்கீழ் வினையாளர் தாமொரு பையனை
மன்னுங் குடந்தைநகர் மாமகத்தில் — பென்னம்
பெரியகுற்ற வாளியெனப் பேசிக் கொணர்ந்தார்
அரியபவா னந்தன்முன் அன்று 35

சின்னஞ் சிறுபையன் செய்தபிழை பொறுத்தான்
மன்னன் பவானந்த மாண்பாளன் — அன்னவற்குத்
தன்செலவிற் கல்விதந்து தக்கபடி காத்ததனால்
இன்பமுடன் வாழ்கின்றான் இன்று. 36

சென்னைஉத் தியோகத்துச் சீமானானாலு மென்றும்
மன்னும் பவானந்த மாட்சியான் — தன்பேர்
வெளிநாட்டி லெங்கும் விளங்கி யிருக்கின்றான்
அளிநாட்டி வாழ் தயாளன். 37

உத்தியோ கத்தனென்ப தொன்றுமட்டும் மேயல்ல
சுத்தமாய் வாசித்த தூயனென்றும் — வித்தையிலே
வல்லனென்றும் நல்லனென்றும் வாய்ந்த பவானந்தனையே
எல்லவருஞ் சொல்வார் இசைந்து 38

ஈவிரக்க முள்ளான் இலகுபொதுக் காரியத்தி
லேவிளக்க மாம்விருப்பம் எய்தினான் — ஆவிவனே
மன்பதைக எம்பனென்பர் மன்னுபவா னந்தனையே
என்னசொல்வ தின்னும் இசைந்து 39

ஈரிருப தாண்டாய் இலகுமுத்தி யோகத்தில்
சீருஞ் சிறப்புஞ் செழித்திருந்து — பேரும்
பிரபல பட்டங்களும் பெற்ற பவானந்தன்
திறமுடன் வாழ்க சிறந்து 40

(வாழி)

வாழி பவானந்தன் வாழி யவன்கல்விக்

காழி யெனவோங்கும் அருங்கழகம் – வாழி

அதற்கவன் வைத்த அருநிதியம் வாழி

எதற்குஞ் சிறக்க இருந்து.

******

திரிபுரசுந்தரிதுதி

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மைய ஆர்.எண்.5616-இல் தாட்சுவடி நூலாக பிரதி செய்து வைக்கப்பட்டுள்ளது. திருநடம் புரியும் புதுவையம்பதி வாழ் திரிபுர சவுந்தரி உமையாள் தேவியை வழிபட்டு பாடிய துதிப் பாடல்களாக, விருத்தப்பாக்களில் பாடப்பட்டுள்ளன. ஆசிரியர் பெயர் மற்றும் விவரம் அறிய இயலவில்லை.

"முன்செய்த தீவினையோ
கடடரால் வந்த வஞ்சனையோ
கலங்குகிறேன் கருணை கூறம்மா" என்றெண்ணி

வழிபடும் பக்தர்களுக்கு அருள் பாலித்து தீவினை நீக்கினாள் தேவி. சக்தி தேவியின் ஆபரண அலங்கார தோற்றப் பொலிவும், கொலுவீற்றிருக்கும் தன்மையும் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளன. எல்லாம் வல்ல இறைவன் சிவனின் உருவில் பாதியாக தோன்றியுள்ள உமையம்மை எங்களுக்கு தந்தையும், தாயுமாக இருந்து நல்வழி காட்டினாள் என பராசக்தியின் அருமை, பெருமையினையும், காட்சி தந்து அடியார்களுக்கு உதவும் பாங்கினையும், இச்சுவடி நூலில் மிகுதியாக கூறப்பட்டுள்ளன. இந்நூல் சைவ சித்தாந்தம் பற்றிய நூலாகும். எனவே இந்நூல், இதுவரை பதிப்பிக்கப்படாததால் பதிப்பித்து வெளியிடப்படுகிறது.

நீ.அய்யனார், எம்.ஏ., பி.எட்.,
தமிழ்ப்புலவர், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மையம், சென்னை-5.

'திரிபுரசுந்தரிதுதி'

1\. நாவினா லுன்னைத்தான் துதியே
நற்றவம் புரிந்திட வறியேன்
நறுமல ரெடுத்துன் னடியினை வணங்கி
நாமமே மனதினில் நினையேன்
பாவிநான் கொடிய வினையினால் மெலிந்து
பரதவிப்பது மறந்திருந்து
பராமுகமாக விராமலுன் கமல
பாதமே நந்தருள் புரிவாய்
பூவினிலயன் மாவிந்திரன் முதலோர்
போற்றிடுங் கருணை வாருதியே
பொன்னு நன்மணியே என்னையாட்கொண்ட
பூங்கமலத் தாசனத் துமையே
சேவு மேலமர்ந்த வேத புரீசன்
திருவுள மகிழ்ந்த தெள்ளமுதே
திருநடம் புரியும் புதுவையம் பதிவாழ்
திரிபுர சவுந்திரி யுமையே.

2\. இப்படி சென்னமெடுத்த நாள் முதலா
இறப்பதுந்தான் மிகச் சிறுமை
இளமையில் வறுமைப்படுவதுஞ் சிறுமை
இதுவுமல்லாமலே அயனார்
கற்பனைப் படியோ முன்செய்த தீவினையோ
கபடரால் வந்த வஞ்சனையோ
கங்குலும் பகலும் நோயினால் மனது
கலங்குகிறேன் கருணை கூறம்மா
கொப்பணி மகரக் குழையலங்காரக்

கோமள மாயி மாதங்கி
கோகன வதனி வேத மந்திரத்தி
குளிர்சடை கடவுள் நம்மிடத்தி
செப்பிளந் தனத்தி வாமரூப தத்தி
செவிதனில் நோய் தனையகத்தி
திருநடம் புரியும் புதுவையம் பதிவாழ்
திரிபுர சவுந்திரி யுமையே.

3\. அன்னை தன் வயத்திற் செனித்துருவாகி
அம்புவி தனில் மிகப்பிறந்து
அருமதலை யாய் தவழ்ந்துடல் வளர்ந்து
அய்யிரண் டாகிய வயதில்
தன்னெதிரில்லாச் செல்வமே படைத்து
தான் மகிழ்ந்திருப்ப தல்லாமல்
தரணியி லடியேன் வினையினங் மெலியத்
தர்மமோ வுனக்கிது தாயே
மன்னுமா மயிலே மரகத மணியே
வானவர் தொழும் பராபரியே
மருமலராளக வயிரவி கெவுரி
மயிட சங்காரி கங்காளி
சென்னி யாறுடைய முருகனைப் பயின்ற
செல்வியே யானந்த வல்லியே
திருநடம் புரியும் புதுவையம் பதிவாழ்
திரிபுர சவுந்திரி யுமையே

4\. தந்தையுந் தாயும் நீயல்லா எனக்குத்
தரணியிற் பின்னை வேறுளதோ
தாமரை நீர்போலத் தவிக்கையி லுனக்குச்சத்து
தானி தக்க மதிலையோ

மைந்தரைப் பெறாத மலடியோ

முழுதும் வஞ்சகமான தேவதையோ

மனமகிழ்ந்தமுர்த வசன மொன்றுரைத்தால்

வாயினில் முத்துதிர்ந்திடுமாமோ

உந்தனால் தீராத வல்பிணி யுண்டோ

உன்னிலுந் தானதி செயமோ

உனது நெஞ்சிரும்போ பேசறியாயோ

ஊமையோ தாமிச மம்மாள்

செந்திருமாது முனிவர் சித்தர் களுந்

தேவரும் யாவரும் வணங்கத்

திருநடம் புரியும் புதுவையம் பதிவாழ்

திரிபுர சவுந்திரி யுமையே

5. மல்லிகை முல்லை வேர்மருக் கொழுந்து

மனங்கமிழ செகழியு முடியும்

வடிவழ கொழுகு வதனமுஞ் சந்திர

வானுதல் மீதில் வெண்ணீறும்

வில்லெனும் புருவ அஞ்சன விழியும்

விளங்கிய மகரபொற் குழையும்

விற்பன மொழியும் பொற்பதாம் புயமும்

வீறுடன் தொழவருள் புரிவாய்

பல்லுயிரனைத்தும் படைத்து ரட்சிக்கும்

பார்வதி பரம கல்யாணி

பத்திர கங்காளி சத்துரு சங்காரி

பயிரவி அகோர முக்கண்ணி

செல்வியாம் வசனத் திருமகள் பரவுஞ்

செழுஞ்சுடர் வேத புரீசர்

திருநடம் புரியும் புதுவையம் பதிவாழ்

திரிபுர சவுந்திரி யுமையே

6. தண்டை பொற்சிலம்பு சதங்கையு மணிந்த

சரணமும் பூரண கிரண

சந்திர காந்தத் தொழிலொளி பரப்புஞ்

சரிகை நற்கலை யுடுத்திடையும்

அண்டாண் டங்களைத் தையு முண்ட

ஆலிலை போல் திருவயிறும்

அங்குச பாச மேந்தி யகரமும்

அனுதினந் தெரிசினை யருள்வாய்

வண்டுறை சென்று மலரலங்களி

வஞ்சகர் தம்மிடம் அகல

மட்டு ளாயிரத் தெட்டிதழ் மீதில்

மகிழ் துறை சிறபரானந்தி

தென்டிரைக் கடலில் கடைந்த நஞ்சதனை

செங்கையா லெடுத்த முதருந்தும்

திருநடம் புரியும் புதுவையம் பதிவாழ்

திரிபுர சவுந்திரி யுமையே

7. கனக நற்சபையில் சிவகாமி நாயகிநீ

கருணைசேர் பெரிய நாயகிநீ

கயிலையிலுமை நீ கொடிய வல்வினையைக்

கடாந்திடும் தயிலம்மைத் தாய்நீ

பனுவல் சேர் மதுரை மீனாட்சிநீ

அருணைப் பதியிலுண்ணா முலையுமைநீ

பார் புகழ் வில்லை கோகிலாம்பிகைநீ

பராக்கிரமத் துடனொளி வொளியாய்

அனைவரு மொன்றாய் திரண்டுரு வடிவமாகியே

என்னை ஆண்டருள் வாய்

அம்புவியோரும் உம்பர் மாலையனும்
ஆயிரக் கண்ணனுந் துதிக்க
தினகர நிரைஞ் சத்திரி புராணந்தத்
தேவியே என்றனைவரும் வணங்கத்
திருநடம் புரியும் புதுவையம் பதிவாழ்
திரிபுர சவுந்திரி யுமையே

8. மாதரால் வந்த மயக்கமு மாசை
மறுத்திடும் பில்லி சூனியமும்
வலித்திடுங் காதி லெழிச்சியும்
பித்த வாதமும் மண்டை நோயளவும்
தோதகமான கிராந்தியு மேக
சூலையுந்தலை கிறு கிறுப்பும்
சொல் பிரட்டான அசதியுமிருகண
சூழ்வது மித்திர பேதகமும்
ஈதெலா முனது பாத தாமரையில்
இருதயந் தன்னிலே நினைந்து
ஈசுபரி கெவுரி பரம கல்யாணி
என்றிடப் பறந்திடுமம் மாள்
சீதள வதன பார்வதி யுனையே
செகமெலாம் படைத்த நாறனியே
திருநடம் புரியும் புதுவையம் பதிவாழ்
திரிபுர சவுந்திரி யுமையே

9. அஞ்சுகண் மொழியுந் தஞ்சமென்றடைந்தோ
அருள் பெருகிய வருவிழியும்
அலர் குமிழ் மூக்கிலணிந்த மூக்குத்தி
அதிய செங்கிரண மாமுகமும்
கொஞ்சு பூங்கிள்ளை ஏந்திர கரமும்
குலவிய சதுர்புயம் நான்கும்

கொப்பிடுஞ் செவியில் ஒப்பிலா வழகுங்
கொன்று சென்றெனக்கருள் கூர்வாய்
பஞ்சனை சிவந்த பதும பொற்பதத்தி
பார்வதி கங்கை சக்களத்தி
படித்தவரிடத்தில் பிடித்துயர் தவிழ்த்து
பதந்தரும் நிதந்தரும் விமலி
செஞ்சிலம் பொலிக்க நடமிடுஞ் சரணத்
தேசீகா வேத புரீசா
திருநடம் புரியும் புதுவையம் பதிவாழ்
திரிபுர சவுந்திரி யுமையே

10. சந்தம் வால சரசுவதி யருளுஞ்
சண்முக வேலவரருளும்
தாமரைக் கமலப் பூமகள ருளுஞ்
சற்குரு வருளும் நின்னருளும்
செந்தமிழ தனாலுந் தனைத் துதிக்க
செகமதில் சுகித்து வாழ்ந்திருக்க
செல்வமுங் கல்வி முக வசீகரமுந்
திறம்பெற மனமகிழ்ந் தருள்வாய்
கந்தர மதினில் பணியணி யிலங்க
திரமதி லணிவளை யிலங்க
கட்டிய நுதலில் சுட்டியு மிலங்க
கஞ்சமா மலரடி யிலங்க
திந்திமி திமியென முர சதிர
திடுக்கென உடுக்கண மதிரத்
திருநடம் புரியும் புதுவையம் பதிவாழ்
திரிபுர சவுந்திரி யுமையே

11. கங்கையில் மூழ்கி மங்கை பங்காளர்
கடவுள் நற்சிவகடன் முடித்து
கருத் தெனத்திருத்தி வகுத்து மாநல்
காயமே லெங்கு நீறணிந்து
தங்க பொற்சிகர நின்றிருக் கோவில்
தன்னையே வலமது புரிந்து
சன்னிதானத்தில் நின்னை யான் வணங்கத்
தமியெனை யாண்டருள் புரிவாய்
மங்களா கார கங்க னானை
மகேசுவரி சடாசுவிரி விமலி
மருவளந் துளப எப்பண விசைய
மால் சகோதரி செயவீரி
திங்களுங் கங்கை சூடுசெஞ் சடை யா
செழுமறைப் புகழ்புரி வாசா
திருநடம் புரியும் புதுவையம் பதிவாழ்
திரிபுர சவுந்திரி யுமையே

// முற்றும் //

குத்தகைச் சீட்டு

பதிப்புரை

இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஓலைச்சுவடிகளின் அடிப்படை விவரங்களை திரட்டி இதற்கென உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள் உதவியுடன் குறுந்தகட்டில் பதியும் பணி மைய அரசின் தேசிய சுவடிக் குழுமம் (National Mission for Manuscripts) மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள ஓலைச்சுவடிகளின் அடிப்படை விவரங்களை திரட்டும் நல்வாய்ப்பு ஏற்படும் என்பதால் இப் பணியினை தமிழகத்தில் அரசினர் சுவடிகள் நூலகம் மேற்கொள்ள தேசிய சுவடிக் குழுமத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 2011 பிப்ரவரி மாதம் கையொப்பம் இடப்பட்டது. இதன்படி இவ்வாய்வு மைய காப்பாட்சியரை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு ஒரு உதவி ஒருங்கிணைப்பாளர், இரு களப் பணியாளர்கள், ஒரு அட்டவணைபடுத்துபவர் மற்றும் ஒரு உதவியாளர் என ஐந்து பணியிடங்கள் உருவாக்கப்பட்டு ஐந்து நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி இதுவரை 17000 ஓலைச்சுவடிகளின் அடிப்படை விவரங்கள் திரட்டப்பட்டுள்ளது.

இப்பணியின்பொருட்டு புதுக்கோட்டையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது இவ்வாய்வு மையத்தின் வாசகர் திரு. கு.மா.சுப்பிரமணியன் அவர்களிடம் மேற்படி திட்டப் பணிகளை விவரித்து அவரின் உதவி கோரப்பட்டது. அவர் இத்திட்டப் பணிக்கு தேவையான பல உதவிகளை அளித்ததுடன் தான் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக ‘உறையூர்ப் பகுதியில்

ஓலை ஆவணங்கள்' எனும் தலைப்பில் கள ஆய்வில் ஈடுபட்ட போது திரு.கோ.ரெங்கராசு முத்தரையர் பட்டயத்தாரிடமிருந்து பெற்ற 390 ஏடுகளின் விவரங்களை பார்வைக்கு அளித்தார். இதில் நிலக்கிரையம், மனை கிரையம், வீடுமனை கிரையம், வாழைக் குத்தகைச்சீட்டு, சோதிடம், இலக்கியம், மருத்துவம் மற்றும் மாந்திரீகம் என பல பொருள்கள் இருந்தன. அதில் நிலக் குத்தகைச்சீட்டு, எதிர்நடை குத்தகைச்சீட்டு மற்றும் வாழைக் குத்தகைச்சீட்டின் சிறப்பைக் கருதி இவற்றை **குத்தகைச்சீட்டு** எனும் தலைப்பில் இவ்வாய்வு மைய ஆண்டு பருவ இதழில் வெளியிட அனுமதி கோரியவுடன் தனது விருப்பத்தை உடனடியாகத் தெரிவித்து அதற்கான அனுமதி கடித்தையும் திரு.கு.மா.சுப்பிரமணியன் அளித்தார். மேலும் சென்னைக்கு வருகை தந்து பதிப்பு பணியில் ஈடுபட்ட காரணத்தால் பதிப்பாசிரியர் எனும் சிறப்பும் அவருக்கு அளிக்கப்படுகிறது. தமிழர்களின் விவசாயம் மற்றும் நில தொடர்பான பரிவர்த்தனைகளை அறிய உதவும் இது போன்ற பல ஆவணங்கள் வெளி உலகிற்கு இன்னும் தெரியாமல் உள்ளன. அவற்றை வெளிக் கொண்டு வர வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு மைய பருவ இதழில் தற்போது வெளியிடப்படுகிறது.

இர. சந்திரமோகன், எம்.ஏ., எம்.பில்.,
நூலகர் மற்றும் காப்பாட்சியர் (பொ)
அ.கீ.சு.நூ (ம) ஆ. மையம்
சென்னை -5

கு. மா. சுப்பிரமணியன்
வட்டார வளர்ச்சி அலுவலர் (ஓய்வு)
புதுக்கோட்டை

குத்தகைச் சீட்டு

ஓலைச் சுவடிகளை 1) ஆவணங்கள் 2) பதிவேடுகள் 3) இலக்கணம், இலக்கியம் மற்றும் பல்துறை நூல்கள் என முப்பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். இதில் மூன்றவதாகக் குறிப்பிட்டுள்ள இலக்கணம், இலக்கியம் மற்றும் பிறதுறை நூல்கள் தனியாரிடமும் சுவடி நூலகங்களிலும் மிகுதியாக உள்ளன. ஆனால் ஆவணங்களும் பதிவேடுகளும் இப்போது அதிகமாக இல்லை. இவை அரிதாக அரசு அலுவலகங்களிலும், தனியார் வணிக நிறுவனங்களிலும் உள்ளன. அலுவலக நடைமுறைப்படி காலாவதியானதும் அழிக்கப்பட வேண்டியவை என்பதால் அவை அவ்வப்போது அழிக்கப்பட்டு விட்டதால் ஆவணங்களும் பதிவேடுகளும் கண்ணால் பார்க்கக்கூடக் கிடைக்காமல் போய்விட்டன.

Document என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஆவணம், பத்திரம், ஆதாரமூலம், ஆதாரச் சான்று என்ற பொருள்களை ஆங்கிலம் - தமிழ் அகராதி கூறுகிறது. ஆவணம் என்பதற்கு அடையாளம், கடைத்தெரு முறிச் சீட்டு, அடிமைத்தனம், உரிமை என்ற பொருள்களை அகராதி குறிப்பிடுகிறது.

1995 – ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 17, 18 மற்றும் 19 தேதிகளில் தஞ்சை தமிழப் பல்கலைகழகத்தில் **தமிழில் ஆவணங்கள்** எனும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கு நடைபெற்றது. அக்கருத்தரங்கில் பழங்காலத்தில் ஓலைகளில் எழுதப்பட்டு வழக்கத்திலிருந்த ஆவணங்களை கீழ்காணும் 38 வகைகளாக புலவர் கண்ணையன் அவர்கள்

ஓலைச்சுவடிகளில் ஆவணங்களும் - பதிவேடுகளும் எனும் தலைப்பில் அளித்துள்ளார். அதன் விவரம் வருமாறு:

ஆவணத்தின் பெயர்	விவரம்
1. அஞ்சாப் பட்டயம்	அ) எடுத்த உரிமைகளைத் திரும்ப அளித்தற்குரிய சாசனம்.
	ஆ)பிறர் கொடுமை செய்யா வண்ணம் நியமிக்கப்படும் சாசனம்
2. அடத்திச் சீட்டு	ஒரு வியாபாரி மற்றொரு வியாபாரிக்கு இவ்வளவு தொகை வரை கொடுக்கலாம் என்று எழுதிக் கொடுக்கும் சீட்டு.
3. அடிமையோலை	ஆள் அடிமைப் பத்திரம்
4. அடவேலை	சொத்தை ஈடுகாட்டி எழுதிக் கொடுக்கும் அடமானக் கடன் பத்திரம்
5. அதிகாரப் பத்திரம்	தான் செய்ய வேண்டிய காரியத்தைத் தனக்காகப் பிறர் செய்வதற்கு அதிகாரம் அளிக்கும் பத்திரம் (Power of Attorney)
6. அம்ச பத்திரம் அவகாச முறி	பங்காளிகள் ஏற்படுத்திக் கொள்ளும் பாக அட்டவணைப் பத்திரம் (Partition Deed)
7. அறிக்கைப் பத்திரம் அறிக்கையோலை இஸ்தியார் இஸ்தியார் நாமா	எழுத்து மூலமான அறிவிப்பு

8. அறுத்து முறி	மனைவியைத் தள்ளிவிடுகைப் பத்திரம்
9. அறுதிக் கிரயம் அறுதிச்சாதனம் அறுதிச் சீட்டு அறுதி புறுதி கிரய சாசனம் கிரய சீட்டு கிரயப் பத்திரம் விலையாவணம் நிலவிலையாவணம்	நிலபுலன் முதலான சொத்துக்களின் விற்கிரய சாசனம் (Sales Deed)
10. அறுதி முறி அறையோலை	தீர்ந்துபோன (காலாவதியான) பத்திரம். ஒப்பந்தக் காலம் முடிந்து உரிமையற்றுப் போன ஒப்பந்தச் சீட்டு ஓலை
11. அறுப்புச் சீட்டு	தானிய அறுவடை செய்ய அனுமதிச் சீட்டு
12. ஆக்கினைப்பத்திரம் ஆணையோலை கோனோலை திருமுகம் ஸ்ரீமுகம்	அரசனது கட்டளைத் திருமுகம்.
13. இசைவுத் சீட்டு இசைவோலை	உடன்படிக்கை சாசனம்
14. உபயத் சீட்டு	கோயிலில் வழிபாடு செய்யும் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட தற்கமைந்த உடன்பாட்டுச் சீட்டு
15. எதிர்ச் சீட்டு எதிரிடைமுறி எதிர்நடைப் பத்திரம் எதிர்முறி	சொத்தை கிரயம் வாங்கினவர் அச்சொத்தை விற்பனை செய்ய நேரிட்டால், கிரயம் கொடுத்தவருக்கே திரும்பக் கிரயம் செய்வதாக ஒப்பந்தம் செய்து எழுதும் கிரயப்பத்திரம்

16. எல்லைப் பத்திரம்	எல்லை வழக்கு தீர்த்து எழுதும் பத்திரம்
17. ஒற்றிப் பத்திரம்	வாங்கும் கடன் தொகையைத் திரும்பச் செலுத்தும் போக்கியப் பத்திரம் வரை வட்டிக்கு ஈடாக ஈட்டுச் சொத்தை அனுபவித்து வரும் உரிமையுடன் கூடிய கடன் பத்திரம்.
18. கடன் ஓலை கடன் சீட்டு கடன் முறி கடன் பத்திரம்	வாங்கும் கடனுக்கு ஆதாரமாக எழுதிக் கொடுக்கும் ஆவணம்
19. கவுல் நாமாகவுல் சீட்டு குடியுடன் படிக்கை குத்தகைச்சீட்டு சாகுபடி முச்சலிக்காசெய்கைச் சீட்டுகபுலியத் நாமா	நிலக் குத்தகைப் பத்திரம்
20. கைபீதுகைபீயத்	விவரக் குறிப்பேடு
21. குடவோலை குடத்திலிடும் சீட்டு	சபையோரைத் தேர்ந்தெடுக்க
22. கைச்சீட்டு	நேரில் கையெழுத்திட்டு எழுதிக் கொடுக்கும் உறுதிச் சீட்டு
23. சர்வ முக்தியார் நாமா	எல்லாவற்றுக்குமாகக் கொடுக்கப்படும் அதிகாரப் பத்திரம்
24. சுகஸ்த லிகிதம் சொஸ்த லிகிதம்	தானே தன்கையால் எழுதிய ஆவணம்
25. சுவீகாரப் பத்திரம்	பிறர் மகனைத் தன் மகனாகத் தத்து எடுத்தல் ஆவணம்

26. சீதன ஓலை	மணமகளுக்கான சீதனம் எழுதப்பட்ட ஓலை
27. சுருள் ஓலை	கடிதம் எழுதிச் சுருட்டி முத்திரையிடப்பட்ட ஓலை
28. சோழ ராஜிநாமா	நில உரிமையை விட்டுவிட எழுதிக் கொடுக்கும் மனு
29. தவணைக் கிரய சாசனம்	தவணைக்குள் ஒத்தித்தொகை செலுத்தாவிடில் ஒத்திக்காரருக்கே நிலம் உரிமையாவது என்ற நிபந்தனைக்குட்பட்ட ஒத்தி ஆவணம்.
30. தவணைச் சீட்டு	கெடு வைத்து எழுதிய பத்திரம்
31. தான சாசனம் தான பத்திரம் தான பத்திரிக்கை	ஒருவர்க்குக் கொடை வழங்கின விவரம் குறித்த ஆவணம் (Gift Deed)
32. திருவுளச் சீட்டு	குலுக்கிப் போட்டு எடுத்தல் முதலிய வகையால் தெய்வ சித்தமறியும் சீட்டு
33. நாளோலை	முகூர்த்த ஓலை
34. நியாயப் பத்திரம்	வழக்குத் தீர்ப்பு ஏடு
35. பரிவர்த்தனைப் பத்திரம்	தமது வசதிக்குத் தக்கவாறு தம்முடைய சொத்துக்களை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்வதற்கான ஆவணம்.
36. பற்றுமுறி	தொகையைப் பெற்றுக் கொண்டவர் பற்றுச் சீட்டாக எழுதி வழங்கும் ஓலைத் துணுக்கு

37. பிடிபாடுத் சீட்டு	ஆதாரமாக எழுதித் தரும் உறுதிச் சீட்டு (உத்திரவாதச் சீட்டு)
38. பிரமாண இசைவுத் சீட்டு	விற்பவர் வாங்குபவர் இருவரும் விலையை உறுதி செய்து, கிரயத்தை ஒப்புக்கொண்டதற்குரிய சான்றாக இருவரும் எழுதிக் கொள்ளும் உடன்படிக்கை உறுதிச் சீட்டு (Agreement)

மேற்படி ஆவணங்களில் குத்தகைச் சீட்டு ஒன்றாகும். குத்தகை என்பது அரபுச் சொல்லாகும். இதற்கு **'கைம்மாறு'** என்று பொருள். ஒரு நிலத்தின் விளைவை, ஒரு தோப்பின் பலனை அல்லது ஓரிடத்தில் ஒரு பொருளை விற்கும் தனியுரிமை குத்தகைக்கு விடப்படும். குறிப்பிட்ட அளவு பணத்தைக்கட்டி அவற்றைக் குத்தகைக்கு எடுப்பர். சிலவேளைகளில் ஏலத்தில் விடுவதும் உண்டு. ஏலத்தில் உச்சக்கேள்வி கேட்டு, ஏலத்தை எடுத்தவர் **'குத்தகைதாரர்' (Lease holder)** எனப்படுவர். குத்தகைக்கு விடும் நபர் **lesser** என அழைக்கப்படுவர். எனவே ஒருவர் தமது நிலத்தைச் சில காலம் வேறு ஒருவருக்கு உரிமையுடையதாய் ஒற்றிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது குத்தகைப் பத்திரம் எனப்படும். இதனை அடகுமுறை ஆவணம் எனவும் கூறுவது உண்டு.

நிலக்குத்தகைச் சீட்டு என்பது நில உரிமையாளர் நிலத்தை பயிர் சாகுபடி செய்பவருக்கு ஒப்பந்த அடிப்படையில் நிலத்தில் பயிர்சாகுபடி செய்துக் கொள்ளவும், அந்த நிலத்தின் விளைச்சலில் எவ்வளவு தானியம் கொடுப்பது என்றும் அல்லது

தொகையாக எவ்வளவு கொடுப்பது என்றும் நிலத்தை எவ்வளவு காலத்திற்குப் பின் திருப்பிக் கொடுப்பது என்றும் நிலவரி செலுத்துவது குறித்தும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவேன் என்றும் உறுதிமொழியை குறிப்பிட்டு எழுதப்படும் ஒப்பந்தச் சீட்டாகும். சுருக்கமாக கூறின் நிலச் சொந்தக்காரரும் பயிர்சாகுபடி செய்வோரும் ஒப்பந்த நிபந்தனைகளை எழுதிக் கொள்ளும் சீட்டே குத்தகைச்சீட்டு.

நிலக்குத்தகைச் சீட்டு -1

........ஆடி மாதம் திருச்சிராப்பள்ளி ஜில்லா கோனாடு தாலூகாவை சேர்ந்த பாண்டமங்கலத்திலிருக்கும் பிடாரன் தெரு வ...ணமு – மகன் ஆறுமுக முத்திரியனுக்கும் யிருபேருக்கும் மேற்படி தெருவிலிருக்கும் ராமசாமி முத்திரியன் மகன் வெங்கிடாசல முத்திரியன் மகன் யெளுதிக்கு ..... சீட்டாவது என்ன என்றால் திருச்சிராப்பள்ளிக் கோட்டை சின்ன கடை தெருவிலிருக்கும் சபாபதி முதலியாருக்கு தோட்டத்தை நான் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு நான் அவருக்கு எதிர் நடையெளுதிக்குடுத்து அவர் எனக்கு குடுத்த .....டுத்தபடி என்ன என்றால் மேற்படியார் தோட்டம், பாண்டமங்கலம் குடமுருட்டில் உற்றத்திருக்கிற பல விச்சகம் தோட்ட ....ரக்கும் நீங்கள் குத்தகைக்கு ஒப்புக்கொண்டபடிக்கி மேற்படி தோட்டத்திலிருக்குற மாமரம், தென்னைமரம், கொய்யாமர கொண்டு பல விருச்ச மரங்களுக்கு சுற்றிலும் கொத்தி, வெட்டி தோட்டத்தை சுத்தி ஆடு மாடுகள் மேயாமல் வருமா..... தவிர பெயக்கரும் புயில்லாத இடங்களில் பெய்க்கரும்பு போட்டும் நாணல் இல்லாத இடங்களில் நாணல் ப பெ....பல விருச்சம் கண்ணுக்களை நீங்கள் வச்சு பயிரிட்டு காப்பாத்தி கொடுக்கிறது அல்லாமல் கீளபுறம் படுகை கொத்தி வெட்டி

விடுவீறாவும் கொத்தி வெட்டியும் கீள நிலத்தில் நீங்க ா வேண்டும் பயிரிட்டுக் கொண்டு .....ரூ.5 வீதம் வருசா வருசு பகுதிக் குடுத்துவருக்குளதும் தவிர, மேறபடி தோட்டத்திலிருக்கிற நாணல் விலாமி .... பெயக்கரும்பு வெட்டினால் வருசத்துக்கு ஒரு தடவை சரு விடங்களியாய, யென்னை வச்சு வெட்டி கொள்வாயா ......டாமலும் மாடுகள் ஆடுகள் மெயந்தும் பல விருச்ச மரங்களை வெட்டியது, பல விருச்ச மரங்களுக்கு கொத்தி வெட்டி விட.... தரியவந்தால் அதினுல் வளப்பட்ட செத்ததை நீங்கள் பாத்தியப்படுகிறது மதவிற போட்ட பலனுடனெ யெ ப யெச்சு.....யிந்தபடிக்கியென மனோரசியில டொாகுபடி முத்திரியன் மகன் முக்க மெஷ்திரிக்கும், லெட்சுமண முத்திரியன் மகன் ஆறுமுகம் முத்திரியன் குத்தகைசீட்டு இந்த கீறல் வெங்கிடாசலம் முத்திரியன் சம்மதி யிதறக்கு சாட்சிகள்.

நிலக்குத்தகைச் சீட்டு - 2

தாருண வருடம் ஆவணி மாதம் பதினாறம் தேதி கா.மிட்டா காட்டுப்புத்தூரிலிருக்கும் நாகைநல்லூர் சபாபதி அய்யன் நஞ்சை நிலம் குத்தகைச்சீட்டு யென்னவே வெங்கடாசல மிட்டா காட்டுப்புத்தூர் நடநீர் நஞ்சை நிலம் நடுல கண்ணாறு மேலவாரி செதிட கலம் செயி - இறு ..யிந்த அறாறயெஅரைகால் செயி நெலத்துக்கு மேறபடி ஊர் கண்ணனுறான் மகன் முத்து அம்பலகாரனுக்கு ஒரு போக செயி குத்தகை நீ காத்து ஒப்பு கொண்டது யகளசா 16 யிந்த பதிநாறு கலனே ஆறு மறகாலோடு கூரணி நெல்லேயும் யிந்தபதி திரு தூத்தி (அரமனெமறக்காலில்) அளவிப்பனாகவும் பட்டறைகட்டு வகுல் றெனடு (இரண்டு) கூட்டு வகுல் குடுகாவும் யிந்தபடி சரியெனம் நெறுசியில்

யெளுதிக் குடுத்த குத்தகைச் சீட்டு. எழுதி கொடுத்ததற்கு சாட்சி நெலவிடும் (நிலம் விடும்) காலாவதி வருகிற மாசியிலும் 15 தேதியில் விட்டுவிடவேயாக. இந்தபடியென யிந்தபடியயென மனுறுவியல் எயளுதி குடுத்த குத்தகைச்சீட்டு யெதியது சபாபதியயன சுகாலர் நாகை நல்லூறுலேயிருக்கும் கூணயைற் குமாரன் வெங்கடாசல மகன் அய்யன் நீலவன்.

* அரண்மனை மரக்கால் - முத்திரை மரக்கால்

மரக்கால் - முகத்தல் அளவு (நெல், தானியங்கள்)

கூரணி என்பறு குறுணி — முகத்தல் அளவு (நெல், தானியங்கள்)

4 படி கொண்டது ஒரு குறுணி

ஒரு குறுணி - 2 மரக்கால்

8 படி - ஒரு மரக்கால்

12 மரக்கால் - ஒரு கலம்

எதிர்நடை குத்தகைச்சீட்டு

நில உரிமையாளருக்கு குத்தகைத்தாரர் குத்தகையைப் புதுப்பித்தும் சில நிபந்தனைகளைச் சேர்த்தும் அல்லது குறைத்தும் எழுதிக் கொள்ளும் ஒப்பந்தச் சீட்டாகும்.

நளா வருடம் ஆடி மாதம் 21 ஆம் தேதி திருச்சிராப்பள்ளி கோனாடு தாலூகாவை சேர்ந்த பாண்டமங்கலம் பிடாரன் தெரு மேற்படி தெருவிலிருக்கும் பிடார மகன் மூத்த மேஷ்திரியும் லெட்சுமண மகன் ஆறுமுகம் மு யிருபேரும் யெளுதி குடுத்த .... திருச்சிராப்பள்ளி கோட்டை சின்னக் கடைத் தெருவிலிருக்கும் சபாபதி முதலியாருக்கு மேற்படி பாண்டமங்கலம் குடமுருட்டி .... கொண்டு மேற்படி யாருக்கு யெதிர் நடையெளுதி குடுத்து அவர்யெனக்கு

குத்தகைசீட்டு யெளுதி குடுத்தபடிக்கினாங்க ....குத்தகை சீட்டுக்கு யெதிர்நடை னூங்களிருபேரும் யெளுதி குடுத்தபடி யென்னமென்றால் மேற்படியார் தொட்டமட.......முதல் ஆடி மாதம் 21 ம் தேதி முதல் சித்ததிரி வருடம் ஆனி மாதம் 30 ம் தேதி வளர்க்கும் ஹுனக்குத்தகைக்கி ஒப்புக் கொண்டபடி யினுலே.....மறம் பெ.பக்கரும்பு பில்லுகளாயிதுகளை அனுவத்துக் கொண்டு பலவிருச்சம் மறங்களுக்கு கொத்தி வெட்டி ....ம வெலி கூட்டி பந்து ப ஷத்து பண்ணு குாறு மதவிா னுணலில்லாத விடங்களில் னாணைலப பொடுகுறதும் தவிறம......மல்லாமல், மேற்படியார் கொண்டு வந்து குடுக்கிற பல விருச்ச மா கண்ணுகளை பயிரிட்டு வந்து குடுக்கிறதுமல்ல..... கொத்தி வெட்டி விடுவோமாகவும், வெட்டி கொத்தி கீளநிலத்தில் னாங்கள் வேண்டும். பயிரிட்டுக் கொள்ளு.....வேரு யிந்த யிரண்டு பலனுக்கும் யெங்களுக்கு சம்மந்தமில்லை. பெயக்கரும்பு வெட்டினால் வருசத்துக்கு ஒரு தடைவ மேற்படி தோட்டத்திலிருகிற பல விருச்சமக சூலையும் கீள நிலத்தில் வேண்டும் பயிரிட்டுக் கொண்டு சற்காற் பகுதி வருடம கர ரூ பாதியப்பட்டு குடுகிறதும் தவிற, வுடனெரு பாட்ட பலனுடனே யெப்பெச்சும் யெசாமலயேஎதிர் வளக்காடாமல மேற்படி

சாமி மூ - மகன் வெங்கிடாசல மூ யனுக்கு பிடார மகன் மூக்க மேஸ்திரியும், லெட்சுமண மூ மகன் ஆறுமுகமும்னுங்கள்.....

கீறல் ....முக்கமேஸ்திரி சம்மதி

யிந்தகீறல் ஆறுமுகமூ சம்மதி

யிதற்கு சாட்சிகள் - எழுதவில்லை.

இது ஐந்தாவது ஏடாகும். 1, 2, 3, 4 மற்றும் 6 வது ஏடு கிடைக்கப் பெறவில்லை.

வாழைக் குத்தகைச்சீட்டு

வாழைக் குத்தகைச்சீட்டு என்பது நில உடைமையாளர் தன் நிலத்தில் வாழை சாகுபடி செய்து அந்த வாழைத்தார்களை விற்பனைச் செய்ய வாழைத்தார் வியாபாரிகளிடத்தில் ஒரு தார் இன்ன விலைக்கு எடுத்துக் கொள்வதாக விலைப்பேசி அந்த நிலத்தில் அறுவடைக்கு (தாரை வெட்டிக்கொள்ள) செய்துக் கொள்ளவும், வாழைத்தாரை இத்தனை மாதத்திற்குள் வெட்டிக் கொண்டு நிலத்தை ஒப்படைத்துக் கொள்வதையும், நில வரி செலுத்துவதையும் குறித்தும் ஒப்பந்தம் செய்துக் கொள்ளும் ஆவணம் வாழைக் குத்தகைச்சீட்டாகும்.

"சுபானு வருடம் தை மாதம் 20 ஆம் தேதி திருச்சி ஜில்லா முசிறி தாலுகா நாகை நல்லூர் கிராமப் பள்ளச்சேரியில் இருக்கும் பள்ள வீரமலை மகன் பொன்னம்பலம் க.சங்கப்பிள்ளை நாங்கள் இருபேரும் மேற்படி கிராமம் ஆனைக்கல்லுப்பட்டி அம்பலகாரசாதி முத்தரசன் சேர்வைகாரன் குமாரன் வைகாபுரி சேர்வைகாரனுக்கு எழுதிக் கொடுத்த நஞ்சை நிலம் வாழைக் குத்தகைச்சீட்டாவது யென்ன வென்றால் திருச்சிராப்பள்ளி ஸ்ரீக்கட்டு குழித்தலைச்சப்ட் ஸ்ரீக்கட்டுக்குச் சேர்ந்த மிட்டாக்காட்டுப் புத்தூர் அரசன் கண்ணூர் பாட்சல் செய் இ யென் சொந்தமான கிரயசாஜன முள்ள நிலம் இதற்கு முன் காவல் கண்ண நூறுற்யெளுலும் குன்னுடையான் பெறாலும் கூட்டுப்பட்டாவா இருந்து தார் காலத்தில் யென்தோ பயன்பதி றாச்சியமாய் நானும் அனுபவித்து ய்யப்பட்ட நிலத்தை நாளது தேதியில் உன்னிடத்தில் வாழைக் குத்தகைக்கு

அடைத்து வருடம் நாள் தேதி 75 இந்த ரூபாய் யெழுப்பத்தைந்தில் சர்காறத்தீறவை ரூபாய் 41 போக மீதி ரூபாய் (34) முப்பத்தி நாலு ரூபாயும் நாளது தேதியில் னன்றெ இந்த முறி நாறு ரூபாயும் நாளது தீடயில் றொ....

இன்று முதல் இறாசா வருஷ சர்கார் தீர்வையை நீயே செலுத்தி ரசீது வாங்கி யென்னிடம் கொடுப்பாயாகவும் கொடுயப்பது மன்னியில் வாழையை அனுபவித்துவரையில் அனுபவித்துக் கொண்டு மேறபடி நிலத்தை யென்னிடம் விட்டு விடுவாயாகவும். அதிலிருக்க கழிவு வாழையை பலன் செய்து! சாத்துவை சூரபரிய நதம் நீயே வெட்டிக் கொள்ளுவாயாகவும் இந்தப்படிக்கு நாங்கழிருபேரும் னேறுசியால் யெழுதிகொடுத்த வாழைக்குத்தகைச் சீட்டு இந்திப்படியே பொன்னம்பலம் சம்மதி இதற்கு சாச்சி வாத்துக்கார மாரிமுத்து அம்பலகாரன் அரிவேன். நாகை நல்லூர் பழநியாண்டி மூப்பன் அரிவேன் மேறபடியூரில் வேம்படி மகன் ஆறுமுக மூப்பன் அரிவேன யெழுதியது ஆனைக்கல்பட்டி பழனிவேலப்ப பண்டாரத்தின் மகன் முத்துவேலப்ப பண்டாரம்".

// முற்றும் //

ஓலைச்சுவடிகளில் எழுதுவதற்குப் பின்பற்றிய தொழில்நுட்பங்கள்

(TECHNIQUES OF WRITING IN PALM LEAF MANUSCRIPTS)

முனைவர். க. கணேசன் M.A., B.Ed., M.L.I.S., Ph.D.
உதவி நூலகர், மெரினா வளாக நூலகம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

இந்தியா, இலங்கை, மலேசியக் கடற்கரை முதலிய பகுதிகளில் எளிதாகவும் மலிவாகவும் கிடைத்த பனைஓலைகளை அங்கு வாழ்ந்த மக்கள் எழுதுவதற்குப் பயன்படுத்தினார்கள். அவ்வாறு எழுதும்போது அவர்கள் கையாண்ட தொழில்நுட்பங்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பனை ஓலையின் வகைகள்

பனை பல வகை இருப்பினும் எழுதுவதற்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட ஓலைகள் இரண்டு வகைப்படும். அவை,

(1) தாளிப்பனை (Talipot Palm–Corypha Umbraculifera L.)

(2) நாட்டுப்பனை (Plamyra–Borassus Flabelliformis L.) என்பனவாம்.

அவ்விரண்டு வகை தவிர மூன்றாம் வகையான லந்தர் பனை (Coripha Utan) ஓலைகளும் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

தாளிப்பனை ஓலைகள் மிகவும் நீளமாகவும் நாட்டுப்பனை ஓலைகளை விட அகலமாகவும் மிக மெல்லியதாகவும் வழவழப்பாகவும்

இருக்கும். அவை நன்கு வளைந்து கொடுக்கும் தன்மையும் கொண்டவை. அவற்றை மிகவும் முக்கியமான நூல்களை எழுதப் பயன்படுத்தினர். தாளிப்பனை ஓலையை இந்தியாவில் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டதை கி.பி.7ஆம் நூற்றாண்டில் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்த யுவான்சுவாங் (Hiuen Tsang) என்ற சீனப்பயணி தாம் எழுதி வைத்த பயணக் குறிப்பில் கூறியுள்ளார். கொங்கணபுரம் பகுதியில் பயிரிடப்பட்ட தாளிப்பனை மரங்களின் ஓலைகளையே தென்னிந்தியாவிலிருந்த புத்தத் துறவிகளும் மற்ற சமய மடங்களில் வாழ்ந்த நோன்பிகளும் எழுதுவதற்கு மிகுதியாகப் பயன்படுத்தினர் என்று குறிப்பிட்டுள்ளார். அவை மையை உறிஞ்சும் தன்மையும் உடையன. ஆதலால் மை கொண்டும் அவற்றில் எழுதியுள்ளனர்.

நாட்டுப்பனை தென்னிந்தியாவில் அதிகமாக வளர்கின்றது. இங்கிருந்து இந்தியாவின் கிழக்குப் பகுதிக்கு அறிமுகப்படுத்தப் பட்டது. அவ்வகைப் பனை மரங்களின் ஓலைகள் தடிமனாக இருக்கும். தாளிப்பனை ஓலைகளை விட அகலம் குறைவாக இருக்கும். அவற்றை எழுத்துக்கள் எழுதிப் பயிற்சி பெறுவதற்கும் மிக முக்கியமில்லாத குறிப்புகளை எழுதுவதற்கும் பயன்படுத்தினார்கள்.

ஓலை பதம்பார்த்தல்

ஏடுகள் எழுதப் பதமாக இருக்கின்றனவா என்று அறிய எழுத்தாணியால் சுழித்துப் பார்ப்பர். சுழிக்க எளிமையாக இருந்தால் எழுதத் தொடங்குவர். எழுத்தாணி சிக்கினால் ஏடு ஈரமாக உள்ளது என்றும், எழுதும்போது கொர கொரவென்று சத்தம் ஏற்பட்டு ஓலையில் துளை விழுதல், ஓலை முறிதல் முதலியன ஏற்பட்டால் மிகுதியாக உலர்ந்து விட்டது என்றும் அறிந்து சிறிது உலர விட்டோ அல்லது ஈரமாக்கியோ பதமாக்குவர். அவ்வாறு ஓலையின் தலைப்பில் சுழித்துப் பதம் பார்க்கும் முறையே பிற்காலத்துப் 'பிள்ளையார் சுழி' இடும் வழக்கமாயிற்று போலும்.

ஓலைச்சுவடியில் எழுதும் முறை

பனை ஓலைகளில் இரண்டு வகையாக எழுதியுள்ளனர். அவை,

அ. ஓலைகளின் மீது எழுத்தாணி கொண்டு அழுத்தமாக எழுதி (கீறி) எழுத்துக்களைப் பொறித்தல்.

ஆ. இயற்கையாகத் தயாரிக்கப்பட்ட மையினால் எழுதுகோலைக் (பேனா) கொண்டு எழுதுதல்.

எழுத்தாணியைக் கொண்டு எழுதும் முறை தென்னிந்தியா விலிருந்து மற்ற தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்றிருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. பெரும்பாலும் எழுத்தாணியைக் கொண்டு எழுதிய பிறகு மையிடும் முறை கையாளப்பட்டுள்ளது.

எழுத்தாணியால் எழுதும் முறை

எழுதுபவர்கள் எழுத்தாணியை வலக்கையிற் பிடித்துக் கொண்டு இடக்கைப் பெருவிரல் நகத்தில் சிறிதளவு பள்ளஞ்செய்து அந்த இடத்தில் எழுத்தாணியைச் சார்த்திக் கொண்டு எழுதுவார்கள். தாள்களில் பேனாவினால் நாம் எழுதும்போது எழுதுகோல் நகரும், தாள் ஒரே இடத்தில் இருக்கும். ஆனால் சுவடியில் எழுதும்போது எழுத்தாணி ஒரே நிலையாக இருக்கும். இடதுகை விரல்களால் ஏட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக இடதுபக்கம் நகர்த்துவார்கள். இக்காலத்தில் காகிதத்தில் எழுதுவதைப் போன்ற வேகத்துடன் அக்காலத்தில் ஏட்டில் எழுதுவதுண்டு. மாணாக்கர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாக வேண்டுமென்று ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தனித்தனி ஏடுகளில், தாம் மேலே எழுதி அவைப்போல் எழுதிவரச் சொல்லுவார்கள் அதற்குச் சட்டமென்று பெயர்.

மையால் எழுதும் முறை

தென்னாட்டில் பொதுவாக மையால் எழுதும் வழக்கம் இருந்ததில்லை. வடநாட்டுச் சுவடிகளில் பல ஓவியங்கள் வரையப் பெற்று வண்ணங்களும் தீட்டப்பெற்றுள்ளன. கைக்கடக்கமான

மிகச்சிறிய சுவடிகளும் காணப்படுகின்றன. சுமார் இரண்டு அங்குல நீளமும் ஒரு அங்குல அகலமும் கொண்ட சுவடியில் 'துர்கா சப்தசதி' முழுவதும் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்ட சுவடி ஒன்று தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ளது. வண்ண ஓவியங்களடங்கிய பல சுவடிகளும் அங்கு இடம்பெற்றுள்ளன. கொழும்பு அருங்காட்சியகத்தி லும் வண்ண ஓவியங்கள் வரையப்பட்ட சுவடிகள் உள்ளன.

எழுத்தாணியின் வகைகள்

ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பலவகை உண்டு. எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவதுண்டு. மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி. குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகளாகும். ஒரு பக்கம் வாருவதற்குக் கத்தியும் மறுபக்கம் எழுதுவதற்கு எழுத்தாணியும் அமைந்ததைப் பார்த்தே 'பேனாகத்தி' என்ற பெயர் வந்தது என்று தோன்றுகிறது. ஒரு பக்கத்தில் இரண்டு கத்திகளும் மறுபக்கத்தில் இரண்டு எழுத்தாணிகளும் உள்ள மடக்கெழுத்தாணிகளும் இருந்தன. ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துக்களாக, இருபது முதல் முப்பது வரி வரையில் எழுதுவதற்குரிய மெல்லிய கூர்மையான எழுத்தாணிகள் இருந்தன. அவை பெரும்பாலும் இரும்பால் செய்யப்பட்டவை. நம் அரசர்கள் பொன்னால் செய்யப்பட்ட எழுத்தாணியைக் கொண்டு பொற்றகடுகளில் எழுதியதாக வரலாறுகள் நமக்குக் கூறுகின்றன. மேலும் வெள்ளி, செம்பு, பித்தளை முதலிய உலோகங்களினாலும் எழுத்தாணியைச் செய்துள்ளனர். அதன் முனைப்பகுதி எஃகு (Steel) ஆல் செய்யப்படுவதால் மிகவும் கூர்மையாக இருக்கும். அவ்வெழுத்தாணிகளில் சிலவற்றைப் படத்தில் காணலாம்.

கத்தியுடன் கூடிய மடக்கெழுத்தாணியும் அதை வைக்கும் உறையும்

பல்வகையான எழுத்தாணிகளும் அவற்றை நிறுத்தும் கூடும்

எழுத்தாணியைத் தயாரிக்கும் முறை

எழுத்தாணியினால் எழுதும்போது விரல்களுக்கு அதிக

கடினத்தைக் கொடுக்காமலும் அதே நேரத்தில் எழுத்தின் வடிவம் நன்றாக அமையவும் எழுத்தாணியின் வடிவம், உயரம், எடை முதலியவற்றை ஒரு சூத்திரத்தின் அடிப்படையில் செய்தனர். எழுத்தாணியின் உயரம் பொதுவாக 10 செ.மீ. முதல் 12 செ.மீ. ஆக இருக்கும். அதன் உயரம் எவ்வளவாக இருப்பினும் அது நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை சேத்ரா (Chatra - Sun-shade), பத்ரா (Patra-leaf), நளா (Nala-tube), காண்டம் (Gandam-ball), லேகானியா (Lekaniya – the writing length) எனப்படும். அப்பெயர்கள் அந்தந்தப் பகுதியின் வடிவத்திற்கு ஏற்ப வழங்கப்பட்டுள்ளன. அவ்வாணி மொத்தம் 20 சம பாகங்களாகப் பிரிக்கப்பட்டு அவை முறையே சேத்ரா நான்கு, பத்ரா இரண்டு, நளா மூன்று, காண்டம் ஒன்று, லேகாணியா பத்து என்ற அளவின்படி செயல்பட்டன.

எழுத்தாணியைக் கூர்மை செய்யும் முறை

உலோகத்தினாலான மிகவும் கூர்மையான எழுத்தாணியால் எழுதுவோர் மற்றும் படியெடுப்போர் தேவைப்படும் போதெல்லாம் அவ்வாணியைக் கூர்மைப்படுத்துவதற்காக எண்ணெய் பூசப்பட்ட ஒரு வகைக் கல்லை தன்னிடம் வைத்துக் கொண்டு கூர்மை செய்வர். ஓலையில் எழுதும்போது மிகவும் நுட்பமாக அவ்வாணியைப் பயன்படுத்தியுள்ளனர்.

எழுத்தாணியால் எழுதும் நுட்பம்

ஓலையில் எழுதும் போது எழுத்தாணிக்கு மெல்லிய அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். ஓலையின் இரு பக்கங்களையும் எழுதப் பயன்படுத்துவதால் ஒரு பக்கம் எழுதிய எழுத்தின் வடிவம் மறுபக்கம் தெரியாதவாறு அழுத்தம் கொடுத்தல் வேண்டும். அதே நேரத்தில் எழுத்தின் வடிவம் நன்கு தெரியும்படி எழுதுதல் வேண்டும். மேலும், எழுதும் கொம்புகள் சுழிகள் முதலியவை நன்கு முறையாக அமையும்படி பண்டைக் காலத்தில் எழுதினார்கள்.

எழுத்துக்களின் மீது கரிய மையை நிரப்புதல்

எழுத்தாணியால் எழுதிய ஓலைச் சுவடிகளின் மீது இலைச் சாற்றைப் பூசினாலும் அல்லது எண்ணெயைப் பூசினாலும் அதனுடன் சாதாரணக் கரித்தூளையோ விளக்குப் புகையினால் கிடைத்த கருநிற மையையோ கலந்து பூசினார்கள். இவ்வாறு பூசும்போது இக்கருமையான மை எழுத்தாணியால் கீறி எழுதப்பட்ட எழுத்துத் தடயங்களில் நிரப்பப்பட்டது. பின்னர் மென்மையான துணியால் மென்மையாகத் துடைத்து ஏட்டின் மற்ற பகுதிகளிலுள்ள கரித்தூள்களை அகற்றினார்கள். இவ்வாறு அவ்வெழுத்துப் படிவங்களின் மீது கரிய மையை நிரப்புவதால், எழுத்துக்களின் வடிவங்கள் தாளில் பேனாவினால் எழுதப்பட்ட எழுத்துக்களைப் போன்றே மிகவும் தெளிவாகத் தெரிந்தன. அதே நேரத்தில் இக்கரித்தூள் பூச்சிகளின் தாக்குதலிலிருந்து சுவடியைப் பாதுகாக்க உதவியாக இருந்தது. இவ்வாறு குறைந்தது ஓராண்டிற்கு ஒரு முறையாவது எண்ணெய் பூசப்பட்டது.

இப்போது நாம் பேனாவில் மையை நிரப்பிக் கொண்டு எழுதுகின்றோம். ஆனால் ஓலையில் எழுத்தாணியால் எழுதியவர்கள் எழுதி முடித்த பிறகு எழுத்துக்களின் மீது மையை நிரப்பினார்கள்.

பண்டைக் காலத்தில் உலகெங்கிலும் பனை ஓலையைத் தவிர வேறெந்த கரிம எழுதுபொருளிலும் இவ்வாறு எழுத்துக்களை பொறித்ததாகத் (Engraved) தெரியவில்லை. பேபிரஸ், தோல் முதலியவற்றிலும் மையைக் கொண்டே எழுதுகோலால் அல்லது தூரிகையால் எழுதியுள்ளனர். நம் முன்னோர்கள் பின்பற்றிய இம்முறை ஒரு அரிய கண்டுபிடிப்பேயாகும்.

மேலும், ஓலை அழியும் வரை அதில் எழுதிய எழுத்துக்கள் மறைவதில்லை. எழுத்துக்கள் சற்று மங்கலானவுடனே மையைப் பூசி மீண்டும் புதுப்பித்துக் கொள்ளலாம்.



ஓலைச்சுவடிகளுக்கு எண்ணெயுடன் கரித்தூள் கலந்து பூசும் முறை

எழுத்தின் அளவு

பொதுவாக ஒரு செ.மீ. நீளத்தில் 7 அல்லது 8 எழுத்துக்கள் வரை எழுதலாம். மேலும் 2 செ.மீட்டரிலிருந்து 2 ½ செ.மீ. அகலமுள்ள ஓலையில் எட்டிலிருந்து பத்து வரிகள் வரை எழுதலாம். அதே நேரத்தில் இதற்கு விதிவிலக்காக சில உள்ளன. மனனம் (Sutra) செய்யும் மகா பிரித்தி, போடா (Pota) போன்ற நூல்களிலுள்ள எழுத்துக்களின் அளவு மிகவும் பெரியதாக உள்ளன.

அதாவது, ஒரு செ.மீ.க்கு நான்கு எழுத்துக்களாக, இரண்டிலிருந்து இரண்டரை செ.மீ. அகலமுள்ள ஓலையில் நான்கு வரிகள் எழுதப்பட்டுள்ளன.

இலங்கையில் சிங்கள மொழியில் மூன்று வகையான அமைப்பைக் கொண்ட எழுத்துக்களை எழுதியுள்ளனர். அவை (அ) யானை வடிவ எழுத்துக்கள். அவை முழுமையாகவும் வட்ட வடிவமாகவும் அமைந்திருக்கும். (ஆ) சிங்க வடிவ எழுத்துக்கள்; அவ்வெழுத்துக்கள் நீண்டு காணப்படும். (இ) அன்ன வடிவ எழுத்துக்கள். அவை மெல்லியதாகவும் சிறியதாகவும் இருக்கும். அவ்வெழுத்துக்களின் வடிவத்தை வைத்தே அச்சுவடி எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது என்று கணித்துவிடலாம்.

தமிழ்ச் சுவடிகளிலுள்ள எழுத்தின் வடிவங்கள்

தமிழ்ச் சுவடிகளின் எழுத்து முறைக்கும் இன்றைய நடைமுறை எழுத்திற்கும் பல வேறுபாடுகள் உள. ஓலைச் சுவடிகளில் சொற்கள், செய்யுட் சீர்கள், அடிகள் இவற்றிற்கிடையே இடம் விடாமல் தொடர்ந்து சங்கிலித் தொடர்போல எழுதப்பெற்றிருக்கும். முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி போன்ற நிறுத்தக் குறிகள் இருக்கா. செய்யுள்களும் அடி பிரித்து எழுதப்படாமல் ஒரே தொடர்ச்சியாக எழுதப்பெற்றிருக்கும்.

தமிழ்ச் சுவடிகளில் மெய்யெழுத்தைச் சுட்ட அதன்மேல் புள்ளியிடுவதில்லை. அவ்வெழுத்தின் இடத்தைக் கொண்டே அது உயிர்மெய்யா அல்லது மெய்யா என அறிதல் வேண்டும். குறிலுக்கும் நெடிலுக்கும் ஒற்றைக் கொம்பு ஒன்றே எழுதப்படும். சுவடியில் கோடு, சேவி என்ற சொற்கள், கொடு, செவி என்றே பொறிக்கப்பட்டிருக்கும். இடம் நோக்கித்தான் சொல்லை அறிய வேண்டும். மேலும் உயிர்மெய்யின் நெட்டெழுட்தைக் காட்டும் காலிற்கும் (ா), ரகத்திற்கும் வேறுபாடு இருக்காது. "சாம" என்று சுவடியில் காணப்பட்டால் அதனைச் சரம, சாம, சாம், சர்ம என நான்கு வகையாகப் படிக்கலாம். எது பொருள் தொடர்பிற்கும் யாப்பிற்கும் பொருந்துகிறதோ அதனையே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி உ.வே.சாமிநாதைய்யர் கீழ்க்காணுமாறு கூறுகிறார்.

"இது கொம்பு, இது சுழி என்று வேறு பிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துக்குப் புள்ளியே இராது. ரகரத்திற்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சாபம் சரபமாகத் தோன்றும். ஓரிடத்தில் சரடு என வந்திருந்த வார்த்தையை நான் சாடு என்று பல காலம் எண்ணி வந்தேன். 'தரன்' என்பதைத் 'தான்' என்று நினைத்தேன். இடையின ரகரத்திற்கும் வல்லின றகரத்திற்கும் பேதம் தெரியாமல் மயங்கின இடங்கள் பல."

சுவடிகளின் உள் அமைப்பு

சுவடிகளில் எழுதப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் சுவடியின் உள்ளமைப்பை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை

முறையே சுவடியின் மேற்பகுதி, சுவடியின் இடைப்பகுதி, சுவடியின் இறுதிப்பகுதி ஆகும். மேற்பகுதி என்பது சுவடியின் தொடக்க ஏட்டிலிருந்து மூலநூல் தொடங்கும் ஏடு வரை அமையும். இரண்டாவதாக இடைப்பகுதி என்பது மூலநூல் தொடங்கிய ஏட்டிலிருந்து அது முடியும் ஏடுவரை அமையும். இறுதிப்பகுதி என்பது நூல் முடிந்த பிறகு அமையக்கூடிய பிற ஏடுகள் பற்றியதாக அமையும்.

ஏட்டினை எழுதத் தொடங்குவோர் ஏட்டின் இடப்பக்க ஓரத்தில் சிறிது இடைவெளிவிட்டும் வலப்பக்க ஓரத்தில் சிறிது இடைவெளி விட்டும் விடாமலும் எழுதுவது மரபு. ஏட்டின் துளைகளைச் சுற்றி சிறிது இடம் விட்டு எழுதும் பழக்கம் பொதுவாக பின்பற்றப்பட்டது. இப்படி ஏடு எழுதத் தொடங்குவோர் நூலின் இடது ஓரத்தில் நன்றாக குரு வாழ்க, குருவே துணை என்ற முகமன் கூறுவது பெரும் வழக்கமாக உள்ளது.

மேலும் உ.வே. சாமிநாதையர் நூலகத்திலுள்ள திரிகூடராசப்பக் கவிராயர் எழுதிய குற்றாலீஸ்வரர் தல புராணம் என்னும் சுவடி மொத்தம் 112 ஏடுகளை உடையது. அதன் முதல் ஏட்டில் இடப்புறத்தில் அதன் தலைப்பை மிகுந்த கலை நுட்பத்துடன் எழுதியுள்ளதைக் காண முடிகிறது.

அந்நூல் குற்றாலீஸ்வரனைப் பற்றிக் கூறுவதால் அதன் தலைப்பு சிவலிங்க வடிவில் எழுதப்பட்டுள்ளது. அதாவது, 'திருக்குற்றாலம் தலபுராணம் காந்தத்தில் சங்கீதையில் தான வைபவ கண்டம் திருநதிச் சருக்கம் பாயிரம் நன்றாக' என்ற சொற்றொடர் அந்த லிங்க வடிவத்திற்குள் அடக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சுவடியின் கருத்திற்கு ஏற்ப எழுத்துக்களைக் கொண்டே ஓவியமாக வரையப்படுவதால் அதனைச் சொல்லோவியம் என்று அழைக்கின்றோம்.

மேலும் சுவடியில் ஒரு வாக்கியம், பத்தி, பிரிவு, இயல் முதலியன முடியும் இடத்தைக் குறிக்கும் நோக்கில் சில குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை, காக்கைப் பாதம் (Kakpada – Crow's feet) " என்ற குறியீடு ஒரு வாக்கியம் முடியும் இடத்தில்

இடப்படும். அடுத்தது குண்டலியா (Kundaliya – Serpent Shape) ~ என்ற குறியீடு ஒரு பத்தி (Paragraph) முடியும் இடத்தில் இடப்படும். இரண்டு அல்லது மூன்று குண்டலியாக்கள் '~~' அல்லது '~~~' என்ற குறியீடு ஒரு பிரிவு (Section) முடிகின்ற இடத்தில் இடப்படும். ஒரு இயல் (Chapter) முடியும் இடத்தில் இரட்டை மூன்று குண்டலியாக்களைப் '~~~ ~~~' பயன்படுத்தியுள்ளனர்.

சுவடியில் பிராமி, கிரந்த எழுத்துக்கள்

கி.பி. முதலாம் நூற்றாண்டுச் சுவடிகள் எல்லாம், குறிப்பாக இலங்கையில் பிராமி (Brahmi) எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலும் புத்த நூல்கள் இவ்வெழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. கி.மு. 88 ஆம் ஆண்டில் ஆட்சி செய்த வாதகாமுனி (Vattagāmuni) என்ற மன்னர் காலத்தில் எழுதப்பட்ட 'திரிபீடகா' (Tripitaka) என்ற நூலிலும் இதே எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அந்நூலுக்குப் பிற்காலத்தில் கி.பி.432 இல் எழுதப்பட்ட விளக்க நூல்கள் பாலி (Pali) மொழியில் எழுதப்பட்டுள்ளன. இலங்கையைப் பொருத்தமட்டில் பாலி மொழி புத்த மதத்தின் மொழியாகவும், சமசுகிருதம், அறிவியல் மற்றும் கலைகளைக் கற்கும் மொழியாகவும் கருதப்பட்டன. இந்தியாவில் ஏற்படும் எழுத்து மாற்றங்களின் தாக்கம் இலங்கையிலும் அதே காலத்தில் ஏற்பட்டுள்ளது. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவர்கள் காலத்தில் முற்காலக் கல்வெட்டுகளில் காணப்பட்ட பிராமி எழுத்துக்கள் மாற்றப்பட்டுள்ளன. வடமொழி நூல்களை உணர இயலாததாலும், கிரந்த எழுத்து பெரும்பாலும் வழக்கற்று வருகிறது. கிரந்த எழுத்துக்களில் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற ஐந்து எழுத்துக்களை மட்டும் இன்றும் நடைமுறையில் பயன்படுத்தி வருகின்றார்கள்.

ஒரு சுவடிக்கட்டில் பல நூல்களும் ஒரே நூல் பல சுவடிப் படிகளாகவும் இருத்தல்

ஒரு சுவடிக்கட்டில் பல நூல்களை எழுதி அக்கட்டிற்கு ஒரு பொதுப்பெயர் இட்டுள்ளதைக் காண முடிகிறது. பாரிசு தேசிய

நூலகத்தில், (Bibliotheque Nationale, Paris, France) முந்நூற்று ஐம்பத்தாறு ஏடுகள் அடங்கிய ஒரு சுவடி 'பன்னூற்றிரட்டு' என்னும் தலைப்பில் சுமார் அறுபது நூல்களை உள்ளடக்கியது. இதில் ஞான அம்மானை, ஞானமணி மாலை, தெளிவுண்மை போதம், சொற்கேட்ட மாலை, சோதி சேகர் விளக்கம், உண்மைப் பயனகவல் முதலான பல புதிய நூல்கள் அடங்கியிருக்கக் காணலாம். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடி நூலகத்தில் ஒரே நூல் பல சுவடிப் படிகளாக உள்ளன. பிரபுலிங்க லீலை, பெரிய புராணம், திருவாதவூரர் புராணம், உலகநீதி போன்றவை ஒவ்வொன்றும் பத்துப் பத்துச் சுவடிக்கு மேல் உள்ளன. உ.வே. சாமிநாதையர் நூலகத்திலுள்ள ஒரு சுவடிக்கட்டில் (சுவடி எண். 542) சிவகாமவல்லி விருத்தம், வெங்கடாசலபதி விருத்தம் எனத் தொடங்கி மொத்தம் 17 நூல்கள் அடக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்நூலகத்தில் தொல்காப்பியத்திற்கு மட்டும் மொத்தம் 27 சுவடிகள் உள்ளன. இவை அனைத்துமே தொல் காப்பியத்தைச் செம்மையாகப் பதிப்பிக்க உ.வே.சாமிநாதையரால் பல இடங்களிலிருந்து திரட்டப்பட்ட சுவடிகளாகும். தொல்காப்பியத்திற்கு இன்று உலகம் முழுவதும் 133 சுவடிகளுக்கு மேல் உள்ளன.

படி எடுக்கக் கற்றல்

சுவடிகளைப் படி எடுப்பது என்பது ஒரு சிறந்த கலைநுட்பச் செயலாகவே கருதப்பட்டது. அதற்குப் பயிற்சியும் திறமையும் தேவைப்பட்டன. ஓலைகளில் எழுதும் கலையைப் புத்தமதப் பள்ளிகள் கற்றலின் ஒரு கூறாகவே கருதின. கற்றலின் முதல் கட்டமாக மணலில் எழுத்துக்களை எழுதும் முறை கடைப்பிடிக்கப்பட்டது. சலிக்கப்பட்ட சன்னமான மணல் ஒரு பலகையின் மீது நிரப்பப்பட்டு அது தரை அல்லது ஒரு மேசையின் மீது வைக்கப்படும். முதலில் ஆசிரியர் ஒவ்வொரு எழுத்தாகப் பெரிய உருவில் எழுதுவார். அதனை மாணவன் திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டே அதன் மீது தனது நடுவிரலால் எழுத வேண்டும். தலைப்பகுதியில் தொடங்கி அடிப்பகுதியில் சரியாக முடித்தல் வேண்டும். எழுத்தின் உச்சரிப்பு

மற்றும் அதன் வடிவம் நன்றாக மனதில் படியும் வரை திரும்பத் திரும்ப அதன் மீது மாணவன் எழுதிப் பார்த்தல் வேண்டும். ஒவ்வோர் எழுத்தையும் கையை எடுக்காமல் தொடர்ச்சியாக எழுதப் பழகிக் கொள்ளுதல் மிகவும் தேவை.

இரண்டாவது கட்டமாக எழுதும் பயிற்சியை நாட்டுப்பனை ஓலைகளில் எழுதப் பயிற்றினர். அதன் மீது முதலில் ஆசிரியர் சற்றுக் கூர்மை குறைவான எழுத்தாணியால் எழுதுவார். பிறகு மாணவர்கள் அதன் மீது எழுத்தாணியால் எழுத வேண்டும். இம்முறைக்கு உள்கட்டுவா (Ulkatuva) என்று பெயர். எழுத்துக்களின் மீது மாணவனால் திரும்ப திரும்ப எழுத வேண்டும். எழுத்துக்களின் வடிவத்தில் அவ்வோலை துண்டிக்கும் வரை எழுதுதல் வேண்டும். அவ்வாறு எழுத்துகள் துண்டிக்கும் (Cut) வரை எழுதுகின்ற பயிற்சியை சட்டஹான் கபுமா (Satahan Käpuma) என்று அழைத்தனர்.

மூன்றாவது கட்டப் பயிற்சியில் ஆசிரியர் தாளிப் பனையில் எழுதுவார். அது மிகவும் பதப்படுத்தாத (Rough) சாதாரண ஓலையாக இருக்கும். அதில் ஆசிரியர் ஓலையின் தலைப்பில் ஒரு வரி முழுக்க எழுதுவார். இது ஒரு மாதிரி (Model) வரியாக அமையும். பின்னர் மாணவர்கள் அதே வரியை திரும்பத் திரும்ப ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதுவார்கள். அப்படி எழுதக் கூர்மையான எழுத்தாணியை மாணவர்கள் பயன்படுத்துவார்கள். மேலும் அப்பயிற்சியினால் எழுத்துக்களை நேர்கோட்டில் பொறிப்பதற்குப் பழகுவார்கள்.

இறுதிக்கட்டப் பயிற்சியில் மாணவர்கள் தாளிப்பனை ஓலைகளில் மிகவும் சிறிய எழுத்துக்களில் எழுதிப் பயிற்சி எடுப்பர். இம்முறைதான் பிறகு சுவடிகள் எழுதப் பயன்படுத்தப்பட்டது.

படி எடுப்பவர் சுவடியைப் பார்த்த அளவில் சொற்களையும் சொற்றொடர்களையும் உடனே கண்டறிந்து படி எடுக்கும் திறமை உடையவராக இருத்தல் வேண்டும். அவர் படி எடுக்கும் மூலச் சுவடியில்

ஏதாவது தவறுகள் இருந்தால் அவற்றைத் திருத்தி எழுதும் திறமையும் பெற்றிருந்தனர். இவ்வாறு சுவடிகளில் எழுதுவதை புத்தமதத் துறவிகள் அதிகமாக ஆற்றினர். மேலும் சாதாரண மனிதர்கள் சிலரும் பயிற்சி பெற்று வணிக வகையில் பயன்படுத்தினர். தென்னிந்தியா, சீனா, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகள் புத்தமத நூல்களையும் மற்றும் அதன் விளக்க நூல்களையும் உடனுக்குடன் இலங்கையிலிருந்து பெற்றுக் கொண்டன.

நம் நாட்டின் மரபுவழிச் செல்வங்களான இச்சுவடிகளைப் போற்றிப் பாதுகாத்திட சுவடிப் பயிற்சியும் பாதுகாப்பு உணர்வும் நமக்கு மிகவும் இன்றியமையாதவைகளாகும்.

துணை நின்ற நூல்கள்

1. கோபாலையர், தி.வே., **சுவடியியல்**; சுவடியியல் சுவடுகள், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயா கலை அறிவியற் கல்லூரி, கோயம்புத்தூர், 1999.
2. பெருமாள், ப., **சுவடிப் பாதுகாப்பியல்**, பாவை வெளியீட்டகம், தஞ்சாவூர், 2000.
3. சுப்பிரமணியம், பூ., **சுவடியியல்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1991.
4. இராமன், மு.கோ., **சுவடிப் பயிற்சியும் பதிப்பு நுட்பங்களும்**; சுவடிப் பதிப்புத்திறன்,

   சா. கிருட்டிணமூர்த்தி (பதி.) முதலானோர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.
5. மாதவன், வே. இரா., **சுவடிப்பதிப்பியல்**, பாவை வெளியீட்டகம், 2000.

Rudolf, A.F., **An Epigraphical Note on Palm Leaf Paper and Birch Bark**, Journal of the Asiatic Society of Bengal (J.A.S.B.), Vol.LXIX, Part-I, 1900.

De Silva, W.A., **Catalogue of Palm Leaf Manuscripts**, Colombo Museum, Colombo, Vol.1, 1938.

***

பண்டைக்கால எகிப்தியரின் பேபிரஸ் சுவடிகள்

(PAPYRUS MANUSCRIPTS OF ANCIENT EGYPTIANS)

முனைவர். க. கணேசன் M.A., B.Ed., M.L.I.S., Ph.D.
உதவி நூலகர், மெரினா வளாக நூலகம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

சுவடிகள்

மிகப்பழங்காலத்தில் அல்லது இடைக்காலத்தில் எழுதப்பெற்ற எழுத்துப் படிவங்களைக் குறிப்பதற்குச் 'சுவடி' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது, இதனைப் பொதுவாகக் கையால் எழுதிய நகல் என்றும் பொருள் கொள்ளலாம். தமிழில் 'சுவடி' என்று அழைக்கப்படும் இச்சொல் ஆங்கிலத்தில் 'Manuscript' எனக் கூறப்பெறுகிறது, சுவடு உடையதால் இது சுவடி என்ற காரணப் பெயரைப் பெறுகிறது. பனை ஓலைகளில் எழுதப்பட்ட சுவடிகள் ஓலைச்சுவடிகள் என்றும், தாளில் கையால் எழுதப்பட்ட சுவடிகள் காகிதச் சுவடிகள் என்றும் பேபிரஸ் தாள்களில் எழுதப்பட்ட சுவடிகள் பேபிரஸ் சுவடிகள் என்றும் அதன் அதன் பெயரில் அழைக்கப்படுகின்றன.

பேபிரஸ்

பண்டைக் காலத்தில் எகிப்தியர்கள் பேபிரஸ் என்ற தாவரங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட தாள்களையே பெரும்பாலும் எழுதுவதற்குப் பயன்படுத்தியுள்ளனர். அந்நாட்டிலுள்ள சிற்பங்களும் பண்டைக்கால கோயில்களின் சுவர்களில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும் இதனை எடுத்துரைக்கின்றன. மேலும் அயலார் படையெடுப்பின்போது பாதுகாப்பதற்காக நிலத்தடியில் மறைத்து

வைக்கப்பட்ட ஆவணங்கள், புதையுண்ட பண்டைக்கால நகரங்களில் கிடைக்கும் பேபிரஸ் ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டு வருவதும் இதற்குச் சான்றுகளாகும். பிற்காலத்தில் கிரேக்கர், உரோமானியர், அரேபியர் முதலானோர்களும் பேபிரஸ் தாள்களை எழுதப் பயன்படுத்தினார்கள்.

இத்தாவரங்கள் உயரமாக வளர்ந்து பூக்கும் ஒரு வகை பெரிய கோரைப்புல் (Cyperus Papyrus L.) இனத்தைச் சேர்ந்தவையாகும். அவை பண்டை எகிப்து நாட்டில் நைல் ஆற்றங்கரையோரங்களில் வளர்ந்தன. குறிப்பாக, ஒவ்வொரு ஆண்டும் நைல் ஆற்றில் ஏற்படும் வெள்ளப்பெருக்கால் உண்டாகும் நீர்த்தேக்கங்களில் மிகுதியாக அவை வளர்ந்தன. சுமார் இரண்டு முழம் அல்லது அதற்குச் சற்று குறைவாக நீர் தேங்கியுள்ள நீர்நிலைகள் அவற்றிற்கு ஏற்றவையாக இருந்தன. இத்தாவரங்கள் கிளைகள் இல்லாமல் ஒரே தண்டாக நீண்டு வளரும் தன்மையுடையன. அதன் கீழ்த்தண்டின் சுற்றளவு மணிக்கட்டின் அளவிற்கு இருக்கும். அவை சுமார் பத்து முழம் வரை வளரும். வேர்ப்பகுதியிலிருந்து நுனி நோக்கி சற்று சிறுத்தும் காணப்படும். நுனிப்பகுதியில் விரிந்த பூ பூக்கும். அவற்றின் தண்டுப்பகுதி நார்த்தன்மையுடையது.



சிசிலித் தீவில் காணப்பட்ட சிரியன் வகையைச் சேர்ந்த பேபிரஸ் தாவரங்கள்

இன்று நாம் எழுதப் பயன்படுத்தும் காகிதத்திற்கு ஆங்கில மொழியில் வழங்கப்பெறும் பேப்பர் (Paper) என்ற சொல் பேபிரஸ் (Papyrus) என்ற இத்தாவரத்தின் பெயரிலிருந்து தோன்றியதேயாகும்.

பேபிரஸ் தாள்கள் தயாரித்தல்

பேபிரஸ் தாவரங்களை நைல் ஆற்றங்கரையோரங்களில் சேகரித்து அவற்றை எழுதுவதற்கேற்றவாறு தாள்களாகத் தயாரிக்கும் நுட்பத்தை எகிப்து நாட்டில் தீப்ஸ் என்ற இடத்திலுள்ள கல்லறைக் கோயில் சுவரில் காணப்படும் சித்திரங்கள் விளக்குகின்றன.



எகிப்தியர்கள் பேபிரஸ் தாவரங்களை நைல் ஆற்றங்கரையோரங்களில்

திரட்டித் தாள்களை ஆக்கும் நுட்பத்தை விளக்கும் சித்திரங்கள்

பேபிரஸ் தாள்கள் தயாரிக்க, வெட்டி எடுக்கப்பட்ட நார்ப்பகுதி நிறைந்த இத்தாவரத்தின் தண்டுப் பகுதியைக் கூர்மையான கத்தியால் மெல்லிய பத்தைகளாக (Strips) அதன் முழு நீளத்திற்கும் உரித்தெடுத்தனர். அதன் தண்டுப்பகுதி மூன்று பக்கங்களை (Triangular) உடையதாக இருந்ததால் பிளப்பதற்கு மிகவும் ஏற்றதாக இருந்தது. இவ்வாறு பிளந்தெடுக்கப்பட்ட ஒரு பத்தையின் விளிம்பை மற்றொரு பத்தையின் விளிம்புடன் செங்குத்தாகத் தேவையான அகலத்திற்கு ஒட்டினார்கள். பிறகு குறுக்குவாட்டிலும் இதே போன்று

ஒட்டினர். இவ்வாறு நெடுக்கும் குறுக்குமாக (Vertically and Horizontally) இரண்டு அடுக்குகளைக் (Two Layers) கொண்ட நெசவுப் பாணியையுடைய (Woven) தகடு போன்ற (Sheet) தாள்களைத் தயாரித்தனர். பிறகு அத்தாள்களை ஒன்றுடன் ஒன்று இணைத்து ஒரு நீண்ட சுருணையைத் (Roll) தயாரித்தனர். இவ்வாறு தயாரிக்கப்பட்ட ஒரு சுருணையில் சுமார் இருபது தகடுகள் அடங்கும். அதன் நீளம் தேவைக்கேற்றவாறும் மாறுபட்டன. அதுவே பேபிரஸ் சுருணை (Papyrus Roll) என்றழைக்கப்பட்டது. எழுதுவோர் தமக்கு வேண்டிய அளவு அச்சுருணையிலிருந்து ஒரு பகுதியை வெட்டி எடுத்துக் கொள்வதுமுண்டு.

பொதுவாக இச்சுருணைகள் 20 அடி முதல் 45 அடி நீளம் வரை இருக்கும். ஆனால் பெரிய ஹாரிஸ் பேபிரஸ் (The Great Harris Papyrus) என்ற சுருணை சுமார் 133 அடி நீளமுள்ளது. அது எழுதப்பட்ட காலம் கி.மு.1100 ஆகும். அதுவே இப்போது பாதுகாக்கப்பட்டு வரும் பேபிரஸ் சுருணைகளில் மிகவும் நீளமானதாகக் கருதப்படுகிறது. அது இப்போது பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இத்தாவரத்தில் இயற்கையாகவே ஈரத்தன்மையும் பசைத்தன்மையும் இருந்ததால் இதிலிருந்து தயாரிக்கப்பட்ட பத்தைகள் சுலபமாக ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டன. மேலும், போதுமான அளவிற்கு உறுதியளிக்கவும் ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பொருந்தவும் இப்பசைத்தன்மை மிகவும் ஏதுவாக இருந்தது. இவ்விணைப்பில் மேலும் திடத்தன்மையை உண்டு பண்ண சிறிது பசையும் பயன்படுத்தினார்கள். இவ்வாறு ஒன்றுடன் ஒன்றாக ஒட்டப்பட்ட பத்தைகளுக்குச் சிறிது அழுத்தம் கொடுப்பதற்காக இணைத்த பகுதியை மரச்சுத்தியால் மெல்ல அடித்தனர். பிறகு இதைச் சூரிய ஒளியில் உலர்த்தி இதன் மேற்பரப்பை வழவழப்பான சங்கு அல்லது தந்தத்தால் தேய்த்து நயமாக்கினர்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட பேபிரஸ் சுருணைகளில் சில குறைபாடுகள் ஏற்படுவதும் உண்டு. சில நேரங்களில் ஒட்டப்பட்ட இரண்டு அடுக்குகளின் (Two Layers) இடையில் நீர்த்துளிகள் மறைந்திருக்கும். ஒட்டிய பிறகு இதனை மரச்சுத்தியால் மெல்ல

அடிக்கும்போது அதற்கு அழுத்தம் கொடுப்பதுடன் அந்நீர்த்துளிகளும் வெளியேற்றப்படும். சிலவற்றில் புள்ளிகளும் கறைகளும் படிவதுண்டு. சில பத்தைகள் (Strips) நலிந்திருந்தால் அதில் எழுதும்போது அவ்விடத்தில் மை உள்ளே சென்று அத்தாளுக்குத் தீங்கு உண்டு பண்ணும். ஆதலால் இக்குறைபாடு இருப்பின் அதற்கு மாற்றாக மீண்டும் ஒரு புதிய தாளைத் தயாரித்தனர்.

மேலும் ஒரு தாளை மற்றொரு தாளுடன் இணைக்கும்போது நல்ல தரமான தாள்களை தொடக்கத்திலோ இறுதியிலோ இருக்கும்படி பார்த்துக் கொண்டனர். சற்று தரம் குறைந்த மற்ற தாள்களும் அவற்றின் தரத்திற்கேற்ப இரு முனைகளில் தொடங்கி நடுப்பகுதியை நோக்கி வரிசைப்படுத்தி ஒட்டப்பட்டன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட நீண்ட பாய் போன்ற தாளைச் சுருணையாகச் சுற்றும்போது சுருணையில் தரமான தாள்கள் வெளிப்புறத்திலும் தரம் குறைந்தவை உட்புறத்திலும் இருக்கும்.

அவற்றில் எழுதிய பிறகு அவ்வாவணங்களைப் பயன்படுத்தும் போது ஏற்படும் கிழிதல், கீறல் முதலியவற்றைத் தாங்கிக் கொள்ளவே தரமான தாள்களை வெளிப்புறத்தில் வரும்படிச் செய்தனர். முழுச்சுருணையையும் எழுதப் பயன்படுத்தாத போது எழுதாத மீதிப் பகுதியை வெட்டி எடுத்துக் கொண்டனர். இவ்வாறு செய்யும் போது தரம் குறைந்த நடுப்பகுதியே வெட்டப்படும்.

மேற்கண்டபடி தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு பேபிரஸ் சுருளும் ஒரு 'வால்யூமன்' (Volumen) என்று அழைக்கப்பட்டது. அது இலத்தீன் மொழிச் சொல்லாகும். அது சுழற்சி அல்லது உருளைப் போன்று சுற்றுதல் என்று பொருள்படும். அந்த வால்யூமன் என்ற சொல்லிலிருந்துதான் ஒரு புத்தகத் தொகுதிக்கு நாம் இன்று வழங்கும் 'வால்யூம்' (Volume) என்ற ஆங்கிலச் சொல் தோன்றியது.

எழுதும் முறை

பேபிரஸ் தாள்களில் செல்லும் நூல் போன்ற இழை நாளங்களுக்கு இணையாக எழுத்துக்களை எழுதினார்கள்.

பெரும்பாலும் ஒரு பக்கம் மட்டுமே எழுதப் பயன்படுத்தப்பட்டது. இருபுறமும் எழுதும் பழக்கம் மிகவும் அரிதாக இருந்தது. இவ்வாறு மறுபக்கமும் எழுதிய நூல்களைப் பார்க்கும்போது முன்பக்கத்தில் எழுதிய எழுத்துக்களைக் காட்டிலும் மறுபக்கம் எழுதிய எழுத்துக்கள் பிற்காலத்தில் எழுதப்பட்டவையாகவே இருந்தன. இலக்கிய நூல்களை நீண்ட சுருணைகளிலும் கடிதங்கள் மற்றும் கணக்கு வழக்குகளைத் தனி ஏடுகளிலும் எழுதினார்கள். இப்பேபிரஸ் தாளில் வரைபடங்கள், அட்டவணைகள் முதலியனவும் மிகவும் துல்லியமாக வரையப்பட்டன. வாடி அம்மாமட் (Wadi Hammamat) என்ற இடத்திலிருந்த தங்கச் சுரங்கத்தின் சாலைகளை விளக்கும் வரைபடம் ஒன்று கி.மு. 1300 ஆம் ஆண்டில் வரையப்பட்டுள்ளது. கி.மு. 800இல் பேபிரஸ் தாளில் 'டிமோடிக்' (Demotic) மொழியில் எழுதப்பட்ட கோள்களின் தொலைவு நிலையைக் கணக்கிடும் அட்டவணை ஒன்றும் கிடைத்துள்ளது.



கி.மு. 800இல் பேபிரஸ் தாளில் டிமோடிக் மொழியில் எழுதப்பட்ட
கோள்களின் தொலைவு நிலையைக் கணக்கிடும் அட்டவணை

அக்காலத்தில் பல வண்ண மைகள் பயன்பாட்டில் இருந்தபோதிலும் பேபிரஸ் தாள்களில் எழுதுவதற்குக் கருப்பு நிற

மையையே அதிகம் பயன்படுத்தினர். தலைப்பின் பெயர்கள் மற்றும் பெயர்களின் முதல் எழுத்து முதலியவற்றை எழுதவே சிவப்பு நிறத்தைப் பயன்படுத்தினார்கள்.

தொடக்க காலத்தில் நாணற்புல்லின் (Funcus Maritimus) நுனியைத் தூரிகையைப் போன்று மென்மையாக்கி அதில் மையைத் தொட்டு எழுதினார்கள். பிற்காலத்தில் அதையே இறகுப் பேனாவைப் போல் கூர்மையாக வெட்டி எழுதப் பயன்படுத்தினார்கள்.

பேபிரஸ் சுவடிகளைப் பாதுகாக்கும் நுட்பங்கள்

பேபிரஸ் தாள்கள் தாவரப் பொருட்கூறால் ஆனதால் எளிதில் அழியக்கூடிய தன்மையுடையதாக இருந்தன. எகிப்தின் வெப்பக்காற்றுடைய தட்பவெப்ப நிலை இவற்றிற்கு ஏற்றதாக இருந்தது. ஆனால் குளிர்ந்த தட்பவெப்ப நிலையுடைய ஐரோப்பிய நாடுகளில் இவற்றை நீண்ட நாட்கள் பாதுகாக்க முடிவதில்லை. அடுத்தது இவற்றைப் பெரும்பாலும் சுருணை வடிவில் சுற்றி வைத்ததால் பயன்படுத்துவோருக்கு இது தடையாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் படிக்க விரும்புவோர் அப்பகுதியை மட்டும் கண்டெடுப்பது மிகவும் சிரமமாக இருந்தது. ஆதலால் இவற்றின் இரு பக்கங்களையும் எழுதப் பயன்படுத்தவில்லை.

புத்தகப் புழுக்கள் (Book Worms) இந்தியாவில் ஓலைச் சுவடிகளை அழித்தது போலவே பேபிரஸ் ஆவணங்களையும் பெரிதும் அழித்தன. இப்புழுக்களின் தாக்குதலைத் தவிர்ப்பதற்குத் தேவதாரு வகை மரமான சீடார் மர எண்ணெயை (Cedar Oil) பேபிரஸ் ஆவணங்களின் மீது பூசிப் பிறகு அவற்றை மண் சாடிகளிலும் (Earthern Jars), சைப்ரஸ் (Cypress) மரத்தால் செய்யப்பட்ட பெட்டிகளிலும் வைத்துப் பாதுகாத்தனர் என்ற செய்தியைக் கி.மு. 65 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஓரேஸ் (Horace) என்ற மன்னர் காலத்து ஆவணங்களிலிருந்து அறியமுடிகிறது.

நூமா போம்பிலியஸ் (Numa Pompilius) என்ற இடத்தில் புதையுண்ட பேபிரஸ் நூல்களைத் தோண்டி எடுத்ததன் மூலம் அறிந்த உண்மையை, பிளினி (Pliny) என்ற அறிஞர் கூறும்போது இவ்வாறு பேபிரஸ் நூல்களைச் சீடார் எண்ணெயைப் பூசி மண் சாடிகளில் வைத்துப் பாதுகாக்கும்போது இவ்வெண்ணெயின் பலன் 500 ஆண்டுகள் வரை இருப்பதாகக் குறிப்பிடுகிறார். அபோகிறைபாலின் (Apocryphal) விவிலியத்தில் மோசஸ் (Moses) பெண்டாடெஷ்க்கு (Pentateuch) புத்தகங்களைப் பாதுகாக்கும் முறையை கூறும்போது இதே முறையைத் தான் கூறியுள்ளதாக இ.எ.பேக்கு (E.A. Back) குறிப்பிடுகிறார். மேலும் ஈராஸ்மூஸ் (Erasmus) என்பவர் குறிப்பிடும்போது இப்புழுக்களிடமிருந்து இந்நூல்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் நூல்களைப் பயன்படுத்த வேண்டும் (Must be used) என்று குறிப்பிடுகிறார்.

ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்ட பேபிரஸ் ஆவணங்கள் தூசு படிந்தும் ஒன்றோடு ஒன்றாக ஒட்டிக் கொண்டும், கிழிந்தும், பல துளைகளுடனும் காணப்பட்டன. மண்ணில் கருகிக் கிடந்த பேபிரஸ் ஆவணங்களைப் படிக்கும் நிலைக்குக் கொண்டு வருவது மிகவும் கடினமான செயலாக இருந்தது. இச்சுருணைகளைப் பிரித்து, சுத்தம் செய்து வரிசைப்படுத்துவதில் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த யுகோ இஸ்ஷர் (Hugo Isscher) என்பவர் மிகவும் கைதேர்ந்தவராக இருந்தார். இவர் பின்பற்றிய முறைகளைத்தான் பிற்கால ஆய்வாளர்களும் பின்பற்றி வருகின்றனர். ஒன்றோடு ஒன்றாக ஒட்டிக் கொண்ட பேபிரஸ் சுருணைகளைப் பிரித்தெடுக்கும் போது கண்டிப்பாக ஈரப்பதம் ஊட்டிய பிறகே (Humidified) அவற்றைத் தனித்தனியாகப் பிரித்தெடுக்க வேண்டும். அடுத்துச் சுத்தம் செய்தவற்றை வரிசைப்படுத்துதல் வேண்டும். இவ்வாறு பிரித்தெடுக்கப்பட்ட தாள்களை மிகவும் கவனமாகக் கழுவிப் பிறகு அவற்றை மை உறிஞ்சும் தாள்களுக்கிடையே வைத்தல் வேண்டும். அல்லது கண்ணாடி, பளிங்கு நிறத்தாள் (Cellophane Paper) களுக்கிடையேயும் பாதுகாப்பாக வைக்கலாம்.

பேபிரஸ் நூல்களைப் பாதுகாத்து வந்த பண்டைக் கால நூலகங்கள்

பண்டைய எகிப்து, கிரேக்கம், உரோம் ஆகிய நாடுகளில் பேபிரஸ் சுருணை ஆவணங்களைப் பாதுகாக்கும் புகழ்பெற்ற நூலகங்கள் இருந்தன. ஆனால் அவை அனைத்தும் இப்போது மறைந்துவிட்டன. மற்ற வரலாற்று ஆவணங்களிலிருந்து இந்நூலகங்களைப் பற்றி அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக கி.மு.13ஆம் நூற்றாண்டில் எகிப்து நாட்டில் அமர்னா (Amarna) என்ற இடத்திலும் கி.மு.12 ஆம் நூற்றாண்டில் தீப்ஸ் (Thebes) நகரிலும் இருந்த நூலகங்களை அறிஞர்கள் பயன்படுத்தியதாகக் குறிப்புகள் கிடைத்துள்ளன.

எகிப்து நாட்டிலிருந்த அலெக்ஸாண்டரின் நூலகம் மிகவும் புகழ்பெற்றதாகவும் பெரிய நூலகமாகவும் திகழ்ந்தது. கி.மு.830 ஆம் ஆண்டில் மாவீரன் அலெக்ஸாண்டரால் நிறுவப்பட்ட நகரமான அலெக்ஸாண்டிரியாவில் இந்நூலகம் இருந்தது. கிரேக்க மன்னர் அலெக்ஸாண்டர் எகிப்து நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டை கைப்பற்றிய பிறகு கிரேக்க இனமொழிப் பண்பாடுகளுக்குரிய காலத்தில் (Hellenistic Age) இந்நூலகம் தோற்றுவிக்கப்பட்டது. அலெக்ஸாண்டரின் மறைவுக்குப் பிறகு எகிப்து நாட்டில் இவருடைய ஆட்சியைத் தொடர்ந்த தாலமி மரபுவழி மன்னர்களான முதலாம், இரண்டாம் தாலமி மன்னர்கள் (Ptolemy I, Ptolemy II) இந்நூலகத்தை உலகிலேயே அதிக பேபிரஸ் சுருணை நூல்களையுடைய நூலகமாக வளர்த்தனர். இந்தத் தாலமி மன்னர்கள் ஏதென்ஸ் மற்றும் பிற நகரங்களிலிருந்தும் நூல்களை வாங்கியதுடன் படியெடுத்தும் சேகரித்தனர். இரண்டாம் தாலமி மன்னர் 70 யூத அறிஞர்களை ஃபாரோஸ் (Pharas) தீவில் ஒரு தனி அறையில் அடைத்து ஹீப்ரு மொழியிலிருந்த பழைய ஏற்பாட்டைக் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்துக் கொடுக்கும்வரை வெளியில் விடவில்லை என்றும் இதுவே கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டின் முதல் நூல் (Septuagiant) என்றும் அந்நாட்டின் மரபுவழிக் கதைகள் கூறுகின்றன.

இந்நூலகத்தில் சுமார் நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட பேபிரஸ் சுருணைகள் இருந்தன. இதிலுள்ள ஒவ்வொரு நூலைப் பற்றியும் அங்கிருந்த நூலக நிர்வாகத்தினர்களுக்குத் தெரிந்திருந்தது. நன்கு கற்ற அறிஞர்களே இந்நூலகத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தனர். இந்நூலகம் தன்னிடமிருந்த சிறந்த நூல்களின் எண்ணிக்கையால் அக்காலத்தில் புகழ்பெற்றுத் திகழ்ந்தது. கி.மு.48ஆம் ஆண்டு உரோமானியர் எகிப்து நாட்டின் மீது படையெடுத்தபோது அப்படையைத் தலைமைத் தாங்கி நடத்திய ஜூலியஸ் சீசர் (Julius Caesar) அந்நாட்டின் புகழ்பெற்ற துறைமுகமாக விளங்கிய அலெக்ஸாண்டிரியா துறைமுகத்திலிருந்த கப்பல்களைத் தீயிட்டுக் கொளுத்தியபோது நூலகத்திலிருந்த பாதி நூல்கள் தீக்கு இரையாயின. பிறகு உரோமானியத் தலைமை ஆளுநராக இருந்த மார்க் ஆண்டெனி (Mark Antony) என்பவர் அந்நூலகத்திலிருந்த மற்ற அனைத்து நூல்களையும் அந்நாட்டின் இளவரசியாக இருந்த கிளியோபட்ராவிற்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டார். பிறகு கி.பி.390 ஆம் ஆண்டு உரோம மன்னர் தியோடோசியஸ் (Theodosius) என்பவர் அந்நகரைத் தீயிட்டு அழித்தபோது அந்நூலகம் அழிந்துவிட்டது.

அந்தப் பேபிரஸ் சுருணைகள் சாடிகளிலும் (Jars) சுட்ட களிமண் உருளைகளிலும் (Cylinders) பாதுகாப்பாக வைக்கப்பட்டன. அந்தச் சுருணைகளை எளிதில் அடையாளம் கண்டு கொள்வதற்கு ஏதுவாக வழிகாட்டும் குறிப்புச் சொற்களை (Key-words) அவற்றின் மேற்பரப்பில் எழுதி வைத்துள்ளனர். ஏதென்ஸ் நகர் மீது படையெடுத்து அந்நூலகத்திலிருந்த நூல்களை உரோமிலிருந்த அவருடைய அரண்மனைக்கு எடுத்துச் சென்று விட்டதாகவும் கூறுகின்றனர்.

பண்டைக்கால உரோமானியர்களும் எகிப்தியர்கள், கிரேக்கர்களைப் போலவே நூலகங்களை நிறுவினர். அக்காலத்தில் அங்கிருந்த ஒவ்வொரு நூலகமும் தனிமனிதனின் சொந்த முயற்சியால் சேகரிக்கப்பட்ட நூல்களின் சேர்க்கையே ஆகும். பிற்காலத்தில் அவை நூலகங்களாகச் செயல்பட்டன. அவற்றில்

பெரும்பகுதி கிரேக்கர்களின் இலக்கிய நூல்களே ஆகும். அவ்வாறு சேகரித்ததற்குக் காரணம் எகிப்தியர்களின் இலக்கியத்தை உரோமானியர்கள் மிகவும் விரும்பியதேயாகும். உரோமானியர்கள் தங்களுக்கெனச் சொந்த நூலகங்களை வைத்துக் கொள்வது போற்றுதலுக்குரிய ஒரு செயலாகக் கருதினார்கள்.

உரோமானிய இராணுவ வீரரும் அரசியல் மேதையுமான ஜூலியர் சீசர் பொது நூலகங்களை நிறுவப் பல திட்டங்களை வகுத்தார். அக்டேவியன் நூலகம் (Octavian Library) அவர் திட்டத்தினால் உருவானதேயாகும். அந்நூலகம் ஜூலியர் சீசர் இறந்து ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு கி.மு.37ஆம் ஆண்டு அகஸ்டஸ் (Emperor Augustus) மன்னரால் உரோமிலுள்ள பேலடைன் (Palatine) மலை மீது கட்டப்பட்டது. அதுவே உரோமின் முதல் பொது நூலகமாகும்.

பேபிரஸ் கையெழுத்துப் படிகளைப் பாதுகாக்கும் இன்றைய நூலகங்கள்

ஆஸ்டிரிய கோமகன் ரெய்னர் (Rainer) அவர்களால் சேகரிக்கப்பட்ட பேபிரஸ் ஆவணங்கள் தான் மிகவும் அதிக எண்ணிக்கையுடையவையாகும். ஏடுகள், சுருணைகள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை (Pieces) சுமார் 1,00,000 ஆகும். அவை ஆஸ்டிரியா (Austria) நாட்டின் தலைநகரான வியன்னாவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பாதி ஆவணங்கள் அரேபிய மொழியில் எழுதப்பட்டவை.

அதற்கு அடுத்த இரண்டாவதாக அதிக எண்ணிக்கை கொண்ட நூலகம் கெய்ரோ (Cairo) நகரிலுள்ள எகிப்திய அருங்காட்சியகமாகும். அவற்றிற்கு அடுத்தபடியாகப் பெர்லின் அருங்காட்சியகம், பிரிட்டிஷ் அருங்காட்சியகம், ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழக நூலகம், மெச்சிகன் பல்கலைக்கழக நூலகம் ஆகியவற்றை அவற்றிலுள்ள பேபிரஸ் நூல்களின் எண்ணிக்கைப்படி வரிசைப்படுத்தலாம்.

மேலும் அவ்வாவணங்களைச் சேகரித்துப் பாதுகாத்து வரும் குறிப்பிடத்தக்க இடங்களாக ஜெர்மனியில் அய்டில்பார்க் நகரம் (Heidelberg City), பிரெஞ்சு நாட்டில் ஸ்டிராஸ்பர்க், பாரிசு நகரங்கள், இங்கிலாந்தில் மான்செஸ்டர், ஏல் நகரங்கள், அமெரிக்காவில் கொலம்பியா, பிரன்சீடான் பல்கலைக்கழகங்களிலுள்ள நூலகங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அதோடு மேற்கத்திய நாடுகளில் சிறிய குழுக்களாக இயங்கி வரும் பல தனியார் பொது நிறுவனங்களும் அவற்றைச் சேகரித்துப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

பேபிரஸ் நூல்களைப் பதிப்பித்தல்

கண்டெடுக்கப்பட்ட பேபிரஸ் ஆவணங்களை அச்சிட்டுப் பதிப்பிக்கும் செயல் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் துணை புரிகிறது. இதுவரை 30,000 ஆவணங்களுக்கு மேல் வெளியிடப்பட்டுள்ளன. அதில் எல்லா வகையான சுவடிகளும் அடங்கும். ஆனால் மொத்த பேபிரஸ் ஆவணங்களில் அவ்வெளியீடுகள் இருபது விழுக்காட்டிற்குக் குறைவாகவே இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. பொதுவாக மூன்று முறைகளில் அவ்வெளியீடுகள் அமைகின்றன.

- பேபிரஸ் சுவடிகளின் விளக்கப் பட்டியல் (Description). அதில் நூலாசிரியர், எழுதிய நாள், அதன் முக்கிய பொருள் ஆகிய தகவல்கள் அடங்கும்.
- மூலபாடங்களும் மொழிபெயர்ப்பும் (Texts and Translations).
- திறனாய்வு.

மேலும் பேபிரஸ் ஆவணங்களைப் பாதுகாத்தல், ஒப்பிடுதல் முதலிய பணிகளைக் கற்பிக்கும் அறிவியல் சார்ந்த கலையை 'பேபிராலஜி' (Papyrology) என்று அழைக்கிறோம். அதில் பானை ஓடுகள், கல், பார்ச்மெண்டுகள், மரப்பலகைகள், மெழுகுப் பலகைகள் முதலியவற்றில் எழுதப்பட்ட ஆவணங்களும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தொன்மைக்கால மொழிகள், எகிப்தின் டிமோடிக் (Demotic) ஆகிய அனைத்து மொழி ஆவணங்களும் ஆராயப்படுகின்றன. கிரேக்க, உரோமானியப் பகுதிகளில் அவை எங்குக் கண்டெடுக்கப்பட்டாலும் கையெழுத்து மொழியியல் துறையில் நன்கு பயிற்சி பெற்ற ஆய்வாளர்களை அங்கு அனுப்பி ஆய்வு நடத்தச் செய்கின்றனர்.

பேபிரஸின் மறைவு

எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தாவரங்களின் நார்ப் பொருள்களைப் பயன்படுத்திக் காகிதம் (Paper) தயாரிக்கும் முறை நடைமுறைக்கு வந்துவிட்டதால் எகிப்து நாட்டில் பேபிரஸ் பயிரிடப்பட்டு அவற்றில் தாள்கள் தயாரிக்கும் தொழில் தேவையற்றதாகிவிட்டது. இப்பொழுது வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இவ்வரிய சுவடிகளைப் பாதுகாப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

சான்றாதாரங்கள்

1. அறிவுடை நம்பி, ம.சா., **சுவடிகளும் ஆவணங்களும்**, காகிதச் சுவடிகள்,

ம.சா. அறிவுடைநம்பி, சி. இலட்சுமணன், அரிய கையெழுத்துச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2000.

2. Taylor Isaac, **History of Transmission of Ancient Books**, Edward Howell, Liverpool, 1889.

3. Hooke, S.H., **Recording and Writing**, A History of Technology, Charles Signer E.J. Holmyard Ed., Oxford University Press, Oxford, Vol.1, 1958.

4. Plumbe, Wilfred J., **The Preservation of Books in Tropical and Subtropical Countries**, Oxford University Press, Oxford, 1964.

5. **Encyclopaedia Britannica**, Enclyopaedia Britannica Inc., Chicago, Vol.17, 1930.

6. Kochhar, S.L., **Economic Botany in the Tropics**, Macmillan India Ltd., 1995.

கிரகண தத்துவ விளக்கம்

பதிப்புரை

அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் **'கிரகண தத்துவ விளக்கம்'** (R 15746) எனும் சமஸ்கிருத தாட்சுவடி உள்ளது. இதனை எழுதியவர் இராம சுப்பார்யாவின் சீடர் **வைத்தியநாத விதுஷா** ஆவார்.

இவ்வாய்வு மையத்தின் ஆண்டு பருவஇதழுக்காக இச்சுவடியைப் பதிப்பித்து வெளியிட வடமொழிப் புலவர் செல்வி பே.அனிதா அளித்த போது அதில் வடசொற்கள் மிகுதியாகக் கலந்து இருந்ததால் இச்சுவடியின் பொருளை வடமொழி தெரிந்த தமிழர்கள் மட்டுமே படித்து பயன்பெறும் வகையில் இருந்தது. வடமொழி தெரியாத தமிழக மக்களும் பயன்பெறும் வகையில் தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தி வெளியிடப்பட்டால் சிறப்பாக இருக்கும் என்பதால் பதிப்பாசிரியர் என்ற முறையில் அதனை தமிழ்படுத்தும்பணிமேற்கொள்ளப்பட்டது. மேலும் முன்னுரையில் கிரகணம், உபராகம், இராகு மற்றும் கேது குறித்த கீழ்காணும் சில விவரங்களும் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது.

வானமண்டலத்தில் உள்ள சூரியக் குடும்பத்தில் பூமி, சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கோள்கள் இடம் பெற்றுள்ளன. இக்கோள்கள் தம்மைத் தாமே சுற்றிக் கொள்வதோடு சூரியனையும் ஒரு குறிப்பிட்ட பாதையில் சுற்றி வருகின்றன. இக்கோள்களன்றி யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய கோள்களும் சூரியனைச் சுற்றிவருகின்றன. இக்கோள்கள் யாவும் நீள்வட்டமாக வெவ்வெறு பாதைகளில் ஒரே திசையில் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியனும் சந்திரனும் பூமிக்கு நேர்க்கதியில் இயங்கும் போது அவ்விரண்டு கோள்களின் பக்கங்களில் விழும் நிழல்களை **இராகு, கேது** என்பர்.

சோதிடப் பேரகாரதியின்படி **இராகு** என்பது கரும்பாம்பு, தமம், மதிப்பகை, மதியுணி, சாயாக் கிரகங்களினொன்று

என்றும் **கேது** என்பதற்கு கதிர்ப்பகை, சிகி, செம்பாம்பு, மதிப்பகை, மதியுண்ணி மற்றும் பாம்பின் பெயர்களெல்லாம் பொருந்தும் என பொருள் கொள்ளலாம்.

எல்லாக் கிரகங்களும் பூமியின் கோளாகிருதிகளாக இருக்கின்றன. அவற்றுள் சூரியவொளியால் மற்றக் கிரகங்களும், பூமியும், பிரகாசத்தோடு கூடி இருக்கின்றன. அவ்வொளி கிரகம் பூமியின் ஒரு புறத்தைப் பிரகாசப்படுத்தும் போது அவற்றின் மறுபக்கம் இருளாகின்றது. இவ்விருளுக்கு நேர் அகப்பட்ட கிரகங்களும், இவ்விருளால் தடுக்கப்பட்ட கிரகங்களும், நட்சத்திரங்களும் காணப்படமாட்டா. அவைதான் சூரிய சந்திர அங்காரகனாதியாகிய ஐந்து கிரகங்களின் கிரகணங்கள். இவற்றுள் சூரிய கிரகணமாவது — சந்திரன் தன்னுடைய உபரிபாகத்திற் சஞ்சரித்து வரும் ஆதித்தனுக்கு நேராக வருங்காலத்தில், ஆதித்தனுடைய ஒளி சந்திரனுடைய மேற்பாகத்தைப் பிரகாசப்படுத்துகின்றது. நாம் காணுகிற மறுபுறத்திற்குச் சூரியனுடைய ஒளியில்லாத படியால் இருளாகிறது. இவ்வகை இருள் வடிவாகத் தோன்றுஞ் சந்திர பிம்பம் சூரிய பிம்பத்தினுடைய நேர்விலகிப் போகிறவரையிற் சூரியனை மறைத்து நாம் காணாமற் செய்கிறது. இதுதான் "சூரியகிரகணம்" என்பதாம். சூரியனும் சந்திரனும் நேராக வருவது அமாவாசையின் முடிவிலானதால் அது சந்திரானுட்டானப்படி மாசாந்தமெனச் சொல்லப்படும். இதனைத் தவிர வேறெந்தத் திதிகளிலும் சூரிய கிரகணம் வரமாட்டாது.

சந்திரகிரகணமாவது - சந்திரன், சூரியனுக்கு ஆறு இராசி தாண்டி நேராகப் பிரிந்து வருகிறபோது சந்திரனுடைய மேற்புறம் இருளாகவும் நாம் காணும் மறுபுறம் பிரகாசமாகவும் வரும். அந்தச் சமயத்தில் சூரியனுடைய ஒளி பூமியின் மறுபுறத்தில் இல்லாதபடியால் பெரியதாகிய பூச்சாயையுண்டாகும். சந்திரன் பூச்சாயைக்கு நேராக அதிலே மறைந்து வெளியில் வருகிறவரையில் சந்திரனை நாம் காணமாட்டோம். இதுதான் சந்திர கிரகணம்.

சூரிய சந்திரர்கள், இராகு கேதுவால் மறைவு பெறுவது **கிரகணம்** எனப்படும். கிரகித்தல், பற்றுதல், பீடித்தல் எனவும் கிரகணத்திற்குப் பொருள் கொள்ளலாம்.

இவ்வாய்வு மையத்தின் மொழிபெயர்ப்பு நூல்களில் இதுவும் ஒன்றாகும். மொழிபெயர்ப்புப் பணி சிறப்பாக அமைய வேண்டும் எனும் எச்சரிக்கை உணர்வுடன் இச்சுவடியின் பதிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சோதிட தொழில்நுட்ப விவரங்களை சரிபார்த்து பிழை திருத்தம் செய்து வழங்கிய இவ்வாய்வு மையத்தின் முன்னாள் தமிழ் புலவர் திரு.நாகராஜன் அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இப் பதிப்பில் ஏதேனும் குறைகள் இருப்பின் அது குறித்த விவரத்தை இவ்வாய்வு மையத்திற்கு தெரியப்படுத்தினால் அது குறித்து ஆய்வு செய்து மறுபதிப்பின் போது அதனை சரி செய்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

சோதிடம் மற்றும் வானியல் கருத்துகளை அடிப்படையாக கொண்ட இச்சுவடியின் சிறப்பைக் கருதி இவ்வாய்வு மைய ஆண்டு பருவஇதழில் வெளியிடப்படுகிறது. இதனை தமிழக மக்கள் ஏற்று பயன் பெறுவார்கள் என்று நம்புகிறோம். இதன் மூலம் இன்னும் பல மொழிபெயர்ப்பு நூல்களை எதிர்காலத்தில் வெளியிட தேவையான ஆதரவையும் நல்குவார்கள் என்று நம்புகிறோம்.

இர.சந்திரமோகன், எம்.ஏ., எம்.ஃபில்.,

நூலகர் மற்றும் காப்பாட்சியர் (பொ)

அ.கீ.சு.நூ (ம) ஆ. மையம்

சென்னை -5

பே.அனிதா, எம்.ஏ., எம்.ஃபில்.,

வடமொழி புலவர்

அ.கீ.சு.நூ (ம) ஆ. மையம்

சென்னை -5

கிரகண தத்துவ விளக்கம்

//ஸ்ரீ ராமசந்திராய பரப்பிரம்மனே நமஹ://

மங்களம்

ருக்மணி தேவிக்கு கணவனாகயிருக்கிற ஸ்ரீகிருஷ்ணனையும், வித்தையைக் கற்றுத் தந்த ஆச்சாரியரையும், சரஸ்வதி தேவியையும் வணக்கம் செய்து **உபராகம்** என்னும் சொல்லின் பொருள் உறுதிப்படுத்துதலை மகிழ்ச்சியினால் நான் கூறுகிறேன்

உபராகம் என்னும் சொல்லின் பொருள்

"வேதோ அகிலோ தர்மமூலம் தத்விதாம் ச்ச ஸ்மிருதிஷீலே" என்கிற ஆணையால் (பிரமாணம்) சொல்லப்பட்டதும், முனிவர்களால் உணரப்பட்ட உபராகம் என்பது இராகுவின் இணைவேயாகும். கேதுவால் ஏற்படும் மறைவு அல்ல. இராகுவின் இணைவு உபராகம் என்று சாத்திரங்கள் சொல்லுவது போல் கேதுவால் உண்டாகும் மறைவை உபராகமென்று ஓரிடத்திலும் சொல்லவில்லை. எப்படியெனில் பாகவதம் 5-வது ஸ்கந்தம் 24-வது அத்தியாயத்தில் உபராகம் என்கிற புண்ணிய காலம் பற்றி உறுதிப்படுத்துகிறார் ஆசிரியர். சூரியனுக்குக் கீழே 10,000 யோஜனை தூரத்தில் இராகுவானவன் விண்மீன் போல் உலவுகிறான். ஸிம்ஹிகையின் பிள்ளையாயும், வலிமையுள்ள வனாயும் உள்ள இராகு தேவத் தன்மையும், நவக்கிரகத் தன்மையும் ஒருங்கேபெற்றவன் ஆவான். அந்த தேவத் தன்மை பெறுவதற்குத் தகுதியுள்ளவனாய் எந்த இராகு உள்ளானோ அவனின் பிறவிக் குணங்களை மேலே சொல்லப் போகிறோம்.

எந்த இராகுவானவன் பருவகாலங்களில் சந்திரன், சூரியரிடத்தில் வெறுப்பு உள்ளவனாக இருந்து கொண்டு

அவர்களை எதிர்க்கிறானோ, அக்காலங்களில் அவர்களை காப்பாற்றும் பொருட்டு, பகவானால் ஏவப்பட்ட ஒலிச் சக்கரத்தை தன் ஒலியினால் எதிர்க்க முடியாதவனாகி (ஒரு முகூர்த்தம்) 33/4 நாழிகை நடுங்கி ஒடுங்கி திரும்புகிறான். அவனுடைய எதிர்ப்பைத்தான் உபராகம் என்று உலகம் சொல்லுகிறது. பாகவதத்தினால் கூறப்பட்ட இக்கருத்தை பின்பற்றி தற்பொழுதும், சந்திர உபராக நற்காலம், சூரிய உபராக நற்காலம் என்று (ஸங்கல்பம்) சொல்லுகிறார்கள். பாகவத வியாக்ய கர்த்தாவாகிய ஸ்ரீதரஸ்வாமியும் கிரகண புண்ணிய காலத்தைச் சொல்லுவதற்காகவே பாகவதக் கிரந்தம் உருவாகியது என்று சொல்லுகிறார். இதனால் இராகுவின் இணைவு என்கிற உபராகந்தான் கிரகண புண்ணிய காலம் என்பது நன்கு வெளியாக்கப்பட்டிருக்கின்றது. இந்த இடத்திலேயே பகவானுடைய சக்கர பெருமையால் தடங்கப்பட்டு இருக்கும் இராகுவின் (ஸ்திதி) நிலைதான் உபராகம்.

ஸ்ரீதரஸ்வாமியின் வியாக்கியனத்தில் கிரகணம் என்று இருக்கிறது **'தானஹேமாத்ரி'** என்கிற கிரந்தத்தில் சந்திரனுக்காவது, சூரியனுக்காவது இராகுவோட சேர்க்கைதான் உபராகம் எனச் சொல்லப்படுகிறது. அது அதிக வலிமை தரவல்லது எனச் சொல்லப்பட்டுள்ளது. அமரம் என்ற நிகண்டிலும் பாலபந்து எழுத்தில் அச்சிட்ட புத்தகங்களில் காலவர்க்கத்தில் உபராகத்தைச் சொல்லும் சுலோகத்திலும், அதன் வியாக்கியானத்திலும் உபராகம், கிரகம் என்ற இரண்டு சொற்களும் சந்திரர், சூரியர் இராகுவால் பிடிபடும் சேர்க்கை எனக் கூறுகின்றன. இதனால் இராகுவின் சேர்க்கைத் தான் உபராகமென்று சாத்திரங்கள் தீர்மானித்துள்ளன. அந்த இராகு சேர்க்கையை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஸ்மிருதி, புராணங்களில் குளியல், தானம், முன்னோர் படையல் முதலியவற்றை கடைபிடிக்க வேண்டும் என்றாகிறது. கேது கிரகணத்தை எந்த கிரந்தத்திலும் இது போல் கூறவில்லை. ஆகவே இராகு, கேதுகளினால் ஏற்படும் கிரகணத்தை

உறுதிப்படுத்திக் கொண்டு, இராகுவின் சேர்க்கையே புண்ணிய காலம் எனக் கருதி, அதையே கடைபிடிக்க வேண்டும். ஸ்மிருதிகளிலும் இராகுவின் சேர்க்கையே கிரகண நல்ல காலமென நன்கு வெளியாக்கப்பட்டிருக்கின்றது. அந்த ஸ்மிருதியின் பொருள் சந்திரன், சூரியன் இவைகளுக்கு கிரகணம் ஏற்படும் வேளையில் மனிதர்களுக்கு விலக்கு (தீட்டு) உண்டாகிறது. அப்போது மனிதன் குளித்து சந்திரர், சூரியருக்கு தானம் முதலியன செய்ய கடமைபடுகிறான். சந்திர சூரியர் கிரகணம் ஏற்படும் முன் சாப்பிடக் கூடாது. இராகுவின் விடுபாடு அறிந்து, குளித்துவிட்டு சாப்பிட வேண்டும். இதனை பல ஸ்மிருதிகளை உன்னித்து அறிந்தால் தெளிவாகும். இதனால் சாப்பாட்டுக்கு விரோதமாக உள்ளது இராகு கிரகண வேளையே என்பது விளங்குகிறது. இதுபோல் கேது கிரகணவேளையில் விலக்கு, சாப்பிடக் கூடாது என ஓரிடத்திலும் கூறப்படவில்லை. **'காலமாதவீயித்திலும்'** கிரகணம் விட்டப்பின்பே சாப்பிட வேண்டும் என்று உள்ளது. மாதவச்சாரியார் சுலோகத்தின் வியாக்கியானத்தில் கிரகணம் விடுபடாது சந்திரர், சூரியர் மறைந்துவிடின் மறுநாள் அவர்களைக் கண்ட பிறகே குளித்து உண்ண வேண்டும் என்று கூறுகிறார்.

இதனால் கேது மறைப்புக்கு உபராகம் என்று பெயரில்லாதிருப்பினும் அக்காலத்தில் குளியல் முதலியன செய்தால் என்ன கெடுதல் வரும் என்ற அய்யம் போக்கப்பட்டது. குளியல், தானம், தியானம் முன்னோர்களுக்குப் படையல் போன்றச் செயல்கள் இராகு கிரகணத்தில் செய்தால் அதிக வலிமையாகும். இராகு கிரகணம் இல்லாத இரவு அசுர தொடர்புடையது. ஆதலால் அவ்விரவு படையல் செய்யக்கூடாது. இராகுவின் சேர்க்கை இருப்பின் குளியல், கொடை, முன்னோர் படையல் முதலியன செய்யலாம். இராகுவின் காட்சியைத் தவிர மற்ற இரவில் குளியல் முதலியன செய்யக் கூடாது. இராகுவின் காட்சி இரவில் கிடைத்தால் மந்திரம், நோன்பு

போன்றவை செய்யலாம். இராகுவின் காட்சி இல்லாத இரவு அசுத்தமாகிறது. ஆதலால் அதனை நல்ல காலமாகக் கொண்டாடக் கூடாது. இராகு காட்சி கிடைக்கும் இரவு குளித்தல் நல்லது இல்லையேல் தீமையே. இராகுவின் இழிவைத் தவிர மற்ற காலங்கள் விலக்காகும். ஆதலால் அக்காலங்களில் கொடை போன்ற செயல்கள் செய்யக் கூடாது. இறப்பு, விருத்தி போன்ற காலங்களில் இராகுவின் காட்சியிருப்பின் வினைகள் செய்வதை கடைபிடிக்கலாம். எவ்வளவு காலம் இராகு காட்சி இருக்கின்றதோ, அவ்வளவு காலம் மேற்கூறிய விலக்கு விலகி நிற்கும். இதனை மனு பராசராதி ஸ்மிருதிகள் கூறுகின்றன. இதனால் மேகநிழல் போல் உள்ள கேதுவின் நிழல் நற்செயல்கள் செய்யும் காலமாகாது. கேதுவின் மறைப்பில் ஒருவன் கொடை போன்றவை செய்தால் அது கெட்டது என்று சொல்லப்பட்டுள்ளதால், அது அசுரர்களுக்குச் செய்யும் செயலாகும். அது கெடுதலாகவும் ஆகிறது. தவிரவும் இராகு கிரகண வேளையில் சாவுத்தீட்டு (விலக்கு) இல்லை எனக் கூறப்பட்டுள்ளதால் கேது கிரகண வேளையில் கொடை போன்ற செயல்கள் செய்தால் நரகத்தையடைகிறான். இந்த விஷயத்தில் கிருத்யா கிருத்ய விவேகமென்னும் மஹாமஹோபாத்யாய ஆச்சார்யவர்களால் செய்யப்பட்ட கிரந்த்தில், கேது கிரகண வேளையில் தங்கள் புத்தியினாலோ, முரட்டுத்தனத்தினாலோ கொடை முதலியன செய்தால் அவர்கள் கெட்டதுக்கு ஆளாவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. அவர்கள் கோடிப் பிறவிகள் எடுக்கும் கெட்டவர்களாகப் பிறப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஆகையால் கேதுவின் மறைப்பாகிய கருவியை மேகநிழல் போல் எண்ணுவதால் அக்காலத்தில் கொடை போன்றச் செயல்கள் செய்யத் தகுந்தது என்று ஓரிடத்திலும் கூறப்படவில்லை. ஆகவே கேது கிரகண காலம் நல்ல காலம் எனும் பிரமத்தை எல்லோரும் விட வேண்டும். இதனை கவனிக்காமல் கேது மறைப்பு காலம் நல்ல காலம் என சிந்தனையற்று எண்ணி முன்னோர் படையல்

போன்றவற்றைச் செய்தல் முன்னோர் சாபத்திற்கு ஆளாவார்கள் என்பது உறுதியாகும். விலக்கு காலங்களில் படையல் இடுவதை தடுக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும். கொடை ஒவ்வொரு கிரகப் (பிரதிக் கிரகம்) ஹோமம், சயநிலை, முன்னோர்களுக்குச் செய்யும் படையல் போன்றச் செயல்களை விலக்கு காலத்தில் செய்யக் கூடாது. நல்லதை செய்யாமலும், கெட்டதை செய்வதாலும் மனிதர்கள் கெடுதலை அடைகிறார்கள் என ஸ்மிருதியில் கூறப்பட்டுள்ளது.

உபராக நல்ல காலமென்று ஓரிடத்திலும் சொல்லப்படாத கேது காட்சி வேளையில் அதை ஆணையாக வைத்துக் கொண்டு உபராக திதிகள் செய்வதும், மெல்லிய திதிகள் விடுவதும் சாத்திரத்தை அவமானம் செய்வதும் பெரிய கெடுதல் நேரிடும். கேது காட்சியை உபராக நல்ல காலமென்று சொல்லுவதற்கு சாத்திரங்களை ஆய்ந்து மூலக்கருத்தை எடுக்க வேண்டும். அதை விடுத்து சிலர் அதனையே ஆணையாக எடுத்துக் கொண்டு "வெகு நாட்களாய் வித்வான்கள் உள்ளார்கள் ஏன் அவர்களுக்கு இக்கருத்து தெரியவில்லை" என அய்யுறுகிறார்கள். அவர்கள் மனுபராசராதி தர்ம சாத்திரம் எவ்வளவு நாளாய் உள்ளது. அதுகளில் தானே உபராக நல்ல காலம் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அறியவில்லை. சுருதி, ஸ்மிருதி புராணங்களை விட்டு வேறு எந்த நீதி சாத்திரங்களைக் கொண்டு கேது மறைவை உபராகமென்று சொல்லுகிறார்கள். பிற மனு நீதி சாத்திரங்களிலும், சோதிட சாத்திரங்களிலும் பல கிரகணங்கள் இருப்பினும், இராகு கிரகணம் மட்டுமே உபராக நல்ல காலமென மனு யாக்ஞவல்கியாதிகள் கூறுகிறார்களே இதற்கு காரணம் என்ன? தர்ம சாத்திரத்தை எல்லோரும் பார்க்காத நிலை என்ற அய்யம் அவர்களுக்கு எழவில்லை. இப்பவும் பூமியில் புலவர் பலர் இருப்பினும், நீதி சாத்திரம், பிற கருத்துக்கள் அவற்றால் உண்டாகும் கடைபிடிக்கும் முறைகள் குறைந்து போய் விட்டதால் குலமுறை நீதிக்கு அழிவு ஏற்பட்டதை எல்லோரும் அனுபவிக்கிறார்கள்.

எல்லா வித்தையும் அறிந்த புலமைமிக்க ஸ்ரீராமசுப்பா சாஸ்திரிகளினால் 20, 30 ஆண்டுகளுக்கு முன்பே ,செய்த கிருத்தியா கிருத்ய விவேகம் முதலான பல கிரந்தங்களில் கிரகண செய்தியாய், மூலக் கருத்தாய் உபதேசம் செய்யப்பட்டதில் கேதுவின் மறைப்பு நல்ல காலம் இல்லை என்பதையும் இராகுவின் இணைவே நல்ல காலம் என்ற உண்மையை அனைவரும் கண்டிருக்கலாம். அதற்கு இதுவரையில் எந்த புலவரும் கேது மறைவு உபராக நல்ல காலமென்று மூலகருத்துத் தரவில்லை. இப்பொழுதாவது மூலக்கருத்து கிடைக்க வேண்டுமென இந்த கிரந்தம் வெளியாகியிருக்கிறது. ஸ்ருதி, ஸ்மிருதி மூலமாகவோ, அந்த பரம்பரை மூலமாகவோ ஒழுக்கம் ஆணையாகாது. மக்கள் சுருதி ஸ்மிருதிகளை விடுத்து அவரவர்களுக்குத் தோன்றியவாறு, அவர்களின் நலத்திற்கு கடைபிடிக்கும் ஒழுக்கம் பல உண்டாகியுள்ளன. அவ்வொழுக்கமெல்லாம் ஆணையாகாது. அவைகளுக்கு மூலச் சாத்திரம் தேடினாலும் கிடைக்காது. இக்கருத்தை பகவான் ஆபஸ்தம்ப மஹரிஷியே கூறுகிறார். எந்த ஒரு கருத்திலும் தன்னுடைய அன்பினால், தன் விருப்பப்படி ஊக்கம் செய்கிறார்களோ அந்த கருத்தில் சாத்திரமில்லை. சாத்திரம் இல்லாது காரணம் சொன்னால் நரகத்திற்குச் செல்வார்கள் என்று கூறியுள்ளார். வேத சாத்திரங்களுக்கு எதிரிடையில்லாமலிருக்கிற உலக குலதர்மங்கள் தான் ஆணையாகும். என்று வசிஷ்டர் சொல்லுகிறார். இதுபோன்ற சாத்திரங்களுக்குப் பகையாய் இருந்தால் உலக ஒழுக்கத்தை விட்டு விட வேண்டும் என தீட்சிதர் கூறுகிறார். வேதப் பழைமையான ஸ்மிருதியையும், ஸ்மிருதி பழைமையான உலக ஒழுக்கத்தையும் பின்பற்ற வேண்டும் என காத்தியாயனர் கூறுகிறார்.

சாத்திரத்திற்குப் பகையான தண்டித்தல் என்பது ஆணையாகாது என்று வசிஷ்டர் கூறுகிறார். இப்படி பல ஸ்மிருதிகளால் கெட்ட ஒழுக்கம் ஆணையாகாது எனக்

கூறப்பட்டிருப்பதால் அந்த வழியில் வந்த கேது கிரகணம் கடைப்பிடிப்பது தள்ளத் தகுந்ததென்று அறிவுள்ளவர்கள் தீர்மானிக்கத் தக்கதாயிற்று. அந்த பரம்பரையில் சுருதி ஸ்மிருதிக்குப் பகையான கடைபிடித்தல் ஏற்பட்டால் அந்த கடைபிடித்தலை சுருதி ஸ்மிருதி கிடைக்கும் வரை கடைப்பிடித்தல் செய்ய வேண்டியதில்லை. இதனை "தாவதனுஷ்டான லக்ஷணப்ரமாண்யம்" என்ற கருத்தால் **'தர்மமீமாம்சா'** சாத்திரத்தில் முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சுருதி ஸ்மிருதிக்கு பகையான கேது கிரகணம் கடைபிடித்தலை விடுவதற்கும் சாத்திரத்திற்கு உடன்பாடான இராகு கிரகணம் கடைப்பிடித்தல் ஏற்றுக் கொள்ளுதலை பல ஸ்மிருதி கருத்துகள் கிரந்தந்தில் கூறப்பட்டுள்ளன. குளியல், கொடைகள் செய்தல், பிணத்தின் மீது ஒரு கையும், சாப்பாட்டின் மீது ஒரு கையும் வைத்து செய்யும் சடங்கை தள்ளுதலையும் இராகு கிரகண உபராக சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளதே ஒழிய கேது கிரகண உபராகத்தில் கூறப்படவில்லை. சூரியர், சந்திரரை மேகம் மறைப்பது போன்று தோன்றும் கேது மறைப்பை சாத்திரங்கள் ஒதுக்கி விட்டன. இராகு, கேது ஆகிய இருவரும் ஒன்றுதான் என அய்யம் கொள்பவரும் உள்ளனர். அவர்கள் நவகிரகங்கள் என்று கிரகங்களை ஒப்புக் கொண்டவர்கள் அல்ல. 8 கிரகங்களாவே முடியும் சோதிடச் சாத்திரத்தைச் சார்ந்து, பஞ்சாங்கங்களில் சொல்லப்பட்ட இராகு கிரகணம், கேது கிரகணம் என வேறுபடுத்தி அந்தந்த நேரத்தில் தீர்மானிக்கப்பட்டது என்ற கருத்து கெட்டுப் போய்விடும்.

ஓவ்வொரு மாதத்திலும் இராசி சக்கரங்களில் இராகு, கேதுகளுக்குத் தனித்தனியாக சொல்லப்படும் இடம், திசை, புத்தி, வலிமை ஆகிய இவை வேறுபட்டுவிடும். யாக்ஞவல்கி ஸ்மிருதியில் நவக்கிரக விளக்கம் கூறுகிறபொழுது ஒன்பது கிரகங்களையும் தனித்தனியாகச் சொல்லி, ஒவ்வொரு கிரகத்திற்கும் லக்ஷணம், ஸ்தானம், ஸ்வரூபம், மந்திரம்,

ஸமித்து, போஜனம், பெயர், கோத்திரம் முதலியவைப் பற்றி நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஒன்பது கிரகத்தை எட்டு கிரகமாகச் செய்ய முடியாது. கோசத்திலும் இராகு, கேதுவை தனித்தனியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கேதுவானவன் இராகுவை காட்டிலும் வேறாக இருந்து கொண்டு நவக்கிரகங்களால் சேர்ந்தவனென்று கோசத்தினாலேயே வெளியாகிறது.

பாகவதம் 6-வது ஸ்கந்தம் 18-வது அத்தியாயத்தில் விப்ரசித்துக்கு ஸிம்ஹிகையினிடத்தில் இராகு என்ற பிள்ளை பிறந்தான். அவனுடைய கழுத்தை மகாவிஷ்ணு சக்கரத்தால் அறுத்துவிட்டார் என்றும் 6-வது அத்தியாயத்தில் அதே விப்ரசித்துக்கு ஸிம்ஹிகையினிடத்தில் ஒரு நூறு பிள்ளையும், ஒரு பிள்ளையும் ஆக 101 பிள்ளைகள் உண்டு பண்ணினான். அதில் மூத்தவனே இராகு. நவக்கிரகங்களில் சேர்ந்திருக்கும் கேதுகள் எல்லாம் தம்பிகள் ஆவர். இதை சிரீதரீய வியாக்கியனத்தில் வம்சீதரியில் கேதுவை கொண்ட நூறில், அவற்றை சதக்கூட்டம் எனவும், இராகுவை அண்ணாவாக கொண்டவை என அவ்வியாக்கியனத்தால் அறியலாம். கேதுகளுக்கு சதத்துவம் சோதிடச் சாத்திரத்தால் வர்ணிக்கப்பட்டுள்ளது.

5-வது ஸ்கந்தத்தில் 23-வது அத்தியாயத்தில் கழுத்தில் இராகுவும், உடலுறுப்புகளில் கேதுக்களும் உள்ளனர். இம் மூலத்திற்கு வம்சீதர வியாக்கியனத்தில் கேதுகளுக்கு சதத்துவம், ஸஹஸ்ரத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. இதனை சோதிடச் சாத்திரமும் ஏற்கும். சோதிடச் சாத்திரத்தால் சொல்லப்பட்டிருக்கிற இராகு, கேதுகளை ஒன்றாக வைத்து அழிப்பது என்பது பிரம்மாவாலேயே முடியாது என்பது தோன்றுகிறது. அறிவாளிகள் முழுமையாய் கவனித்து ஆணைகளை (பிரமாணங்கள்) வெளியிட்டால் உலகிற்குப் பயனாகும். பல நாட்களாய் விளங்கி வரும் இராகு,

கேதுக்களில் இராகுவானவன் மறைப்பதாகவும் பிரமாண்ட புராணம், தேவீ புராணம், பாகவதம், மத்ஸ்யபுராணம், கூர்மபுராணம், சூர்யாருணஸம்வாதம், மகார்ணவம், சோதிட சாத்திரம் முதலான கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலங்கள் கொஞ்சம் இந்த கிரந்தத்தில் கூறியிருப்பதைக் காணலாம். ஆதலால் இராகுவின் தலையென்றாவது, நிழல் என்றாவது கேதுவை சிலர் கூறுவது கெடுதலாக முடிகிறது. கேதுவானவன் தலையானாலும், நிழலானாலும் இராகு ஆக முடியாது. இராகுவைக் காட்டிலும் வேறானவன். தலையில்லா உடல் வடிவாயும், நிழல் வடிவாயும் கேதுவை சொல்லிக் கொள்ளும் கிரகண நல்ல காலம் ஓரிடத்திலும் சொல்லவில்லை. தலையில்லா உடலுக்கோ, நிழலுக்கோ சேருகிற வலிமை இல்லை. கபந்தமெனில் தலையில்லாதது, சாயையெனில் உயிரற்றது.

ஆகையால் இராகு சேர்க்கை என்கிற உபராக நல்ல காலத்திற்கும், தலையில்லா உடம்பு, நிழல் ஆகிய இவற்றால் ஏற்படும் மறைவிற்கும் நெடுந்தூரம் உள்ளது. வடிவான இராகு சந்திரர், சூரியரைச் சேருகிறான். குளியல் தானம் போன்ற செயல்களை அப்போது செய்ய வேண்டுமென்று ஆணைகள் கூறுகின்றன. தலையற்ற நிழல் வடிவான கேது சந்திரர், சூரியரை மறைப்பதாக ஏற்பட்டாலும், அப்போது குளியல் தானம் போன்ற சடங்குகள் செய்ய வேண்டும் என்கிற ஆணை கிடையாது. ஆணை கிடைத்தால் சடங்கை கடைபிடிக்கலாம். நிழல் என்றும், தலை என்றும் கேதுவைக் கூறுவது ஆணை சாத்திரங்களுக்கு எதிரானவை ஆகும். கேது விப்ரசித்து ஸிம்ஹிகை புத்திரன் என்பதை ஸ்ரீமத் பாகவதத்தில் முன்பே காட்டியுள்ளது.

8-வது ஸ்கந்தம் 9-வது அத்தியாயத்தில் தேவர்கள் கூட்டத்தில் சுயதன்மையற்ற இராகு தேவ வேடத்தைப் போட்டுக் கொண்டு உள்ளே நுழைந்து, அவர்களுடன் கலந்து

அமுதத்தை உண்டான். இதனை சந்திரர், சூரியர் கண்டு வெளிப்படுத்தினர். அதனால் ஹரி தன் சக்கரத்தால் இராகுவின் தலையை அறுத்து விட்டார். உடல் கீழே விழுந்து விட்டது. தலை தேவத் தன்மை அடைந்து நவக்கிரகமாக ஆகிவிட்டது என்று கூறப்பட்டுள்ளது. எனவே தலை கேதுவல்ல. இராகுவைப் போல் கேதுவும் விப்ரசித்துவின் பிள்ளை என்பது நன்கு விளங்குகிறது.

பிரம்மபுராணம் 36-வது அத்தியாயத்தில் விஷ்ணுவானவர் அமுதம் செய்த அசுரன் தலையை அறுத்தார். தலை தேவனாகிவிட்டது. உடல் பூமியில் விழுந்தது. இரண்டும் ஒன்றையொன்று நாட முயன்றது. இதை கண்ணுற்ற தேவர்கள் இரண்டும் ஒன்றானால் நம்மை அழித்து விடும். ஆகையால் பூமியில் விழுந்த உடலை அழிக்க வேண்டுமென சிவனிடம் முறையிட்டனர். உடனே சிவன் சக்தியை அழைத்து ஆயுதம் தந்து அழிக்க அனுப்பினார். சக்தியும் சென்று உடலை பிடித்து அழித்தாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சோதிடச் சாத்திரத்தில், பல கிரந்தங்களில், பலப்படியாகக் கருத்து வேறுபாட்டால், விருப்பினால் கிரகணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கேதுவென்பானை நிழல் என்றும் உடல் என்றும் உடலில்லா தலையுடன் கூடின ஆண் மகனென்றும், நூறு, ஆயிரம் பேரென்றும் கூறப்பட்டிருப்பினும் இராகு வேறானவன். இப்படி கூறப்பட்டிருந்தாலும் வைதீகப் பிரமாண சாத்திரத்திற்கு எதிர்ப்பில்லாமலிருக்கிற பாகத்தை வினைப் பயன் செய்ய கடைபிடிக்க வேண்டும் என்பதை நாம் எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது.

ஸ்மிருதி முதலானவைகளில் இராகு கேதுக்கள் நவக்கிரகங்களுள் சேர்ந்தவர்களாகவும், இவர்களுள் இராகுவால் உண்டாகும் சந்திர, சூரிய கிரகணத்தை உபராக நல்ல காலமாகச் சொல்லியிருப்பதை எல்லோரும் தெரிந்து கொள்ளலாம். அப்படியில்லாது, சோதிடத்தில் எல்லா பாகத்தையும் கடைபிடிக்க நாம் ஒப்புக் கொண்டால், மன

மயக்கத்தால் கிரகணம் என்கிற கருத்தில் இராகுவை ஒப்புக் கொள்ளாமை ஏற்படும். அப்படியானால் ஸ்மிருதிகளில் கூறப்பட்டுள்ள இராகு கிரகணத்தை நாம் இழக்க நேரிடும். இது ஸ்மிருதிகளை நாம் இழந்துட விடுவதாகும். அதனால் ஏற்படும் கலக்கத்திற்கும் நாம் ஆளாவோம்.

ஆகையால் சுருதி, ஸ்மிருதி, தததுஸாரி கருத்துகளைத் தவிர நீதியை கடைபிடிக்கும் கருத்தில் நமக்கு வேறு வழியில்லை. இக்கருத்தை ஸ்மிருதி முதலானவைகளே சொல்லுகின்றன. வேதங்கள், ஸ்மிருதிகள், நீதியுடன் கூடிய கருத்துகள் ஆகியவை நீதியைக் கடைபிடித்தலில் ஆணையாகிறது. இவைகளை எவனொருவனுக்கு ஆணையாகத் தோன்றவில்லையோ அவன் எதையும் நம்பப் போவதில்லை. சுருதி, ஸ்மிருதி, ஸ்மிருதிகள், ஆகியன இவ்வுலகில் ஆணையாக விளங்குகின்றன. இந்த (பிரமாணத்தை) ஆணையை எவனொருவன் தனது புத்தியினால் அவமதிக்கிறானோ அவன் முனிவர்களால் தள்ளத் தகுந்தவனாகவும், நாத்திகனாகவும், வேதத்தை அவமதிக்கிறனாகவும் ஆகிறான். சுருதி, ஸ்மிருதி ஆகிய இவைகளுக்கு எதிராக ஒழுக்கம் ஏற்பட்டால் அவை நம்பத்தக்கதல்ல என்பதற்குப் பல ஆணைகள் இக்கிரந்த்திலேயே காட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

சோதிடச் சாத்திரங்களுக்கு கிரகணக் காலத்தைத் தெரியப்படுத்துகிற வலிமை போல் கிரகணத்திற்கு நல்ல காலம் பற்றித் தெரிவிக்கிற வலிமை சுருதி ஸ்மிருதிகளுக்குத் தான் உண்டு என்ற கருத்து நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்ட கருத்தாகும். பகலில் சந்திர கிரகணமும், இரவில் சூரிய கிரகணமும் ஏற்படினும், அக்காலங்களில் குளியல் தானம் போன்ற காரியங்கள் செய்யக் கூடாது என்பது நீதிச் சாத்திரத்தினால் அறிகிறோம். சோதிடச் சாத்திரத்தினால் இராகு, கேது கிரகணங்களைத் தெரிந்து கொண்டு, அவற்றில் எவை உபராக நல்ல காலமெனவும், குளியல் தானம் போன்றச்

செயல்கள் செய்யத் தகுந்ததென்றும் கூறும் நீதி சாத்திரத்தைப் புத்தியால் ஆய்ந்துப் பார்த்தால் இராகுவின் சேர்க்கையே நீதியைக் கடைபிடிக்க வேண்டியக் காலம் என்பதை நாம் எல்லோரும் முடிவு செய்யலாம். இக்கருத்தில் சாத்திரமில்லாது மனதால் கூறுவது நீதியாகாது. ஆதலால் சாத்திரமாகிற கண்ணை வைத்துக் கொண்டு கர்மானுஷ்டானம் செய்வதைக் கடைபிடிக்க வேண்டும்.

கிரகண தத்துவ விளக்கம் முற்றிற்று.

/சுபம்/

لئے دی گئی ہے کہ انسان اگر چاہے تو کل قیامت کے لئے اپنا انتظام کر لے۔ آج یہ بات بالکل انسان کے اپنے قبضے میں ہے کہ چاہے تو وہ آخرت کے لئے اچھا سرمایہ جمع کر لے اور چاہے تو اس مہلت کو یونہی غلط اور بے کار کاموں میں گنوا دے۔ آے یہ بالکل ممکن ہے کہ جو چاہے وہ اپنے آپ کو اللہ کی نعمتوں کا مستحق بنا لے اور اپنے رب کے حضور اونچے سے اونچے درجات حاصل کر لے لیکن کل جب عمل کی یہ مہلت ختم ہو جائے گی تو پھر پچھتانے سے کچھ نہ ہوگا' یہ تو اللہ کا کرم ہے اور اس کی رحمت ہے کہ اس نے کل پیش آنے والے خطرے سے اچھی طرح آگاہ کر دیا ہے اور اس ہدایت اور رہنمائی سے منہ موڑنے اور اسے قبول کرنے سے انکار کرنے کا جو انجام ہونے والا ہے اس سے اسے خبردار کر دیا ہے۔ اسے اس دن کی فکر کرنا چاہئے جب ہر انسان یہ دیکھے گا کہ دنیا میں اس نے جو کچھ کیا تھا آخرت میں وہ سب اس کی آنکھوں کے سامنے موجود ہے۔ اور یہاں اس نے جو کچھ کیا تھا وہ سب پہلے سے وہاں پہنچ چکا ہے۔ گویا اس نے اپنے ہاتھوں سے وہاں بھیج دیا ہے۔

اس دن انسان سخت پچھتانی اور پریشانی کا شکار ہوگا اور آج جو شخص اللہ کی بھیجی ہوئی رہنمائی کو قبول کرنے سے انکار کر رہا ہے وہ اس وقت کہے گا کہ کاش میں مٹی ہوتا۔ یعنی کاش مجھے دنیا میں اختیار اور عمل کی آزادی ہی نہ ملی ہوتی۔ اور میں اس امتحان میں نہ ڈالا گیا ہوتا ۔اس آیت کا دوسرا ترجمہ یہ ہوسکتا ہے کہ "کاش میں مٹی رہتا" یعنی مرنے کے بعد دوبارہ نہ اٹھایا گیا ہوتا اور اس طرح حساب وکتاب سے مجھے واسطہ نہ پڑتا۔ دونوں ترجموں کیا عتبار سے اس جملے میں ان تمام لوگوں کے لئے بڑی عبرت ہے جو یات واللہ کی بخشی ہوئی آزادی اور اختیار کو غلط استعمال کر رہے ہیں یا مرنے کے بعد حساب وکتاب کے منکر ہیں۔

ہے جو اس پوری کائنات کا مالک ہے جس کی بادشاہت آسمانوں سے لے کر زمین تک پھیلی ہوئی ہے اور کوئی ذرہ اس کی حکومت سے باہر نہیں۔ وہ سب کا رب ہے۔ وہ بڑا مہربان ہے اور بڑی طاقت والا ہے۔ کسی کی مجال نہیں کہ اس کے سامنے دم مار سکے۔ اس کی مرضی اا ورا سکے حکم کے بغیر کوئی کچھ نہیں کرا سکتا۔

۲۔ قیامت کے دن لوگوں کو ان کے اعمال کا جو بدلہ ملنے والا ہے اس کی طرف سے بے پروا کر دینے والا ایک عقیدہ عام طور پر خرابی کا سبب بنتا رہا ہے۔ اس عقیدے کی بنیاد وہ غلط تصور ہے جو کچھ ہستیوں کے بارے میں یہ مان لیا ہے کہ وہ قیامت کے دن اپنی سفارش سے ہماری بخشش کرا دیں گے۔ عام طور پر عقیدت مندی کی زیادتی اس غلط تصور کی بنیاد بنی ہے۔ جب کسی بزرگ، نبی یا فرشتے کے بارے میں غلط قسم کی عقیدت مندی نے دلوں میں جگہ پیدا کر لی تو انہیں خدا کے مقابلے میں ایسا با اختیار سمجھ لیا گیا کہ وہ جو چاہیں کرا سکتے ہیں۔ اس غلط عقیدے نے لوگوں کے ذہنوں سے آخرت کی جواب دہی کی اہمیت ہی کم کر دی۔ اب انہیں اعمال سے میادہ اس بات کی فکر پڑ گئی کہ وہ کسی نہ کسی طرح اپنے آپ کو کسی سفارش کر دینے والی ہستی سے ایسا وابستہ کر لیں کہ ان کا کام چل جائے۔ پھر اس طرح کسی ہستی سے وابستہ کر لینے کے لئے ذہن نے بہت سی آسان ترکیبیں سوچ لیں۔ اور وہ بھی ایسی کہ جن میں کچھ کرنا دھرنا پڑے۔ اس طرح غلط شفاعت کے عقیدے نے لوگوں کے ساذہنوں سے عمل کی اہمیت ک وکم کر دیا۔ شفاعت کی صحیح صورت اور صحیح عقیدہ نظروں سے او جھل ہو گیا۔

قرآن پاک می ں پچھ لی امتوں کی اس غلطی کو بار بار واضح کیا گیا ہے۔ اور بتایا گیا ہے کہ آخرت میں شفاعت کی صحیح صورت کیا ہوگی۔ یہ تصور کہ کوئی ہستی اللہ تعالیٰ کی جناب میں اسی زور آور ہے کہ جو چاہے کرا لے۔ اور جس کی طرف اشارہ کر دے اسے جنت مل ہی جا ئے۔ قطعاً غلط ہے۔ شفاعت کی صحیح صورت وہ ہے جو اس آیت میں اور اس کے علاوہ قرآن کیدوسرے مقامات پر بیان کی گئی ہے۔ اللہ تعالیٰ کے حضور بڑی سے بڑی ہستی بھی دم

مارنے کی قدرت نہیں رکھتی۔ اس کے سامنے صرف وہ بول سکے گا جسے وہ خود بولنے کی اجازت بخشے گا۔ اور پھر یہ بھی ممکن نہ ہوگا کہ اس اجازت کے بعد وہ جو چاہے کہے۔ بلکہ وہ صرف وہی بات کہہ سکے گا جو ٹھیک ہوگی۔ اور اللہ کو پسند ہوگی۔ اس اجازت کے ماتحت اس کی کوئی گنجائش نہ ہوگی کہ وہ اللہ تعالیٰ کے اُن مجرموں اور ان اغیوں کے لئے کوئی سفارش کر سکیں جو اللہ کے قانون اور انصاف کے تحت سزا ہی کے مستحق ہوں گے۔

ذٰلِکَ الْیَوْمُ الْحَقُّ   فَمَنْ شَآءَ اتَّخَذَ اِلٰی رَبِّہٖ مَاٰبًا   اِنَّآ اَنْذَرْ
نٰکُمْ عَذَابًا قَرِیْبًا   یَّوْمَ یَنْظُرُ الْمَرْءُ مَا قَدَّمَتْ یَدٰہُ وَ یَقُوْلُ
الْکٰفِرُ یٰلَیْتَنِیْ کُنْتُ تُرٰبًا

یہ دن آنا یقینی ہے تو جو چاہے وہ اپنے رب کے پاس ٹھکانا بنا لے۔ ہم نے تم کو اس عذاب سے جو جلد ہی آنے والا ہے خبردار کر دیا ہے۔ اُس دن ہر آدمی (ان اعمال کو) دیکھ لے گا جو اُس نے آگے بھیجے ہوں گے اس وقت کافر کہے گا کاش میں مٹی ہوتا۔

۱۔ کبھی انسان کا نفس اسے دھوکہ دیتا ہے کہ معلوم نہیں یہ آخرت کی پوچھ گچھ بھی ہوگی یا نہیں۔ دراصل یہی شبہ یا آخرت کی طرف سے غفلت انسان کی ساری بڑی بڑی خرابیوں کی جڑ ہے۔ انسان کے اصلاح کے لئے ضروری ہے کہ اُسے اس آخری جوابدہی کا یقین ہو اور قیامت کی تمام کیفیت اس کے سامنے رہے۔ چنانچہ یہ بتانے کے بعد کہ آخرت میں اللہ کے حضور کسی کو دَم مارنے کی طاقت نہ ہوگی۔ پورے زور کے ساتھ یہ کہا جا رہا ہے کہ یہ دن آنا یقینی ہے اس کی طرف سے کسی قسم کا شبہ دل میں نہ رہنا چاہئے۔

۲۔ قیامت کا آنا یقینی ہے اللہ کے سامنے ہر انسان کو اپنی پوری زندگی کا حساب دینا ہے اور اپنے اعمال کے لحاظ سے دائمی عیش یا دائمی مصیبت میں سے کسی ایک سے اسے واسطہ پڑنا ہے۔ یہ سچی اور یقینی بات انسان کو اس لئے بتا دی کہ وہ آج اپنی دنیاوی زندگی میں ایسا انتظام کر لے کہ کل اسے پریشانی اور پشیمانی نہ ہو یہاں عمل کی مہلت اور اختیار کی آزادی اسی

کہ دنیا کے یہ فائدے اور یہ لذتیں جن کی خاطر وہ انسانیت کی حدوں کو پھلانگ جاتا ہے۔۔ کس درجہ ناپائدار ہیں اور ان کی چمک دمک کیسی عارضی ہے۔ یہ سب چار دن کی چاندنی اور پھر اندھیری رات ہے۔ یہاں کا کوئی آرام حقیقی نہیں' ہر آرام کے ساتھ تکلیف لگی ہوئی ہے یہاں کا کوئی نفع مستقل نہیں۔ ہر فائدے کے ساتھ نقصان لگا ہوا ہے۔ پھر انسان ان چیزوں پر کیوں ریجھے؟........ اور ساتھ ہی یہ حقیقت اس کے سامنے رکھی جاتی ہے کہ یہ زندگی جس کے آرام اور عیش کی خاطر انسان غلط کام کرتا ہے اور ایسی حرکتیں کرتا ہے جو انسانیت کے نام پر دھبہ ہیں وہ کس قدر عارضی اور کتنی غیر یقینی ہے۔ اسے یہ بتایا جاتا ہے کہ اصل میں ہمیشہ رہنے والی زندگی وہ ہے جو اس عارضی زندگی کے بعد آئے گی۔ اور اس اعتبار سے اصل کیمیابی یہ ہے کہ انسان کو اس آنے والی زندگی میں فائدے حاصل ہوں اور وہ وہاں عیش اور آرام کا لطف اٹھا سکے۔ جو شخص یہاں ملنے والے مادّی فائدوں کی خاطر اللہ تعالیٰ کے احکام سے منہ موڑتا ہے اسے معلوم ہونا چاہئے اگر وہ یہاں تسویٰ کی زندگی گذارے گا تو اسے اس سدا رہنے والی زندگی میں یہاں سے کہیں بڑھ چڑھ کر فائدے حاصل ہوں گے۔ اور اگر وہ اس زندگی میں اللہ کی ناخوشی اور ناراضی کے ڈر سے گناہوں سے بچے گا اور غلط کاموں سے اپنا دامن پاک رکھے گا تو اسے اس ہمیشہ رہنے والی زندگی میں سے کہیں زیادہ بہتر عیش و آرام ملے گا۔

انسان آخر ان ہی چیزوں پر تو ریجھتا ہے اور ان ہی کی خاطر تو وہ حیوان بن جاتا ہے۔ مثلاً دنیاوی ساز و سامان' مال و دولت' باغ اور عیش و آرام وغیرہ وغیرہ لیکن اگر وہ یہاں جائز ناجائز کا خیال رکھے' حرام اور حلال کی حدوں کی پابندی کرے' اللہ کی مرضی اور خوشی کے لئے اپنے عیش و آرام کو تج دے تو اسے یقین رکھنا چاہئے کہ اللہ تعالیٰ اس کی ناقدری نہ فرمائے گا۔ بلکہ وہ اسے آخرت کی زندگی میں ان سے کہیں بہتر چیزوں سے نوازے گا۔ ان نعمتوں میں سے کچھ کا ذکر ان آیات میں بھی ہے۔

۳۔ جنت کی نعمتوں میں ایک خاص نعمت جس کا ذکر ان آیات میں ہے۔ یہ ہے کہ

وہاں نہ کوئی بیہودہ بات کانوں میں پڑے گی اور نہ جھوٹ سُننے کو ملے گا۔ جن لوگوں کی طبیعت پاکیزہ اور مذاق بلند ہے وہ اندازہ کر سکتے ہیں کہ یہ کیسی بڑی نعمت ہے۔ ایک پاکیزہ طبیعت اور خوش مذاق شخص کے لئے یہ بات سخت تکلیف دہ ہوتی ہے کہ اس کے کانوں میں گندی باتیں' گالیاں اور بیہودہ الفاظ پڑیں۔ جنت کی ایک نعمت یہ بھی ہوئی کہ وہاں اس قسم کی کوئی بات سننے کو نہ ملے گی۔ ان الفاظ کا ایک دوسرا مفہوم بھی ہو سکتا ہے۔ اور وہ یہ کہ مومن کی نظر میں سب سے بڑا ''لغو'' اور سب سے بڑا جھوٹ اللہ کا انکار اور اس کے رسولؐ کی نافرمانی ہے۔ مومن کو اس سے سخت تکلیف ہوتی ہے۔ اس لئے جنت کی لذتوں میں اللہ تعالیٰ نے اس کا بھی ذکر فرمایا ہے کہ وہاں یہ سب باتیں بالکل نہ ہوں گی اور مومن کو وہاں یہ تکلیف نہ پہنچے گی جو وہ آجتکرین کی لغو اور جھوٹی باتیں سن سن کر محسوس کرتا ہے۔

۴۔ ہر شخص کو آخرت کی زندگی میں جو بدلہ ملے گا وہ یوں تو اللہ تعالیٰ کی طرف سے ایک انعام ہوگا۔ لیکن یہ انعام اندھا دھند نہیں بانٹا جائے گا بلکہ وہ حساب سے دیا جائے گا۔ جس بندے نے جتنی نیکی کی ہوگی اسی کے اعتبار سے اسے صلہ اور انعام دیا جائے گا۔

رَبِّ السَّمٰوٰتِ وَ الْاَرْضِ وَ مَا بَیْنَهُمَا الرَّحْمٰنِ لَا یَمْلِكُوْنَ مِنْهُ خِطَا
بًا یَوْمَ یَقُوْمُ الرُّوْحُ وَ الْمَلٰٓئِكَةُ صَفًّا لَّا یَتَكَلَّمُوْنَ اِلَّا مَنْ اَذِنَ
لَهُ الرَّحْمٰنُ وَ قَالَ صَوَابًا

وہ رب ہے آسمانوں کا زمین کا اور ہر اُس چیز کا جو ان دونوں کے درمیان ہے۔ بڑا ہی مہربان۔ کسی کی یہق درت نہیں کہ اس سے بات کر سکے۔ جس دن روح الامین (جبرئیل علیہ السلام) اور دوسرے فرشتے شف باندھ کر کھڑے ہوں گے (قیامت کے دن) اُس دن اس کے حضور کوئی نہ بول سکے گا سوائے اس کے جسے وہی رحمان اجازت دے اور وہ بھی ٹھیک بات کہے۔

اُس ے پہلی آیت میں کہا گیا ہے کہ متقیوں کو ان کے رب کی طرف سے پورا پورا بدلہ ملے گا اور وہ رب جو انہیں ان کی کوششوں کے موافق بدلہ دینے کا وعدہ فرما رہا ہے۔ وہ

بلاشبہ کامیابی متقیوں ہی کے لئے ہے (جنت میں ان کے لئے) باغات، انگور، ہم عمر نوجوان عورتیں اور چھلکتے ہوئے پیالے ہوں گے۔ وہاں وہ کوئی بیہودہ اور جھوٹ بات نہ سنیں گے۔ (یہ سب کچھ تمہارے رب کی طرف سے انعام ہوگا حساب سے (ان کے اعمال کے مطابق)

